Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර

நவ. 26 - டிச. 02, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 384

## தேர்தல் பெறுபேறுகளின் பின்

## தமிழ்க் கட்சிகளின் உள்ளோட்டங்கள்



## ஊசி போட்டு உப்ப வைத்த அம்மா

## பச்சை குத்தும் ஃபாஷன்

# முரசம்

## நிபந்தனைகள்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பேச்சுவார்த்தைகளுக்கான
பேச்சுவார்த்தைகளை நடத்திய
நோர்வே தூதுக்குழு
புலிகள்
பேச்சுவார்த்தைகளுக்குத்
தயாரென்பதை அறிவித்து விட்டார்கள்.

அரசாங்கம் இப்
பேச்சுவார்த்தைகள் குறித்து
என்ன நிலைப்பாட்டில்
உள்ளதென்பதையே இன்று
சகல அரசியல் அவதானிகளும்
எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நோர்வே தூதுக்குழு
புலிகளுடன் நடத்திய
இந்தப் பேச்சுவார்த்தை
இதுவரை நடந்துவந்த
புலிகள் பிரதிநிதிகளுடனான
பேச்சுவார்த்தைகள் யாவற்றிலும்
அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

காரணம் இப் பேச்சுவார்த்தைக்காக
புலிகளின் தலைமைப்பீடம் அமைந்துள்ள
முல்லைத்தீவுக்கு
நோர்வே தூதுக்குழுவினர்
நேரடியாகச் சென்று
புலிகளின் தலைவர்
வேலுப்பிள்ளை பிரபாகரனுடனேயே
நேரடியாகப் பேசியுள்ளனர்.

அதனால்,
இப்பேச்சுவார்த்தையில்
புலிகளின் அறுதியான நிலைப்பாட்டை
பிரதிநிதிகளூடாக அன்றி
நேரடியாகவே
மத்தியஸ்தம் வகிப்பவர்கள்
பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இதன்போது
புலிகளின் தலைவர் பிரபாகரன்
பேச்சுவார்த்தைக்கு
எவ்வித நிபந்தனையும்
விதிக்கவில்லையென
தூதுக்குழுவின் தலைவர்
வெளிப்படையாகக் கூறியுள்ளார்.
இதன் பின்னரும்
அரசாங்கத் தரப்பில்
எந்தவொரு சாதகமான கருத்தும்
வெளிப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிக்கா தனது
பாராளுமன்ற அங்குரார்ப்பண உரையில்
பேச்சுவார்த்தைக்கு
சில நிபந்தனைகள்
விதிக்கப்பட்டுள்ளதாகவும்
அவை யாவையென தெளிவுபடுத்தப்பட்டதும்
அவை குறித்து ஆராய்ந்துகொண்டே
பேச்சுவார்த்தை குறித்து
தமது நிலைப்பாட்டைத்
தெரியப்படுத்தலாமெனக்
கூறியுள்ளார்.

இவர் குறிப்பிட்ட நிபந்தனைகள்
என்னவென்பதும், அவை
புலிகளால் விதிக்கப்பட்டவையா
அல்லது பேச்சுவார்த்தைகள்
எப்படி நடத்தப்பட வேண்டுமென்று
நோர்வே மத்தியஸ்தர்களால்
விதிக்கப்பட்டவையா என்பது
தெளிவுபடுத்தப் படவில்லை.

இதேவேளை,
புலிகளின் தலைவர் பிரபாகரனால்
நோர்வே தூதுக்குழுவிடம்
நிபந்தனைகள் எதுவும்
கூறப்படாவிட்டாலும்
புலிகளின் இலண்டன் தலைமையகத்தால்
சில நிபந்தனைகள்
வெளிவிடபட்டுள்ளனவென
வேறுசில வட்டாரங்கள்
கருத்துத் தெரிவிக்கின்றன.

இவைகுறித்த மயக்கங்களைத்
தெளிவுபடுத்தி
பேச்சுவார்த்தைக்கான
சூழலை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு
மத்தியஸ்தர்களான
நோர்வே அரசாங்கத்தின் கையிலேயே
தங்கியுள்ளது.

புலிகளின் நிபந்தனைகள் பற்றி
தெளிவான முடிவுகள் தெரிய முன்னரே
இலங்கை அரசாங்கம்
அவ்வகை நிபந்தனைகளுக்குத்
தடைவிதிக்கும் முன் நிபந்தனைகளை
முன்வைத்துள்ளது.

அதாவது,
ஜனாதிபதியின் பாராளுமன்ற
அங்குரார்ப்பண உரையில்
பொருட்களுக்கான கட்டுப்பாட்டை நீக்குதல்,
உணவுகளை அனுப்புதல் போன்ற
நிபந்தனைகளை
புலிகள் விதிக்கக் கூடாதெனவும்
அவர்கள் உறுதியான அரசியல் விடயங்கள்
பற்றியே பேசவேண்டுமென்றும்
முன்நிபந்தனை தெரிவித்துள்ளார்.

மேலும் சில அரசாங்க வட்டாரங்கள்
யுத்த நிறுத்தமின்றியே
பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமெனத்
தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத் தலைமைப் பீடமும்
யுத்த நிறுத்தத்துக்கு
உடன்படலாகாதெனத் தெரிவிக்கின்றது.
இத்தகைய நிலையில்,
பிரபாகரன் நேரடியாகப் பேசுமளவுக்கு
முன்னேற்றம் கண்ட
இப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள்,
நிபந்தனைகள் பற்றிய குழப்பங்களாலும்
நிபந்தனை என்று கூறாமல் விதிக்கப்படும்
நிபந்தனைகளாலும்,
நிபந்தனைகளைத் தடைசெய்யும்
நிபந்தனைகளாலும்
தடைப்பட்டுவிடுமோ என்ற
அச்சம் தலைதூக்கியுள்ளது.

இத் தடைகளை ஒதுக்கி
இலங்கை இனப்பிரச்சனையில்
பேச்சுவார்தைகளை
ஆரம்பிக்கக்கூடிய திறமை உள்ளதாவென்பது
உலகின் பல அரசியல் பிணக்குகளுக்கு
மத்தியஸ்தம் வகித்த அனுபவம் வாய்ந்த
நோர்வே அரசுக்கு
ஏற்பட்டிருக்கும் ஒரு பெருத்த சவாலாகும்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்



## சனிப் பிரதோஷம்

திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதனின்றும் வெளிப்பட்ட கொடிய ஆலகால விஷத்தையுண்ட சிவபெருமான் எல்லா உயிர்களிடத்தும் உயிருக்குயிராக தாமே இருப்பதால், தான் உண்ட விஷம் காரணமாகப் பிறவுயிர்கள் துன்பம் அடையக் கூடாது என்னும் கருணையினால், சிவபெருமான் சிறிது நேரம் அசைவற்று மௌனியாக அறிதுயிலில் இருந்த நாளே 'ஏகாதசி'. இதைக் கண்ட தேவர்கள் அஞ்சி, அன்று முழுவதும் உண்ணாவிரதமிருந்து சிவனை வழிபட்டனர்.

மறுநாள் துவாதசியன்று தங்கள் விரதத்தை முடித்து உணவு உட்கொண்டனர். அவர்களுக்கு அருள் செய்யவும், இதுவரையில் துன்பத்திலிருந்து வந்த உயிர்கள் எல்லாம் இன்பம் அடையவும் வேண்டி சிவபெருமான் மறுநாளாகிய திரயோதசியன்று கயிலாயத்தில் மாலை வேளையில், சந்தியாகாலத்தில் தம் திருக்கரத்தில் டமருகம் ஏந்தி சூலத்தைச் சுற்றி ரிஷப (இடப) தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் ஒரு யாமம் நடனம் ஆடியருளினார். இக்காலம் தான் பிரதோஷ காலம்.

இறைவன் நஞ்சுண்ட நாள் சனிக்கிழமை ஆதலால் மற்ற நாட்களை விட சனிக்கிழமைகளில் வரும் 'பிரதோஷம்' (சனிப்பிரதோஷம்) மிகச் சிறப்புடையது.

ர். குணவர்த்தனா-களுவாஞ்சிக்குடி

## குர் ஆனுடைய மகத்துவம்

"உங்களுக்குப் (போதுமான) நல்லுபதேசங்கள் உள்ள வேதத்தையே நிச்சயமாக நாம் உங்களுக்கு அருளி இருக்கின்றோம். (இனியாவது) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?")

(அல்குர் ஆன் 21:10)

முஃமினானவர்களுக்கு குர்ஆனும் ஹதீஸும் இரண்டு கண்களைப் போன்றவை. இவ்விரண்டின் அடிப்படையிலேயே இஸ்லாம் இயங்குகிறது. குர்ஆன் உயிரென்றால் ஹதீஸ் உடலாகும். இவ்விரண்டையும் கற்று அதன் படி நடப்பவரே உண்மை முஸ்லிமாவார்கள்.

குர்ஆன் உயிரின் உயிர். எவர் குர்ஆனைப் படிக்கத் தவறிவிட்டாரோ அவர் உயிரையோ தவறவிட்டவர் போலாவார். நீங்கள் பக்குவம் அடையும் வரையும் குர்ஆன் உங்களிடம் தங்காது. அதைப் படிப்பதற்கு உண்மை, அல்லாஹ் மீது பயம், மறுவுலகப் பிரியம் ஆகியவைகள் வேண்டும் அவைகளே உங்களைப் பக்குவப்படுத்தும்.

வாழையூர் வை.எல்.எம்.றிஸ்வி.

## காத்திருப்பதின் பலன்

"கர்த்தருக்கு காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமானதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு" சங்கீதம் 27:14.


இன்று நாம் உலகத்தில் ஒரு காரியத்தை பெற்றுக் கொள்ள வருடக் கணக்காக மாதக்கணக்காக நாட்கணக்காக காத்திருக்கிறோம். சில வேளைகளில் அக் காரியம் கை கூடாமலும் போவதுண்டு. இது நிமித்தம் ஏமாற்றம் ஏற்பட்டு விரக்தியுடன் வாழ்கிறோம்.

ஆனால் ஆண்டவரின் பாதத்தில் நாம் காத்திருப்பது நமக்கு அதிக பலனையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்தும். வேதத்திலே யோபு என்ற பக்தன் தனது சொத்து சுகங்களையெல்லாம் இழந்து மிக துன்பத்துடன் வாழ்ந்த போதும் தனது வாயின் வார்த்தையினாலாவது கர்த்தருக்கு விரோதமாக பேசாது காத்திருந்தார். (யோபு 2:10) அதன் பலனாக அவர் தனது வாழ்வில் இழந்தவைகளையெல்லாம் பன்மடங்கு பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார். (யோபு 42:12)

ஆதலால் நாமும் சகல இக்கட்டான நேரத்திலும் பொறுமையுடன் கர்த்தரிடத்தில் காத்திருந்து பன்மடங்கு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

சகோ. டேவிட் எஸ்.சந்திரதாஸ்-நாவலப்பிட்டி.

## கவிதைப் போட்டி இல.384



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.12.2000

கவிதைப் போட்டி இல.384
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



## கவிதைப் போட்டி இல.381

### பரிசுக்குரிய கவிதை

### உயிரைத்தவிர

உணவிழந்து உடையிழந்து
உறைவிடமிழந்து உறவுகளையிழந்து
உரிமையிழந்து உணர்ச்சியிழந்து
இனி இழப்பதற்கொன்றுமில்லை
உடலில் ஒட்டியிருக்கும் உயிரைத் தவிர.....!

மெ. மரியதாஸ்-பண்டாரவளை.

### யாருமில்லை...!

உண்ண உணவில்லை
உடுத்த உடையில்லை
உறைவிடமும் எமக்கில்லை
உதவி செய்வார் யாருமில்லை
உரிமைகளை வென்றெடுக்க
உலகம் தான் ஒத்துழைக்குமா?

எம்.ஐ.எம். ஷாபி-அக்குறணை.

### குனிந்தது போதும்!

வன்னி குழந்தைகள் தான்-எங்களுக்காக
யாரும் அனுதாபப் படவேண்டாம்!
குட்டக்குட்டக் குனிந்தது போதும் என்று
எழுந்து விட்டோம் இனி
நாளை எமதே!

பிரசாந்தி குமாரவேல்பிள்ளை-மாத்தளை.

### புரியவில்லை!

பிந்துனுவெவ முகாம்
புனர் வாழ்வு பெறுவதற்கா?
இல்லாவிடில்
புதைகுழியில் போவதற்கா?

சி.சசிதரன்-கொழும்பு 13.

### யுத்தம்

முட்டி மோதி-நொந்த
பிஞ்சு நெஞ்சிது-மீண்டும்
மோதலா....? வேண்டாம்!
மிஞ்சியது நாம் மட்டுமே!

யோ. நிருத்பவான்-மட்டக்களப்பு.

### 'கண்ணீர் குடம்'

விலங்கிட்ட பிள்ளை குட்டி
சொந்த பந்தம் தான் நினைந்து
கலங்கிட்ட,
கண்ணீர்க் குடங்கள் இவை.

கே. தங்கராஜா-சீனக்குடா.

### போர் கோலம்

எதிர் கால வளரும் பயிர்கள்
வாழ்விழந்து வதங்கி
வழியறியாது திசை மாறி
ஏங்கி வாடும் நிலையில்
வந்து நிற்கும் இவர்கள்
தமிழ் மொழி
தங்கங்கள் அல்லவா?

அ.அனிற்றா-யாழ்ப்பாணம்.

### எதிர்பார்ப்பு

நிபந்தனைகளை விட்டு
நீந்தி வருவோம்...!
முடிவுறா பிரச்சனைக்கு
இப்பால்முகங்களுக்காக.

மு.மு.மு.இஸ்மித்-கிண்ணியா 03.

### சமாதானப் பார்வை

யுத்தக் கொடுமையின் ஏக்கத்தில் தவிக்கும்
எண்ணிலடங்கா பிஞ்சு நெஞ்சங்கள்
சமாதான வெண்புறாவின் வருகையை எதிர்
பார்த்து,
வழிமேல் விழிவைத்து காத்து நிற்கின்றனர்!

ப.சங்கரி-தம்பிலுவில் 02.

### தொலைந்த முகவரிகள்

தொலைந்த முகவரியை,
தேடப் புறப்படும் இளந்தளிர்களே!
நாளை விடியலின் விழுதுகள் நீங்கள்!

ம. நாகேஸ்வரி-மட்டுவில்.

### அகதிகள்

அண்ணா....!
எங்களையும்
சேர்த்துக் கொள்ளுங்கள்
நாங்களும்
அகதிகள் தான்!

எம்.எம்.ச.'.பீர்-புத்தளம்.

### மரணப்பிடியில்

பிறப்பதோ தாயின் வயிற்றில்
இறப்பதோ தோட்டா முனையில்
தமிழன் வாழ்வது மரணப்பிடியில்
சிக்கி விட்டோர் பல பேர் உண்டு
அதில் நானும் ஒருவன்!

பி.ரமேஷ்-அக்கரைப்பற்று 08.

### எதிர் காலம்

இளம் மொட்டுக்கள்
இங்கு வாட்டமுற்று
இருப்பதன் காரணம்...?
இனியும் நமக்கோர்
எதிர் காலம் உண்டோ என்று தானே?

எஸ்.மனோ-ஆள்கிறனோயா.

# வாசக[ர்]சாலை

அன்பின் முரசே!
கலைக் களஞ்சியமே,
உன் கலையில் குறையில்லை
உன் கலையில் கட்டுண்ட
கவிதை கலைஞன் நான்
கவிதைப் போட்டிக்கு
வரைந்த கவிதை பல
காலம் தாழ்த்தியே
கிடைக்கிறது உம் கையில்,
நான் அறியேன்
இதற்கோர் விடைகிடைக்க
செய்திடுவாய் மிக விரைவில்
வாழ்க உம் பணி
வளர்க உம் கலை!

ஜோன்சன்-ஊர்காவற்றுறை.

என் இனிய முரசே!
அழகுச் சுடர் விரியும்
ராதை பளிங்குப் பாறையி
லிருந்து எழுந்து மரகதப்
புட் கம்பளத்திலே
மெல்லடி வைத்து
நடந்து செல்லும்
போது சந்திர
காந்தம் ஒளி
விடுவதைப் போல
முரசே நீ வார
மொருமுறை வீர
நடை போட்டு
வந்து வாசகர்
மனதில் மெல்லடி
வைத்து ஒளிப்
பிரகாசமாய்
ஒளிர்கின்றாய்.

எம்.ஐ.ரஸ்மி-வெலிகந்த.

### நன்றி

ஐயா!

தினமுரசு 372ல் கவிதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகள் பிரசுரமாகி இருந்தன. அதில் எனது கவிதையும் இருக்கக்கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன். எனக்கு இவ்வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், ஸ்தாபனத்திற்கும் எனது பேரன்பு மிக்க நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சு.இரத்தினம்-அக்கரைப்பற்று-07.

மதிப்பிற்குரிய முரசுக்கு!

வாரந்தோறும் நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் ஜி.. ஜி.. ஜில்! அதிலும் இளசுகளின் இதயத்தைக் கவ்வும் தேன்கிண்ணத்தில் கிண்ணியா ஏ.நஸ்புள்ளா வரைந்திருந்த 'குப்புற விழும் ஞாபகங்கள்' கவிதை என் இதயத்தை கவ்வியது.

எம். தமயந்தி-நிலாவெளி.

தேர்தல் காலங்களில் இனவாதிகளினதும் மதவாதிகளினதும் வாக்குகளை பெறுவதற்காக யுத்த நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது அரசின் கைவந்த கலையாகிவிட்டது. இவர்களின் சுய நலத்திற்கான இத் தந்திரோபாய முறைகள் அப்பாவி பொதுமக்களையும் இராணுவத்தினரையும் அல்லவா பலிகடாவாக்குகின்றார்கள்?

ஆ.சி.சம்பத் வழங்கும் 'கலைஉலகில் கருணாநிதி' எனும் தொடர் கட்டுரை முதல் வாரத்திலே அசத்தல். அண்ணாதுரைக்கும், இளங்கோவனுக்கும் பின்பு வந்த மு.க. அவர்கள் இன்றுவரை சினிமாவிலும் சரி அரசியலிலும் சரி, நிலைத்து இருக்கின்றார் என்றால் அவரின் வசனமும் தமிழ் மீது கொண்டுள்ள பற்றும் என்பது மிகையாகாது.

பி.ரெ.அசோக்குமார்-டிக்கோயா.

பிரியமான முரசே!



வாராந்தம் நீ சுமந்துவரும் அம்சங்கள் சுவாரசியமானதும், மிகவும் சுவையானதாகவும் உள்ளன. ஒரு வார நிகழ்வுகளை சுடச்சுட எமக்கு தொகுப்பாக வழங்கும் உனது சேவையை பாராட்டத்தான் வேண்டும். உன்னைக் காண ஒரு வாரம் தவறிவிட்டாலும் ஏங்கும் நெஞ்சங்களோ பல உள்ளன. உன்னம்சங்களில் 'கவிதைகள்', 'அரசியல் கட்டுரைகள்', 'சிந்தியா கேள்வி பதில்கள்', 'சிறுகதைகள்', 'தகவல் பெட்டி', 'லேடீஸ் ஸ்பெஷல்' போன்ற பல்வேறு தகவல்களும் சூப்பர். நீ மென்மேலும் வளமுடன் வாழவும் வளர்ச்சியடையவும் என் அன்பான நல் வாழ்த்துக்கள்.

எஸ்.சாந்தரூபிணி-உக்குவளை.

தித்திக்கும் தினமுரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. உன் போன்ற பத்திரிகை இந்த பூமியில் எங்கு தேடினாலும் கிடைக்காது. மிக அருமையிலும் அருமை. தமிழ் பேசும் அனைத்து மக்களின் மனங்களிலும் இடம்பிடித்த தனியான பத்திரிகை தினமுரசு. தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் அனைத்தையும் தெட்டத் தெளிவாக உலக அரங்கிற்கு எடுத்துக் கூறும் உனக்கு தமிழ் பேசும் மக்களாகிய வன்னி பெருநிலப்பரப்பு மக்களின் சார்பில் இல்லாத தனி தினமுரசுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

என். ஊரவன்-கிளிநொச்சி.

### இரும்புப் பொருள்?

பிரியமுள்ள என் முரசுக்கு,

உன்னை வித்திட்டு வளர்த்துச் சென்ற ஆசிரியர் அமரர் நடராஜா அற்புதராஜா அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்று வருடம் ஒன்றானாலும் அன்னாரின் மரணதுயரங்களில் இருந்து நீங்காத அன்னாரது குடும்பத்தினர் மற்றும் உன் பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்கும் என் ஓராண்டு கண்ணீர் அஞ்சலி.

ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி எஸ்.டி.சிவநாயகம் தொடர் ஒவ்வொரு வாரமும் வீறு நடை போடுகின்றது. இக் கட்டுரையில், மட்டு நகர் துரைராஜா அவர்களால் அப்போது விமானத்தின் பகுதி போன்ற ஓர் இரும்புப் பொருள் வாங்கப் பட்டதாக குறிப்பிட்டிருந்தார். அப் பொருள் தற்பொழுதும் மட்டுநகரில் உள்ளதா என்பதை ஆசிரியர் அவர்கள் தயவுடன் கூறுவாரா?

அல்வையூர் காந்தி அருணாசலம் எழுதிய 'எல்லைக்கோடு' சிறுகதை 380ம் முரசில் படித்ததும் கமலின் தெனாலியை மீண்டும் ஒரு முறை பார்த்தது போன்ற உணர்வு ஆசிரியரின் வசனங்களால் ஏற்பட்டது. நன்றி.

எம். முகம்மட் ஜலீஸ்-சவூதி அரேபியா.

'குட்டி விமானம் போன்ற அமைப்புடன் கூடிய அப்பொருள் எங்கோ மறைந்து விட்டது', என்று தொடரின் கர்த்தா தெரிவிக்கிறார்.

-ஆசிரியர்-

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# படையினர்-புலிகள் பயங்கர மோதலில்

# பொதுமக்கள் படும் பெரும் துன்பங்கள்!

## போர் தொடருமென படைஅதிகாரி அறிவிப்பு

'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடாத்தப்படும்' என்று அந்தக் காலத்தில் மேடை நாடகங்களுக்கு விளம்பரம் தரும் துண்டுப்பிரசுரங்களில் அச்சிடப்பட்டிருக்கும். யாழ் குடாநாட்டில் இன்று தொடர்ந்து நடைபெறும் இராணுவ நடவடிக்கை இதனையே நினைவுக்குக் கொண்டு வருகிறது.

இராணுவத்திற்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும்.

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேசத்தை முழுமையாக தன் வசமாக்கிக் கொள்வதற்கு இராணுவமும், இத்தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதலை நடத்திவரும் விடுதலைப் புலிகளும் மோதிக் கொள்வதால் அன்றாடம் மனித உயிர்கள் கணிசமானளவு இழக்கப்படுகின்றன. பருவகால அடைமழை விடாது பெய்து இயற்கை அநர்த்தங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்ற இதேவேளை தான் இந்த மோதல்களும் நடைபெற்ற வண்ணமுள்ளன.

மட்டுவில் தெற்கு மற்றும் நுணாவில் வடகிழக்குப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. படையினர் தாம் கைப்பற்றியுள்ள பிரதேசங்களை பலப்படுத்தவதி தொடர்ந்து முன்னேறிச் செல்லவும் கனரக ஆயுதங்களை வெகுவாக பாவித்து வருகின்றன. விமானக் குண்டு வீச்சுக்களும் சரமாரியாக இடம்பெறுவதாக வடக்கேயிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் போர் நிறுத்தமொன்று ஏற்படுவதை தாம் விரும்பப் போவதில்லை என்று இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து பெரும் பாலான பொது மக்கள் ஏற்கனவே வெளியேறியிருப்பதனால் இப்பொழுது இடம்பெறும் மோதல்களில் பொதுமக்களுக்கு பெருமளவு பாதிப்புகள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் மோதல்களினால் இடம் பெயரும் மக்கள் படும் துயரம் வார்த்தைகளால் வர்ணிக்கக்கூடிய ஒன்றல்ல. பல மாதங்களுக்கு முன்னரே இடம்பெயர்ந்த மக்கள் பரவலாக பல இடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். மென்மேலும் தங்களுடைய சொந்த இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி அலையும் மக்கள், ஏற்கனவே நிரம்பி வழியும் இடங்களைத் தேடிச் சென்று ஏமாற்றமடைகின்றனர். கொட்டும் மழையிலும் வெள்ளத்திலும் எண்ணற்ற கொடுமைகளை அவர்கள் தாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

இவ்வாறு இடம்பெயரும் மக்கள், தங்களுடன் தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய உடமைகளையும் எடுத்துச் செல்ல முடியாது தவிக்கின்றனர்.

தொழிலுக்குச் செல்ல முடியாது, தோட்டம் துரவுகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட முடியாது; கடலில் சென்று மீன்பிடித்து தொழில் புரிவோரும் கடலுக்குச் செல்ல முடியாது. மொத்தத்தில் ஒருவித வருமானமும் பெற முடியாத நிலையில் மக்கள் பரிதவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அல்லலுறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு சிறிய அளவிலாவது உதவிகளைச் செய்ய அரச அலுவலர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட தங்களையும் மீறி புரிந்துவரும் உதவிகளையிட்டு ஓரளவாவது நிம்மதியடைய முடிகிறது என்று பார்வையாளர்கள் பெருமூச்செறிகின்றனர். ■

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உடன் நிவாரணம் வழங்க வேண்டுமென்று அமைச்சர் கோரிக்கை!

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொல நறுவை மாவட்டங்களில் தொடர்ந்து பல நாட்கள் பெய்து வரும் பெருமழை காரண மாக எங்கும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. பெரும்போக நெல் விளைச்சலுக்காக விதைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் யாவும் நீரில் மூழ்கி விட்டன.

முக்கியமான தெருக்கள் பல நீரில் மூழ்கிக்கிடப்பதனால் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. அலுவலகங்களில் பணி புரிவோர் அவ்விடங்களுக்குச் செல்ல முடியா மையினால் அரச பணிகள் எதுவும் நடை பெறவில்லை. பள்ளிக் கூடங்களில் பாடங்கள் நடைபெறவில்லை.

சுருக்கமாகச் சொல்லப்போனால், கடந்த சில நாட்களாக, முக்கியமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் நகரங்களிலும் பல கிராமங்களிலும் அன்றாட இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்து விட்டது.

ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் பொதுக்கூடங்களிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தஞ்சமடைந்திருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் சமைத்த உணவும் உலர் உணவு வகைகளும் விநியோகிப்பதில் அரசாங்க அதிபர்கள் தலைமையில் பிரதேசச் செயலாளர்களும் ஏனைய அரச ஊழியர்களும் இடையறாது பணிபுரிந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு, வடக்கு புனர்வாழ்வு, தமிழர் விவகார அமைச்சர் திரு.டக்ளஸ் தேவானந்தா, சமூகசேவைகள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ●

## ஊர்காவற்றுறை நீர் விநியோகம்?

(யாழ் நிருபர்)

ஊர்காவற்றுறை வாழ் மக்கள் 1990ம் ஆண்டு வன்முறைகளின் போது இடம் பெயர்ந்து, மீண்டும் 1996ம் ஆண்டுப் பகுதியில் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றார்கள். இவர்களின் குடிநீர் பிரச்சனையைக் கருத்தில் கொண்ட ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் இம்மக்களுக்கான நீர் விநியோகத்திற்குரிய ஏற்பாட்டினைச் செய்து முடித்துள்ளனர்.

தற்போது அப்பகுதிக்குரிய அரசாங்க நீர் வடிகால் திணைக்கள உத்தியோகத்தினர் வீதிகளில் ஆங்காங்கே அமைத்துள்ள குழாய்களைச் சூழவுள்ள பொதுமக்களிடம் இருந்து, அதாவது ஒவ்வொரு குழாய்ப் பாவனையா ளர்களிடமிருந்து மாதாந்தம் ரூபா 450/- செலுத்தும்படி வற்புறுத்துகின்றனர். இது பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனத்தை எற்படுத்தியுள்ளது. இதற்கான ஒரு முறையை அனுசரித்து ஊர்காவற்றுறை பிரதேசசபை பழைய முறைப்படி நீர் வரியை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்பது பொது மக்களின் எண்ணமாகும்.

ஏனைய மாவட்டங்களில் நீர் விநியோகத்திற்கு நீர் வடிகால் திணைக்களத்திற்கு பணம் வழங்கப்படுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மிகவும் வறுமைக் கோட்டில் வாழும் குடும்பங்கள் தூர இடங்களுக்கே குடிநீருக்காக சென்று வருவதை அவதானிக்க முடிகின்றது. இதனை மிகவும் கரிசனையுடன் ஊர்காவற்றுறை பிரதேச சபை கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பார்களா? ■

## பிஸ்டல் குழுவினர் பொலிசாரைத் தாக்கினர்

(யாழ் நிருபர்)

யாழ் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'சைனீஸ்' ஹோட்டலுக்கு வந்த பொலிசார் மீது பிஸ்ரல் குழு 20.11.2000 அன்று பி.ப. 3.45 மணியளவில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் பொலிஸ்காரர் ஒருவர் இறந்ததுடன் இருவர் காயமடைந்தனர். காயமடைந்த பொலிஸார் எதிர்த்தாக்குதல் நடாத்தியதில் கார்ச்சாரதியான எஸ்.முரளிதரன் (வயது 23) 'சிவப்பிரகாசம் வீதி, தும்பளை' என்பவர் உயிரிழந்தார்.

மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஜெ.ஜெகமோகன் தனது காயத்துக்கு மருந்துகட்டிவிட்டு வீடு சென்றுள்ளார். க.செல்வராசா யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து கஸ்தூரியார் வீதி, சாந்தி விலாஸ், ஊழியர்கள், ஐந்து பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். ●

## இஸ்லாம் மார்க்க வினாத்தாள்களில் குளறுபடி?

(மன்னார் நிருபர்)

மன்னார் வலய மட்டத்தில் நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சையில் இஸ்லாம் பாட வினாத்தாள்கள் அனைத்துமே பல்வேறு குளறுபடிகளைக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சகல வினாத்தாள்களிலும் எழுத்துப் பிழை, அச்சுப்பிழை, வசனப்பிழை என்பன ஏகப்பட்ட அளவில் காணப்பட்டதுடன், வினாக்களின் தரம் மிகவும் குறைந்து காணப்பட்டது.

ஏனைய பாட வினாத்தாள் தயாரிக்கும் பணியை வலய பரீட்சை சபை முறைப்படி செய்த போதிலும், இஸ்லாம் பாட வினாத்தாள் தயாரிப்பில் பரீட்சை சபை பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

வினாக்களில் அதிகமாக அரபுச் சொற்கள் காணப்பட்டமை பொருத்தமற்ற புள்ளியிடல் திட்டம் முறைப்படி ஒப்பு நோக்காமை போன்ற பல குறைபாடுகள் காணப்பட்டதால் பரீட்சார்த்திகள் திணற வேண்டிய நிலை ஏற்பட்டது.

வினாத்தாள் தயாரிப்பில் முன் அனுபவம் இல்லாத ஒருவர் மூலமே சகல வினாத்தாள்களும் தயாரிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. இதன் மூலம் வினாத்தாள் தயாரிக்கும் விதிமுறை மீறப்பட்டுள்ளதுடன் தன்னிச்சையான செயற்பாடு தெளிவாகாகக் காணப்படுகிறது.

இது விடயத்தில் வலய பரீட்சைச் சபையின் தலைவரும் கல்விப்பணிப்பாளருமான எம்.ஆபேல் றெவ்வல் கடும் நடவடிக்கை எடுப்பதுடன் இனியும் இவ்வாறான திட்டமிட்ட தவறுகள் நடைபெறாமல் தடுக்குமாறு மன்னார் மாவட்ட முஸ்லிம் மாணவர் அமைப்பு கோரியுள்ளது. ●

## பாராளுமன்றம் கூடும் நாட்களில் தமிழ் மக்கள் மீது அதிகரிக்கும் கெடுபிடி!

பாராளுமன்றம் கூடும் நாட்களில் பாதுகாப்புக் காரணங்களைக் கருதி தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதால் தமிழ் மக்கள் வெளியில் நடமாட முடியாத நிலை தோன்றியுள்ளது.

கொழும்பு-தலங்கம பொலிஸ் நிலையம் உட்பட பாராளுமன்றச் சுற்று வட்டாரத்தில் காணப்படும் தமிழ் பேசுவோர் யாராயினும் உடனடியாகப் பொலிஸ் நிலையம் கூட்டிச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்கள். அத்துடன் அவர்களது சகல விவரங்களும் பெறப்பட்டு அவர்களது கைரேகை விரல் அடையாளங்கள் பெறப்படுகின்றன.

பாராளுமன்ற நாட்களிலேயே தமிழர்களின் கைரேகை விரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும் விசாரணைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் வேலைப்பளு கூடியுள்ளதாக ஒரு பொலிஸ் நிலையத்தில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

தம்மைத் தெரிவு செய்த அப்பாவி மக்கள் பொலிஸ் நிலையத்தில் அவஸ்தைக்குள்ளாக்கப்படும் போது மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள், என்று மக்கள் வேதனைப்படுகிறார்கள். ●

## தாதிமார் நியமனத்தில் புறக்கணிப்பு

(திருமலை நிருபர்)

அரச வைத்தியசாலைகளில் உள்ள முதலாந்தரத் தாதியர் பதவி உயர்வு நியமனங்களில் வடக்கு-கிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் தாதியர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த கல்வியாண்டில் கொழும்புப் போதனா வைத்தியசாலையில் 325 பேரும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 25 பேரும் தாதியர் டிப்ளோமா பின் படிப்பு நெறியைப் பூர்த்தி செய்தார்கள். கொழும்புக் கல்வி நெறி கொழும்பு பல்கலைக் கழகத்துடனும் மட்டக்களப்பு கல்வி நெறி கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்துடனும் இணைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் பாட நெறியைப் பூர்த்தி செய்தோர். அனைவரும் முதலாந்தரத் தாதியராக பதவி உயர்வு பெற்று சேவை புரிகின்றனர். ஆனால் மட்டக்களப்பில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த எவருக்கும் இது வரை பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. இத்தனைக்கும் வடக்கு கிழக்கில் 92 முதலாந்தர தாதியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்படாமலே இருக்கின்றன. இவற்றுள் 37 வெற்றிடங்கள் வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளிலும், 55 மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைகளிலும் காணப்படுகின்றன.

தங்கள் நியமனம் பற்றி இவர்கள் கொழும்பில் தொடர்பு கொண்டபோது, கொழும்பில் வந்து மீண்டும் ஒரு தடவை பரீட்சை எழுதினால் தான் இவர்களது பாடநெறி அங்கீகரிக்கப்படும் என பதில் கூறப்பட்டுள்ளது. தாதியர் தொழில் சங்கமும் இந்தப் பதிலையே சரியானதென கூறுகிறது.

அமைச்சின் அனுமதியுடன் முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்ட ஒரு பாட நெறியை தமிழ்ப்பகுதியில் நடைபெற்றது என்பதற்காகவும் தமிழர்களுக்காக நடைபெற்றது என்பதற்காகவும் எவ்வாறு புறக்கணிக்க முடியும் என்று தாதியர்கள் கேட்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்கள் விடயத்தில் அக்கறை எடுப்பார்களா? ■

## ஆசிரியர் ஆலோசகர் பதவி நியமனத்தில் முறைகேடுகள்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர் ஆலோசகர் பதவிகள் தெரிவில் பல முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பத்திரிகைகள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கடந்த செப்டம்பர் மாதத்தில் நேர் முகப்பரீட்சைகளும் இடம்பெற்றன. 500 பேர் அளவில் இதற்குத் தோற்றினார்.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சங்கீதம் நடனம், ஆரம்பப் பிரிவு, முறைசார் கல்வி, சமூகக் கல்வி போன்ற சகல பாடங்களுக்குமாக இந்த ஆசிரியர் ஆலோசகர்கள் வலயக் கல்வி பணிமனைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். தமிழ்ப் பாடசாலைகளுக்கு 77 பேரும், முஸ்லிம் பாடசாலைகளுக்குப் 19 பேரும் இவ்வாறு ஆசிரியர் ஆலோசகர் பதவிகளுக்கான நியமனக் கடிதங்களை மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு.வே. இராதாகிருஷ்ணன், முஸ்லிம் பிரிவுகளுக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனாப் எம்.டி. எம்.அமீன் ஆகியோரால் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்களில் பலருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தப் பதவியைப் பெற அடிப்படைக் கல்வித்தராதரம் 15 வருட ஆசிரியர் அனுவமும், பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி டிப்ளோமா சான்றிதழ் முதலியன குறிப்பிடப்பட்டிருந்தன. இவற்றையும் மீறி ஜீ.சி.ஈ. சாதாரணதரம் பெற்ற ஓர் ஆசிரியையும் மற்றெல்லா ஆசிரியர் கல்வித் தகைமைகளையும் கவனியாது கொத்மலை வலயத்தில் ஓர் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டதாகக் கூறப்படும் அநீதி குறித்து அப்பிரதேச தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் 437 தமிழ்ப் பாடசாலைகளும் 103 முஸ்லிம் பாடசாலைகளும் இருக்கின்றன. இவற்றில் இந்து சமய ஆலோசகராக 13 பேரும் இஸ்லாம் சமய ஆலோசகராக ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கும் நிலை குறித்தும் அதிருப்தி நிலவுகின்றது.

நியமிக்கப்பட்ட ஆசிரியர் ஆலோசகர் தூர இடங்களுக்கு நியமிக்கப்பட்டமை குறித்தும் சிலருக்கு நியமனங்கள் தொடர்பாக விசேட அனுசரணை அரசியல்வாதிகளினால் காட்டப்பட்டது குறித்தும் இந்த அதிருப்தி மேலும் அதிகரித்துள்ளது.

இதே வேளையில் கண்டி மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ள முறைசார் கல்வி ஆலோசகர் பதவி நகைப்புக்கிடமாகி இருப்பதாகவும் ஆசிரியர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

## எரிபொருள் கட்டண உயர்வினால்! போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிப்பு!

கடந்த வாரம் மீண்டும் ஒரு தடவை எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் படி ஒரு லீற்றர் மண் எண்ணெய் 17 ரூபா 45 சதமாகவும், டீசலின் விலை ஒரு லீற்றர் 21ரூபா 50 சதமாகவும், ஒரு லீட்டர் லங்கா சுப்பர் டீசலின் விலை 26.80 சதமாகவும் ஆலைகளுக்குப் பயன்படுத்தப்படும் எரி எண்ணெயின் விலை ஒரு லீற்றர் 19ரூபா 70 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. மேற்படி எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், கூடவே போக்குவரத்துக் கட்டணங்களும், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிரித்துள்ளன. ○

## தமிழ்-முஸ்லிம் கலவரத்துக்கு தூபம்! பள்ளிவாசல் தலையீட்டால் தவிர்ப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் குரோதத்தை தூண்டி, இனங்களுக்கிடையே பிளவுகளையும் கலவரத்தையும் ஏற்படுத்த தீய சக்திகள் எடுத்த முயற்சிகள் தாராபுரம் ஹுஸைனிய்யா ஜும்ஆப் பள்ளியின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னாரில் தமிழர்களும் முஸ்லிம்களும் எதுவித கசப்புணர்வுகளுமின்றி புரிந்துணர்வுடனும், ஒற்றுமையுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக தாராபுரம் முஸ்லிம் கிராமம் விளங்குகிறது. இங்கு வன்னிப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த குடும்பங்கள் கிராம மக்களின் வீடுகளில் அந்நியோன்யமாக வாழ்ந்து வருகின்றன.

இதனைச் சீர்குலைத்து குழப்பங்களை ஏற்படுத்தும் முயற்சியில் தாராபுரத்திலுள்ள சில முஸ்லிம் காடையர்கள் சிலர் பின்னணியில் நின்று செயற்படுவதாக நம்பப் படுகிறது.

இடம் பெயர்ந்து இங்கு வாழும் காடையன் ஒருவனை அடியாட்கள் சகிதம் இங்குள்ள பாடசாலைக்கு அனுப்பி ஆசிரியர்களையும், மாணவர்களையும் தாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் தினமும் கூட்டங்களை நடாத்தி அடாவடித்தனமான செயல்களில் இந்த காடையர் கூட்டம் ஈடுபட்டு வருகிறது.

இந்த விஷமிகளின் பின்னணியில் சில அதிகாரிகளும், அயல் கிராம முக்கியஸ்தர்களும் இருப்பதாகவும் நம்பப்படுகிறது. ■

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் ★ ம ★ அருண்ராஜ்



21 ✦ 11 ✦ 2000

திரு.திருமதி மதியழகன், ஜீவதாரணி தம்பதிகளின் அருஞ்செல்வப் புதல்வன் அருண்ராஜ் தனது முதலாவது பிறந்தநாளை 21.11.2000 செவ்வாய்க்கிழமை அன்று வவுனியாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு, அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, பெரியம்மா, குட்டிமாமா, இத்தாலியில் வசிக்கும் மாமாக்கள் பவன், ஜெகன், லவன், மல்லாவியில் வசிக்கும் அப்பம்மா, ஆசை அத்தை, ஜேர்மனியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பூட்டன்மார்களான ஐயாத்துரை, மாரிமுத்து, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பகவான் அருள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் : திரு.ப.குமரன் (தாத்தா) பட்டைக்காடு, வவுனியா.



உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984



### மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

### SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

### வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

### மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

### கொழும்பில் நவம்பர் 20 முதல் 28 திகதி வரை

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

### கல்முனையில் டிசம்பர் 02, 03 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

### வவுனியாவில் டிசம்பர் 09, 10 திகதிகளில்

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**



## COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.


**D.S. COMPUTER STUDIES**

Internet & E-mail dsocm@mail.visual. com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.



## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன் - மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



**நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா? அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரால் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்!**

ஒவ்வொரு மருந்தும் பல மருத்துவ ஆராய்ச்சிகளிற்கும் வைத்திய பரிசோதனைகளிற்கும் உட்படுத்தப் பட்டு, அது பூரண திருப்தியளிக்கும் பட்சத்திலேயே பாவனைக்கு உகந்தது என அங்கீககரிக்கப்படுகிறது. *Baraka* கருஞ்சீரக எண்ணெயும் மேலுள்ள படிகளைத் தாண்டியதே.

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கருஞ்சீர கமானது ஒமேகா -3, கொழுப்பமிலம், புரதம், கனியுப்பு, விற்றமின், போன்றவற்றைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதோடு அது நாளாந்த பாவனைக்கு உகந்தது எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும்எனவும்நிரூபணமாகியுள்ளது.

புரதம் ✓ விற்றமின்கள் ✓ கனியுப்புகள் ✓






ஆயுர் வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பாமசிகளிலும் கிடைக்கிறது.

*Baraka* பாவித்து உங்களது வாழ்வை சுகமாக கழியுங்கள்.

- *உணவு நிகரியாகவோ*
- *நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவோ*
- *குருதிச் சீனியை கட்டுப் படுத்தவோ*
- *கொலஸ்ரோலின் அளவைக்கட்டுப்படுத்தவோ பாவிக்கலாம்.*

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேசிய மருத்துவப்பிரிவினால் (IIM) நடாத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து கருஞ்சீரத எண்ணெய்யை தொடர்ந்து பாவிப்பதன மூலம் இரத்தத்திலுள்ள சீனியின் அளவையும், கொலஸ்ரோலின் அளவையும் கட்டுப்படுத்த முடியும் என நிரூபிக்கப்பட்டு ள்ளது.

EXPO LANKA


இன்னும் *Baraka* ஆனது சுகாதார, சுதேசிய வைத்திய அமைச்சின் ஆயுள்வேத மருத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பல வைத்தியர் களினாலும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
Customer Care, Baraka,No 11A, Mile Post Avenue, Colombo - 03


## விளம்பரப் பகுதி

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1975 ✲ 03 ✲ 30



விண்ணில் 1996 ✲ 11 ✲ 23

### கனகரெட்ணம் துஷ்யந்தன்

பண்புக்கு நிலைக்களனாய் பாரினிலே
உதித்திட்ட பொக்கிஷமே என் மகனே!
பாசத்தைக் காட்டி எமையெல்லாம்
பரிதவிக்க வைத்து நீ பிரிந்து விட்டாய்
தேசத்தை விட்டு நீ சென்று
நான்கு ஆண்டுகள் சென்றிடினும்
நேசத்தால் உனை என்றும்
நெஞ்சினிலே தீபமாய் ஏற்றுகிறோம்
உன் நினைவில் நாம் என்றும்....

பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை.

### 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

மலர்வு 31 ◆ 07 ◆ 1928



உதிர்வு 18 ◆ 10 ◆ 2000

### அமரர் திருமதி சுப்பிரமணியம்-நாகபூஷணியம்மா

**திதி வெண்பா**

விக்கிரம புதுவருஷம் ஐப்பசித் திங்களதில்
மூன்றாம் நாள் அபரபஷ ஷஷ்டி புதன்-அன்புருவாம்
நாகபூஷணியம்மா இறைவனடி சேர் நன்னாள்
பார் போற்ற வாழ்க நிறைந்து.

யாழ்ப்பாணம் அத்தியடியை பிறப்பிடமாகவும் முரசுமோட்டை 2ம் யூனிற் மற்றும் யாழ்.மணியந்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம்-நாகபூஷணியம்மா அவர்கள், 2000.10.18 அன்று இல.74/1, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியை கொண்ட இல்லத்தில் காலமானார். இவர், காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை-வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (கொக்குவில் மணியம்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு.தியாகராசா, காலஞ்சென்ற திருமதி இராசலட்சுமியின் அன்புச் சகோதரியும், இராசம்மா, காலஞ்சென்ற பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனபாலசிங்கம் (வவுனியா), சிவராசா(U.A.E), பரராசசிங்கம் (வவுனியா), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மணிமேகலா தேவி (வவுனியா) குணபாலசிங்கம் (Germany) ஜெகதாம்பாள் (வவுனியா), சரோஜினிதேவி (Lebanon), ரேணுகா தேவி (யாழ்ப்பாணம்), கௌசலாதேவி (யாழ்ப்பாணம்), நித்தியராசா (Germany), ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினி தேவி (Lebanon), ரதி தேவி (வவுனியா), தர்மபாலினி (U.A.E), செல்வறஞ்சினி (வவுனியா), விமலாதேவி(நீர்கொழும்பு), செல்வரெட்ணம் (கொக்குவில்) சிவரதி(Germany), சின்னத்தம்பி (புதுக்குடியிருப்பு), குணபாலன் (வவுனியா) செல்வரஞ்சன்(யாழ்ப்பாணம் பெரிய தபால் நிலையம்), சந்திரகுமார்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவானி, பவானந்தன், பத்மானந்தன், குஹதர்சினி, சுதானந்தன் (U.K) சுமித்திராராணி, ஈஸ்வரானந்தன், அற்புதானந்தன், சுஜானந்த் குமரகுருபரன் (U.A,E), நளாஜினி (U.A.E.), சிவஸ்ரீதரன்(U.A,E), சிவகுமார், சுபறாஜினி, விமலச்சந்திரன் (Canada), ஜெயச்சந்திரன் (Canada) ஜசிதா (Swiss), றஜினி(Germany), செல்வசீலன், செல்வறூபன் (Germany), செல்வச்சந்திரன் (Qatar), சிந்துஜா, துஷாந்தினி (Germany), துஷாந்தன்(Germany), துஷாகரன்(Germany), துஷாசுஜானி(Germany), சுபாஷினி, துஷ்யந்தினி, வாஷினி(Germany), கௌசிகன், கௌசல்யன், றஜிதா(Lebanon), சிவபாலன் (Germany), விஜிதா(Lebanon), ஜெயபாலன், சிவகாந்த், ஜெயகாந்த், சிந்துஜா, ஜதுஷாந்த், சதீஸ்குமார், ஜனனி, ஜெயதரணி, ஜெலக்ஷி, ஜெயதர்ஸி, பவித்திரா (Germany), ஜதுஷாந்த் (Germany), அபிஷா (Germany), ஆகியோரின் அன்புப் பேத்தியும், குணாநிதி, மிகிர்சென், யுகவர்மன், அபிராமி, துஷாளினி, சஜீபா, அஜித்தா, லதுஷா (Germany), பிரபாலினி (Germany), கீர்த்தனா (Germany), தேனுஷா, விதுஷா, தனுஷியா, ஆகியோரது அன்புப் பூட்டியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 2000.10.21 அன்று யாழ்ப்பாணத்தில் நிறைவுற்றது. அவர்களின் மரணச்சடங்குகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியும், ஆறுதல் மொழி கூறியும், தொலைபேசி மூலமாகவும் கடிதம் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும், எமக்கு வேண்டிய உதவிகள் புரிந்து ஒத்துழைப்பு வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், மற்றும் ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம். 31ம் நாள் நினைவஞ்சலி 17.11.2000 அன்று நடைபெற்றது.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

*தகவல் : பிள்ளைகள்:*
*வீ.எஸ்.தனபாலசிங்கம் (வவுனியா), வீ.எஸ்.சிவராசா* (U.A.E.), *வீ.எஸ்.பரராசசிங்கம்(வவுனியா), வீ.எஸ். குணபாலசிங்கம்*(Germaney), *வீ.எஸ். நித்தியராசா*(Germany).
*இல.65/1, பார்க்குழி லேன், தோணிக்கல், வவுனியா. தொலைபேசி : 024-23325.*

*பிரிவால் துயருறும்*
*சகோதரன், மைத்துனி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தேர்தல் பெறுபேறுகளின்பின்

# தமிழ்க் கட்சிகளின் உள்ளோட்டங்கள்

பொதுத் தேர்தல் முடிவுகளால் அதிகம் பின்னடைவைப் பெற்றுக் கொண்ட கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. அதிக அனுகூலத்தைப் பெற்றுக் கொண்ட கட்சி ஈ.பி.டி.பி. இருந்த போதிலும் அதிக லாபத்துக்கு வாய்ப்புப் பெற்ற தனிநபர் யு.பி.மகேஸ்வரன் என்று அழைக்கப் படும் எம்.மகேஜ்வரன். அவரது சொந்தப் பெயர் எம்.மகேஜவரன் என்றிருக்க, அவருக்குப் யு.பி.மகேஸ்வரன் என்று பெயர் வந்ததே ஒரு சுவாரசியமான கதைதான். அதாவது, எண்பதுகளில் யாழ்.மாவட்ட அமைச்சராக இருந்த யு.பி.விஜயகோன் என்ற அமைச்சரின் கையெழுத்துப் போல கள்ளக் கையெழுத்து இட்டு பல காரியங்களை ஈடேற்றி வருமானம் ஈட்டிக்கொண்டதால் அத்தகைய கையெழுத்தின் பு(இ)கழ் அவரது பெயரோடு ஒட்டிக் கொண்டு யு.பி. என்ற அடைமொழியாகி விட்டதென அவரை அறிந்த வட்டாரங்களால் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக செயற்பட்டு வந்த, அரசியலில், போராட்டங்களில் முன்னின்ற பல கட்சிகளையும் பின்தள்ளிவிட்டு யு.பி.மகேஸ்வரன் பாராளுமன்றத்துக்குத் தெரிவானது சகலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. யு.பி.யின் வெற்றியை வெறுமனே ஐ.தே.க.வின் வெற்றியாகக் கூறமுடியாது. மாறாக ஐ.தே.க. யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனத்தை ஈட்டிக் கொள்ள வழிசெய்து கொடுத்தது யு.பி.மகேஜவரனே. இதற்கு அவர் செலவழித்த தனிப்பட்ட பணம் ஏராளம். அத்தோடு அவரது பகுதியைச் சார்ந்த வியாபார சமூகத்தவரிடம் அவர்களின் வியாபாரத்துக்கு அனுசரணையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கத் தன்னால் இயலும் என்ற நம்பிக்கையை வழங்கியும் உள்ளார். இத்தகைய பின்னணியில் இவர் ஈட்டிய வெற்றி மிக நீண்ட காலத்தின் பின் ஐ.தே.க. யாழ்ப்பாணத்தில் ஒரு ஆசனத்தை ஈட்ட வழிசெய்து கொடுத்துள்ளது.

ஆனால் யு.பி.மகேஸ்வரன் தனது வியாபார நலன்களுக்காக இந்தப் பாராளுமன்ற ஆசனத்தைப் பயன்படுத்துவதற்கு முனைவது எவ்வளவு தூரம் அவருக்கு சாத்தியமாக இருக்கும் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் அவர் ஒரு சுதந்திரமான பாராளுமன்ற உறுப்பினராக செயலாற்ற விளைவதில் தடைகள் உள்ளன. அவர் ஐ.தே.க. பட்டியலில் தெரிவானவர். ஐ.தே.க.வின் தீர்மானங்களுக்கமையவே பாராளுமன்றத்தில் செயல்பட வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்.

எனினும் யு.பி.மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் கால் வைத்த அன்றே சில்லுப் பூட்டிய சப்பாத்து அணிந்தவர் போல தன்னிச்சையாக ஓட ஆரம்பித்துவிட்டார். எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தும் கூச்ச நாச்சமின்றி, ஆளும்கட்சி அமைச்சர்களை அணுகியுள்ளார். அனுருத்த ரத்வத்த, லக்ஷ்மன் கதிர்காமர் போன்றவர்களைக் குறிவைத்து அணுகியுள்ளார். பாராளுமன்ற தொடக்க விழாவில் சபாநாயகர் வழங்கிய விருந்தில் கலந்து கொண்ட வேளையில், அங்கிருந்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அருகில் சென்று அமர்ந்துவிட்டு அதைப் படம்பிடித்து யாழ். பத்திரிகைகளுக்கு அனுப்பி, வெளிநாட்டமைச்சருடன் மகேஸ்வரன் எம்.பி. பேச்சுவார்த்தை என்று செய்தி போட வைக்கும் திறமை அவருக்கிருந்ததென்றால், மூக்கில் விரலை வைக்கவேண்டுமல்லவா நாம்? லக்ஷ்மன் கதிர்காமரை எப்போதும் விசனத்துடன் விமர்சிக்கும் இப் பத்திரிகைகள்கூட யு.பி.மகேஸ்வரன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறியவுடன் அப் பேச்சுவார்த்தையில் என்ன அரசியல் பேசப்பட்டது என்பதைப் பற்றி எந்தக் கேள்வியும் இல்லாமல் செய்தியாக முக்கியத்துவம் கொடுத்துப் போடுமளவுக்கு அவர் அந்த யாழ். பத்திரிகைகளைக்கூட செல்வாக்குச் செலுத்தக் கூடியவராக இருக்கிறார்.

அத்தோடு யாழ். கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களை ஒன்றுகூட்டி தன்னால் அரசாங்கத்திடமிருந்து அவற்றுக்கு அனுசரணைகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முனைந்திருக்கிறார். ஆயினும் ஒரு சில சங்கத் தலைவர்களே அக் கூட்டத்துக்குச் சமூகமளித்துள்ளனர். எனினும் தான் சங்கங்களைச் சந்தித்த செய்தியை யாழ் பத்திரிகைகள் மூலம் பெரிய விடயமாக சித்தரித்துக் காட்ட இவரால் முடிந்திருக்கிறது.

அதேவேளை யு.பி. முனைந்துள்ள மற்றொரு காரியம் சற்று வேடிக்கையானது. தான் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கப் போவதாகக் கூறியுள்ளார். தான் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்ற நினைவில்லாதவர்போல இவர் இப்படிக் கூறுவதுதான் வேடிக்கை. தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க சிங்களக் கட்சியொன்றின் பிரதிநிதி முன்வந்திருப்பதென்பது வேடிக்கையா, இல்லை உண்மையில் அவமானமா? எவ்வாறாயினும் யு.பி.யைப் பொறுத்தவரையில் இந்த முயற்சியில் இன்னொரு முக்கிய குறியாக உள்ளது அதாவது இன்று அதிக பலத்துடனும் அதிகாரத்துடனும் தமிழ் மக்களுக்கான அமைச்சுப் பொறுப்பொன்றைப் பெற்றுள்ள ஈ.பி.டி.பி. கட்சியை ஒருவாறு வசப்படுத்துவது என்பதுதான் அந்த இலக்கு. இதற்காக அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கத் துடியாய்த் துடித்தபடி இருக்கிறார். அடிக்கடி அவருடன் தொலைபேசித் தொடர்பு கொண்டு நாங்கள் எப்போது சந்திப்போமெனக் கேட்டபடியிருக்கிறார்.

யு.பி.க்கு இன்னொரு தேவையும் ஈ.பி.டி.பி.யிடம் உண்டு. அதாவது, அவர் தனது பண, செல்வாக்குகளின் பலத்தால் யாழ். மக்களுக்கு படையினரின் மூலம் திருகோணமலைக்கான கப்பல் பயண ஆசனங்களை ஒழுங்கு செய்து கொடுப்பது, கொழும்பிலிருந்து சரக்குக் கப்பல்களில் வியாபாரிகளுக்கான (தனது வியாபாரத்துக்குமான) பொருட்களைத் தருவிப்பது போன்ற சில காரியங்களை செய்துகொள்ள முடிந்தது. அவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஈட்டிய செல்வாக்கும் கூட அவரை வர்த்தக சமூகத்துக்கு காரியம் பார்த்துத்தரக்கூடிய நபராக நம்பவைத்து இத் தேர்தலில் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது. ஆனால் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றக் கூடிய நிலமை இப்போது அவருக்கு இல்லை. அவர் எதிர்பாராத வகையில் ஈ.பி.டி.பி.க்கு தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாளக் கூடிய அதிகாரம் கொண்ட அமைச்சு கிடைத்ததுமன்றி, கப்பல், விமானப் போக்குவரத்து போன்ற விடயங்கள் யாவும் அவர்களின் அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டன. அத்துடன் வியாபாரப் பொருட்களை தருவிப்பதற்கான மார்க்கமும் ஈ.பி.டி.பி.யின் அமைச்சுக்கே செல்லவுள்ளது. எனவேதான் எப்படியாவது டக்ளஸை வசப்படுத்தி தனது இத் தேவைகளை நிறைவேற்ற அவர் முனைகிறார். அவர் இம் முயற்சியில் நடத்திய சுவாரசியமான உரையாடல் இது. அவர் ஈ.பி.டி.பி.யினரிடம் தன்னையும் நாங்கள் என்ற பதத்துக்கு உட்படுத்தும் வகையில் "இந்த அமைச்சுக்கூடாக நாங்கள் நிறைய வேலைகள் செய்யலாம்" என்றாராம். அதற்கு அவர்கள் "ஓமோம், நாங்கள் (ஈ.பி.டி.பி.யினர்) நிறையச் செய்யத்தான் போகிறோம், அதற்காகத்தானே இந்த அமைச்சைப் பொறுப்பேற்றோம்" என தங்களது "நாங்கள்" இலிருந்து அவரை விலத்தி பதில் கொடுத்தார்களாம். ஆனாலும் யு.பி. எந்த விதத்திலும் இந்த அமைச்சைத் தனக்கும் அனுகூலமாக்கிக் கொள்ளும் வகையில் டக்ளஸை வசப்படுத்தும் தாஜா புஜாக்களில் இறங்கியுள்ளாராம்.

இத்தகைய சுழல் வேகத்தில் தன் காரியங்களைச் சாதிக்கக்கூடிய மகேஸ்வரனை நம்புவது என்பது ஐ.தே.க.வுக்குக் கூட இவ்வளவு சீக்கிரத்திலேயே ஒரு கேள்வியாக எழுந்துவிட்டது. கடந்த தடவைபோல ஆளும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தமது தரப்புக்கு உறுப்பினர்களை மாற்றியெடுக்க முயற்சித்தால் அதில் முதலில் தாவக்கூடியவராக மகேஸ்வரனின் குணநலன்கள் தென்படுவதை அவர்கள் உணர்ந்துள்ளனர். எனவே மகேஸ்வரனை கட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்பதை உணர்ந்து ஐ.தே.க. ஒரு கட்டுப்பாட்டை விதித்துள்ளனர். அந்தக் கட்டுப்பாடு யு.பி.மகேஸ்வரனை பாரிய இக்கட்டொன்றுக்கு உள்ளாக்கி விட்டுள்ளது.

அதாவது, தேர்தலின்போது யு.பி.மகேஸ்வரன் யாழ். மக்களுக்கு கொடுத்த மிகப் பிரதானமான வாக்குறுதிகளில் ஒன்று, "நான் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தே வாக்களிப்பேன்" என்பது. ஆனால் ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கக் கூடாது எனவும் எதிர்ப்பதல்ல, வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விடுவதே தமது நிலைப்பாடெனவும் கட்டுப்பாடு விதித்துள்ளார். இந்நிலையில் யு.பி.மகேஸ்வரன் தான் வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றும் வகையில் எவ்வாறு அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப்போகிறார் என்பதே கேள்வி. அவர் மக்களுக்களித்த வாக்குறுதியைக் காப்பாற்ற எதிர்த்து வாக்களித்தால் ஐ.தே.க.வின் கட்டுப்பாட்டை மீறியவராகி கட்சியிலிருந்து நீக்கப்படலாம். அதனால் தனது பாராளுமன்றப் பதவியையும் இழக்க நேரிடலாம். மாறாக, ஐ.தே.க. கூறுவதுபோல் எதிர்க்காமல் வெறுமனே கலந்து கொள்ளாமல் மட்டும் விட்டால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு துரோகமிழைத்தவராகிவிடுவார்.

இது யு.பி.மகேஸ்வரனுக்கு கால் தடம் போடுவதற்கெனவே ஐ.தே.க. விதித்த கட்டுப்பாடாகப் புலப்படுகிறது. ஏனெனில் ஐ.தே.க.வில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர வேறு எவருக்கும் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வேண்டுமென்ற அவசரமும் அவசியமும் இல்லை. இந் நிலையில் யு.பி. இத் தடைகுறித்து என்ன செய்யப் போகிறார் என்பதை அக்கறைக்குரிய வட்டாரங்கள் பல உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

## கூட்டணியின் குழப்பம்

பொதுத் தேர்தலில் பாரிய பின்னடைவைக் கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் அதன் எதிரொலிகள் வெவ்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. முதலில் அதற்குள் தலைமைத்துவக் குழப்பம் பிரதானமானதாக எழுந்துள்ளது.

செல்வநாயகத்தின் மறைவின்பின்னிருந்தே கூட்டணிக்குள் தலைமைத்துவக் குழப்பங்கள் பழக்கமானதாகி விட்டன. செல்வநாயகம் மறைந்தபின் சேவைக்கால அடிப்படையில் மூத்த உறுப்பினரென்பதற்கான தலைமைத் தகமை மட்டக்களப்பைச் சார்ந்த ராசதுரைக்கே சென்றிருக்க வேண்டும். ஆனால் யாழ்ப்பாண ஆதிக்கம் நிலவிய கூட்டணியின் கட்டமைப்புக்குள் ராசதுரையைப் புறம்தள்ளி அமிர்தலிங்கம் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டார். அக்காலத்தில் கூட்டணிக்குள் நிகழ்ந்த இழுபறிச் சண்டைகளை அறிந்திருந்தவர்கள் எத்துணை அநாகரீகமான முறையில் இத் தலைமைக்கான பதவிப் போட்டி அங்கு நடந்து முடிந்தது என்பதையும் அதற்காக எந்தக் கேவலமான செயலிலும் இறங்கத் தயாரான நிலையில் இத் தலைமைகள் இருந்ததையும் கண்டிருப்பார். ராஜதுரையைப் புறந்தள்ளியதுடன் மட்டுமன்றி அவரை எதிர்காலமில்லாத அளவு கேவலப்படுத்திவிட கூட்டணியினர் முனைந்தனர். இந் நிலையில் தான் அவர் கூட்டணி மீதான கசப்புணர்வாலும் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்குமாகவும் ஐ.தே.க.வில் சேர்ந்தார். இதுவே கிழக்கில் யாழ். மேலாதிக்கம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களிடையே பிராந்திய வாதங்கள் எழ வழிகோலிய அரசியல் நிகழ்வாக அமைந்தது.

அமிர்தலிங்கத்தின் படுகொலையின் பின் அடுத்த தலைமை சிவசிதம்பரத்திடம் சென்றது. ஆனால் அமிர்தலிங்கம் படுகொலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரண அச்சுறுத்தலிலிருந்து உயிர்மீண்டு வந்த சிவசிதம்பரம் ஒரு முழு வேகமான தலைமையாகப் பங்காற்றவில்லை. ஒதுங்கிச் செல்லும் போக்குடன் சாட்டுப் போக்காகத் தலைமைப் பதவியை அலங்கரித்து வந்தவராகவே திகழ்ந்தார். அதன் நடைமுறையான தலைமை மெதுவாக சம்பந்தனிடம் சென்றது. சிறிது காலத்தில் சிவசிதம்பரம் படிப்படியாகத் தானாகவே ஒதுங்கிக் கொள்ளவே சம்பந்தன் செயலாளர் நாயகமாக இயங்கினார். இதுவே முதன்முதலாக கூட்டணிக்கு கிழக்கு மாகாணத் தலைமை ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்குமாகும். முன்னர் கூட்டணி புறந்தள்ளிய கிழக்கு மாகாணத்தின் தலைமை காலத்தால் அதற்கு மீண்டும் நிர்ப்பந்திக்கப்பட்டது. அதுமட்டுமன்றி இதன்போது (கடந்த) பாராளுமன்றத்திலும் கூட்டணியின் பெரும்பான்மையான ஆசனங்கள் கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் வசமே இருந்தன. போனஸ் ஆசனத்திலேயே வடக்குப் பிரதிநிதிகளாக நீலன் திருச்செல்வமும் அவர் கொலையுண்டதன்பின் மாவை சேனாதிராஜாவும் நியமிக்கப்பட்டிருந்தனர். அதனால் கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைமைகூட மட்டக்களப்பின் தலமைப் பிரதிநிதி ஜோசப் பரராசசிங்கத்திடமே சென்றது. ஆக, அக் காலத்தில் வடக்கின் தலமைத்துவம் மட்டுமல்ல எந்த ஆதிக்கமும் அடியோடு சரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கடந்த பொதுத் தேர்தல் பெறுபேறுகள் கூட்டணிக்கு படுதோல்வியாக அமைந்தாலும் தலைமை விடயத்தில் மீண்டும் வடக்கின் ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் அமைந்துவிட்டது. வடக்கில் மூன்று ஆசனங்களும் கிழக்கில் இரண்டு ஆசனங்களும் பெற்றதன் மூலம் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவில் வடக்கு பெரும்பான்மையை ஈட்டி குழுத் தலைமையையும் ஜோசப் பரராசசிங்கத்திடமிருந்து பறித்து ஆனந்த சங்கரியின் வசம் சேர்த்துள்ளது. அதேவேளை கூட்டணியின் செயலாளர் நாயகமான சம்பந்தன் இத் தேர்தலில் தெரிந்தெடுக்கப்படவில்லை. அவர் போனஸ் ஆசனத்தின் மூலம் பாராளுமன்றம் வர மேற்கொண்ட எத்தனங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தன. இவ்வாறு செயலாளர் நாயகம் சம்பந்தன் பாராளுமன்றத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதும் ஆனந்த சங்கரிக்கு அனந்தமான ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது. இவ்வாறு சிவசிதம்பரம் படிப்படியாக தலைமைப் பெறுப்பிலிருந்து ஒதுங்க நேரிட்டதோ, அவ் வேளையில் சம்பந்தன் எவ்வாறு நடைமுறை ரீதியிலான தலைவராக தன்னை முன்னிறுத்திக் கொண்டாரோ, அதேபோல் சம்பந்தன் படிப்படியாக ஒதுங்க, அந்த இடத்தை சங்கரி நிரப்பிக்கொள்ள முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது வெறுமனே சம்பந்தரிடமிருந்து சங்கரிக்குக் கூட்டணித் தலைமை கைமாறுவதாக இல்லாமல் கிழக்கின் ஆதிக்கத்திலிருந்து வடக்கின் ஆதிக்கத்துக்கு தலைமை மீண்டும் இழுத் தெடுக்கப்படும் கயிறிழுப்பின் பலச் சரிவாகவே கருதப்பட முடியும்.

இப் பலச் சரிவில் அடிபட்ட அடுத்த தலைவர் ஜோசப் பரராசசிங்கமே. இத்தேர்தல் பெறுபேறுகள் அவரின் பாராளுமன்றக் குழுத் தலைமையை மட்டும் பறித்துவிட்டு விடவில்லை. மட்டக்களப்பு தலைமைப் பிரதிநிதி என்ற நிலையிலிருந்தும் அவரை விழுத்தி விட்டது. அவரைவிட அதிக வாக்குகளைப் பெற்ற கூட்டணி பாராளுமன்ற உறுப்பினராக மட்டக்களப்பிலிருந்து நிமலன் சௌந்தரநாயகம் விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதைவிட மேலும் மோசமான நிலைமை என்னவென்றால் ஜோசப் பரராசசிங்கம் பாராளுமன்றத்துக்கு தெரிவாகாமலே தோற்கடிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டதுதான். அவரைவிட மற்றைய கூட்டணி வேட்பாளரான பொன் செல்வராஜா வாக்கு எண்ணிக் கொண்டிருந்த தருணத்தில் முன்னிலையில் இருந்தார். அவர்தான் இரண்டாவது உறுப்பினராகத் தெரிவு செய்யபடப் போவதாகவே அந்நேரத்தில் மட்டக்களப்பில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வாக்கு எண்ணுவதில் சதி செய்து விருப்புவாக்குக்குப் புள்ளடியிடப்படாத வாக்குச் சீட்டுகளில் ஏஜெண்டுகள் மூலம் தனது இலக்கத்துக்குக் கள்ளப் புள்ளடிகள் இடச்செய்து சொற்ப எண்ணிக்கையான வாக்குகளால் செல்வராஜாவை வீழ்த்தி அவரின் இடத்தை ஜோசப் பரராசசிங்கம் தான் கைப்பற்றிக் கொண்டாரென மட்டகளப்பில் பரவலான குற்றச்சாட்டு உள்ளது.

இதற்காக ஜோசப் பரராசசிங்கத்தின் தெரிவுக்கெதிராக செல்வராஜாவின் ஆதரவாளர்கள் மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு போராட்டமொன்றையும் நடத்தியிருந்தார்கள். இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரே கட்சி உறுப்பினரின் தெரிவுக்கு எதிராக அதே கட்சியினர் நடத்திய முதலாவது பகிஷ்கரிப்பும் இதுவாகவே அமைந்தது. எமது அரசியல் எந்தளவுக்கு கேவலமானதாகிக் கொண்டு செல்கின்றது என்பதுக்கு ஒரு சான்றாகவும் இது அமைந்தது.

இந்தவகையில் அநீதியிழைக்கப்பட்ட வெறுப்பில் பொன் செல்வராஜாவும் தலை தப்பினாலும் தலைமைப் பிரதிநிதித்துவம் பறிபோன விரக்தியில் ஜோசப் பரராசசிங்கமும் புழுங்கியபடி இருந்த வேளையில்தான் தற்போது முதன்மை உறுப்பினரான நிமலன் சௌந்திரநாயகத்தின் படுகொலையும் நடந்துள்ளது. நிமலனின் தேர்தல் வெற்றியின்பின் அவர் பற்றிய அவதூறுகள் பரப்பப்பட்டு வந்தது. அவர் தன்னிச்சையாகச் செயற்பட முற்படுகிறாரென்றும், அரசாங்கத்துடன் ஒத்துப் போனால்தான் மட்டக்களப்பை அபிவிருத்தி செய்யமுடியுமென எண்ணுவதாகவும், இது தொடர்பாக அரச தரப்பின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துள்ளதாகவும் பரப்பப்பட்ட பிரசாரங்களின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதும் இக்கொலைக்கு உள்வீட்டு ஏற்பாடு இருந்திருக்குமோ என்ற சந்தேகத்தை மட்டக்களப்பில் கிளப்பி விட்டுள்ளது.

நிமலனின் கொலையின் போது அவருடன் மோட்டார் சைக்கிளில் கூடச் சென்றவர் சுடுபாட்டில் காயமுற்று வைத்திய சிகிச்சை பெற்றுத் தேறியபின் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மூலம் பெறப்படும் தகவல்கள் உண்மைக் கொலையாளிகளை அடையாளம் காண உதவலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும் இக்கொலைக்கான காரணம் பற்றிய கேள்வியில் கூட்டணிக்குள் ஏற்பட்ட பதவிப் பிணக்கு தூண்டுதலாக அமைந்திருக்கலாமாவென்பது வலுவான சந்தேகமாக இன்னும் நிலவுகிறது.

நிமலனின் கொலையின் பின்னும் மட்டக்களப்பில் கூட்டணிப் பிணக்கு ஓய்ந்தபாடாக இல்லை. நிமலனின் இடத்துக்கு நிமலனின் மனைவியை நியமிக்கும்படி அப்பகுதி மக்கள் அழுத்தம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் கூட்டணியின் தற்போதைக்கான தலைவராகச் செயற்படும் ஆனந்த சங்கரி அம்மக்களை முட்டாள்களாக்கும் பதிலொன்றைத் தெரிவித்து இக்கோரிக்கையை நிராகரிக்க முனைகிறார். அவரின் பதிலில், இது கூட்டணியினால் மேற்கொள்ளப்படக்கூடிய நியமனமல்ல. தேர்தல் சட்டப்படி தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்படவேண்டிய தீர்மானமே என்று பத்திரிகை அறிக்கை விடுத்துள்ளார். குழந்தைப் பிள்ளைகளுக்கு கதை சொல்லுமாற்போல் 'தேர்தல் சட்டம்' என்று அவர் சாட்டுக் கூறினாலும் மக்களுக்கு அவர் பேய்க்காட்டுகிறார் என்பது தெளிவாகத் தெரியும். ஏனெனில் தேர்தல் சட்டப்படி அடுத்த விருப்பு வாக்கைப் பெற்றவர் தான் நிமலனுக்கு அடுத்து பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படலாமென்றாலும் நிமலனின் பின் உள்ளவர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்தால் நிமலனின் மனைவியை நியமிக்க முடியும் என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயமே. அவ்வாறுதான் ஜே.வி.பி. தனது பா.உ.களை மாற்றியுள்ளது. ஏன், ஈ.பி.டி.பி. கூட இப்போது தனது தெரிவான ஒரு பா.உ.வை ராஜினாமாச் செய்ய வைத்து இவ்விடத்துக்கு தவராஜாவை நியமித்துள்ளது.

எனவே தேர்தல் தோல்வியாலும், தலைமைத்துவ பலப்பரீட்சைகளாலும் குழம்பிப் போயுள்ள கூட்டணியில், தன்னை நிதானப்படுத்திக் கொள்வதற்குப் பதில் மேலும் மேலும் குழப்பமுறுகின்ற போக்கையே எதிர்காலத்தில் எதிர்பார்க்க முடியும்போல் தோன்றுகிறது.

ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலைமை குறித்து அடுத்தடுத்த இதழ்களிலும் ஆராய்வோம். ●

நரன்

# செய்திச் சிதறல்

✪ அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமரச பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடைபெறும் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப கட்டம் வெளிநாடொன்றில் நடைபெறக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

✪ நோர்வே நாட்டின் அனுசரணையுடன் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதனப் பேச்சுகளுக்கு வலிமையூட்டும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசாங்கமும் தனது பங்கினை வழங்க முன்வந்திருக்கிறது. பிரித்தானிய வெளிவிவாகார அமைச்சர் பீட்டர் ஹெய்ன் இலங்கை வருகிறார். இவர் இலங்கை வருவதற்கு முன்னர் லண்டன் மாநகரிலுள்ள விடுதலைப்புலிகள் இயக்க பிரமுகர்களுடன் சந்தித்து உரையாடியிருப்பதாகத் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அமைச்சர் இந்தியாவுக்கும் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடனும், இலங்கை அமைதிப் பேச்சு தொடர்பாக உரையாடியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

✪ நடந்து முடிந்த பாராளுமன்றத்தில் அமைச்சர்களாகப் பதவி வகித்த பலர் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் இருந்துள்ளனர் என்று ஜனாதிபதி சந்திரிக்கா கடந்த வாரம் அமைச்சர்களை கடுமையாகச் சாடினார். அமைச்சர்கள் மட்டுமல்லாமல் பல உயர்தர அதிகாரிகளும் தங்களுக்குரிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றாமல் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்றும் ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார். இம்முறையும் ஏற்கனவே விட்டதவறுகள் போல் அமைச்சர்களோ அதிகாரிகளோ நடந்துகொண்டார்களானால் அவர்களுக்கெதிராக கடும்நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை என்று அவர் எச்சரித்தார்.

✪ எரிபொருள் விலையேற்றத்தினால் இலங்கையில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது. ஏற்கனவே வானை எட்டியுள்ள விலைவாசி ஏற்றத்தால் துன்புறும் மக்கள் மென்மேலும் சுமையைத் தாங்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தொடரும் போரினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் துயர வெள்ளத்தில் தவிக்கும் வடகிழக்கு மாகாண மக்கள்தான் அதிக பாதிப்புக்குள்ளாவார்கள் என்று கருத வேண்டியுள்ளது.

✪ பல வருடகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரயம்பதி வரை மாத்திரமே நிலை கொண்டிரந்த விஷேட அதிரடிப்படையினர் தற்பொழுது மட்டக்களப்பின் வேறு பல பகுதிகளுக்கும் முன்னேறியுள்ளனர். வெகுவிரைவில் இவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் எஞ்சியிருக்கும் வேறு பகுதிகளையும் தமக்குக் கீழ் கொண்டவருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ▭

# அண்டை மண்டலத்தில்....

## ராஜ்குமார் விடுதலை- ஒரு புதிய பிரச்சனையின் தொடக்கம்!

ஒரு வழியாக கன்னட நடிகர் ராஜ்குமார் விடுதலையாகிவிட்டார். 108-நாட்கள் வனவாசத்திற்குப் பிறகு அவரையும் அவரது உறவினர் நாகேஷையும் வீரப்பன் குழுவினர் நவம்பர் 15ஆம் நாள் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறனிடம் ஒப்படைத்தனர். இது நாள் வரை வீரப்பனை ஏகபோக குத்தகை எடுத்திருந்ததாகக் காட்டிக்கொண்டு வந்த நக்கீரன் கோபால் அம்போவென்று விடப்பட்டார். ராஜ்குமார் விடுதலையானது கூட அவருக்குத் தெரியாது. அந்த நேரம் அவர் சென்னையிலிருந்தார்!

தன்னுடைய நம்பிக்கைக்குரியவரான கோபால் அலட்சியப்படுத்தப்பட்டது கருணாநிதிக்கு கோபத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. எல்லாம் நல்லபடியாக முடிந்ததில் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. ஜெயலலிதா மற்றும் எதிர் கட்சிகளின் வசைபாடலிலிருந்து தப்பியதே அவருக்கு நிம்மதிதானே!

இரு மாநில அரசுகளும் கர்நாடகத்தில் வாழும் தமிழர்களும் இப்போது நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள் என்பதும் உண்மை. பலர் அஞ்சியது போன்று ராஜ்குமார் விடுதலையாகி பெங்களூர் வந்தபோது, பெரிய அளவில் கலாட்டா எதுவும் நடக்கவில்லை.

ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒரு புதிய தலைவலி தொடங்கியிருப்பதை பலரும் அறியவில்லை. விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு தளத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

வெளியே வந்த 73-வயதான ராஜ்குமார் நெடுமாறனால்தான், தான் விடுதலையாக முடிந்தது என்றும், அவரை ஒரு யோகி என்றும் வர்ணித்தார். நெடுமாறன் மட்டுமா? ஒரு பெரிய புலி ஆதரவாளர்கள் பட்டாளமே காட்டிற்குள் சென்று வீரப்பனுடன் பேசி ராஜ்குமாரை மீட்டு வந்திருக்கிறது.

ராஜ்குமார் விடுதலையில் பணம், கிரனைட் தோண்டி எடுத்தல் போன்ற வேறு சில விஷயங்களும் சம்பந்தப்பட்டிருந்தாலும் நிகழ்ச்சிகளை சற்று உன்னிப்பாகக் கவனிக்கும் போது நிச்சயமாக இதில் விடுதலைப்புலி இயக்கத்திற்கு ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே படுகிறது.

பெங்களூரில் செய்தியாளர்களை சந்தித்த போது சுவையானதொரு தகவலை ராஜ்குமார் கொடுத்தார். தன்னை காட்டில் சந்தித்த பெங்களூரைச் சேர்ந்த பானு என்ற பெண் டாக்டர், "சுகவீனமுற்றிருப்பதுபோல நடியுங்கள், வீரப்பன் பயந்துபோய் உங்களை விடுதலை செய்ய முன் வருவார் என்று யோசனை கூறினார், அப்படியே நானும் நடித்தேன், நாடித்துடிப்பைப் பார்த்துவிட்டு பானுவும் வீரப்பனிடம் ராஜ்குமாரின் உடல் நிலை மிகவும் மோசமாகியிருப்பதாகக் கூற, பதட்டமடைந்த வீரப்பனும் என்னை விடுதலை செய்ய முடிவெடுத்தார், என்று ராஜ்குமார் கூறினார். சக்தி, மகாசக்தி என்றெல்லாம் பானுவைப் புகழ்ந்தார்.

நக்கீரன் கோபால் தோல்வியுற்றார், நெடுமாறனும் பேசிக் கொண்டேதான் இருந்தார், ஆனால் பானு கொடுத்த யோசனையின் வாயிலாக அவர் தப்ப முடிந்தது. மேலும் டாக்டர் பானு தன்னை வந்து பார்ப்பதற்கு காரணமாகவிருந்த நெடுமாறனும் இந்த தந்திரத்திற்கு உடந்தை. ஆக வீரப்பனை எல்லோருமாகச் சேர்ந்து ஏமாற்றிவிட்டனர் என்பதே ராஜ்குமார் அளித்த தகவலின் உட்பொருளாகும்.

இதெல்லாம் உண்மையா, பொய்யா என்பது ஒரு புறமிருக்க, பத்திரிகைகளில் செய்தி வெளியானவுடன் நெடுமாறனுக்கு மிகுந்த தர்மசங்கடமாகிவிட்டது, தமிழினவாதி, புலி ஆதரவாளர், பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவர் போன்ற தகுதிகளால்தான் அவர் வீரப்பன் குழுவினரால் தூதுவராக வருமாறு அழைக்கப்பட்டிருந்தார்.

வீரப்பனும், தமிழ்நாடு விடுதலைப்படையினரும், தமிழ்தேச மீட்சிப்படையினரும் தங்களை பிரபாகரனின் அபிமானிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர்கள். ராஜ்குமாரைக் கடத்தியதே பல்வேறு தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரத்தான் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அவர்களை ஏமாற்றுவது எவ்வளவு பெரிய நம்பிகைத் துரோகம்? அதுவும் காவிரி தொடர்பான கலவரங்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்படும் ஒரு கன்னடரை விடுவிக்க தமிழ்ப் போராளிகளை ஏமாற்றுவது என்பது கயமைத்தனமல்லவா? என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன.

மறுநாளே சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த நெடுமாறன், "ராஜ்குமார் கூற்றை வன்மையாக மறுத்தார். யார் இந்த பானு என்ற பாணியில், அவர் ஒரு மருத்துவர். மனிதாபிமான அடிப்படையில் ராஜ்குமாரின் உடல்நிலையினை பரிசோதிக்க அழைக்கப் பட்டார். அதற்குமேல் பானுவிற்கு ராஜ்குமார் விடுதலையில் பங்கெதுவும் இல்லை. நாங்கள் பேசினோம், சில வாக்குறுதிகளைக் கொடுத்தோம், எங்களை வீரப்பன் குழுவினர் நம்பினர், ராஜ்குமார் விடுவிக்கப்பட்டார்., அதுதான் நடந்தது" என்றார் நெடுமாறன்.

சரி, ராஜ்குமார் நேற்று அப்படி கூறியிருக்கிறாரே? என்று கேட்டதற்கு, "உங்களுக்குத் தெரியுமா, அவரே ஒரு மறுப்பு அறிக்கை விட்டிருக்கிறார்" என்றார் நெடுமாறன். பதிலளித்த கையோடு நிருபர்களுக்கு அந்த அறிக்கைப் பிரதிகளைக் கொடுத்தார். தான் கூறியதை பெங்களூரில் நிருபர்கள் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள், "எப்படி இந்தக் காட்டிற்குள் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீர்கள்? என்று பானு கேட்டார், இக்கட்டான சூழலில் அப்படி நடிக்கத்தானே வேண்டும் என்று நான் பதிலளித்தேன், அதைத்தான் நிருபர்களிடம் சொன்னேன், அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள்" என்று ஒரு போடுபோட்டார் ராஜ்குமார். அந்த அறிக்கையில். நெடுமாறனின் கடும் முயற்சி காரணமாகவே தான் விடுதலையானதாகவும் அவர் கூறினார்.

இந்தக் குழப்பம் ஒரு புறம் யார் இந்த பானு? அவர் பெங்களூரில் செயல்படும் ஒரு தன்னார்வக்குழுவில் முக்கிய உறுப்பினர். அந்தக்குழுவிற்கும் பல்வேறு தமிழ் தீவிரவாதம் பேசும் குழுக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அத்தோடு கர்நாடக எல்லைப்பகுதியில் கிரானைட் தோண்டி எடுக்கும் ஒரு கம்பெனியினையும் பானு நடத்துவதாகச் சொல்லப்படுகிறது.

அவரை காட்டிற்குள் அழைத்துச் சென்றது கொளத்தூர் மணி. இந்த மணி மேட்டூர் பகுதிக்காரர். அவருக்கும் வீரப்பனுக்கும் பன்னாட்கள் தொடர்பு உண்டு. அதைவிட முக்கியம் விடுதலைப்புலிகளுக்கு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு உதவிகளைச் செய்தவர் அவர்.

அவருடைய தோட்டங்களில்தான் எண்பதுகளில் புலிகள் ஆயுதப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்பிருக்கும் என்று சந்தேகிக்கப்பட்டு. தேசிய பாதுகாப்புச்சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டு ஏறத்தாழ ஓர் ஆண்டு காலம் சிறையில் இருந்திருக்கிறார் மணி. குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படாமல் போக விடுதலையானார் அவர்.

1995ல் வேலூர் சிறப்பு முகாமிலிருந்து தப்பித்த விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்ததாகச் சொல்லப்பட்ட சில இளைஞர்கள் மணியின் தோட்டத்தில்தான் சில காலம் தங்கியிருந்து பிறகு கைது செய்யப்பட்டார்கள்.

எவ்வளவோ வழிகளில் அவர் பிரச்சனைகளைச் சந்தித்தாலும், அவர் இன்னமும் தீவிர விடுதலைப்புலி ஆதரவாளராகவேயிருக்கிறார். அந்த இயக்கத்திற்கு அவர் பல்வேறு உதவிகளை செய்து வருகிறார் என்றும் நம்பப்படுகிறது.

அத்தகைய மணி, பானுவை அழைத்துப் போகிறார். நெடுமாறனும் அவர் தன்னுடன் வருவதை எற்றுக்கொள்கிறார் என்றால் நிச்சயமாக பானுவுக்கும் தமிழ்தீவிரவாதிகளுக்கும் ஏதோ தொடர்பிருக்கவேண்டும்.

தற்போது காட்டிற்குள் ஏறத்தாழ 35 இளைஞர்கள் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களில் ஒரு சிலர் இலங்கையைச் சார்ந்தவர்களாகயிருக்கக் கூடும். விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்கூட உள்ளேயிருப்பதாகவும் வதந்திகள் உலவுகின்றன.

எல்.ரீ.ரீ.யினரே தாங்கள் தமிழ் இந்துக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதாக அவ்வப்போது கூறிவருகிறார்கள்.

இந்தப் பின்னணியில்தான், ராஜ்குமார் விவகாரத்தினால் மத்திய அரசிற்கும் தர்மசங்கடம். எனவே அவரை விடுதலை செய்து விடுங்கள் என்று வீரப்பன் குழுவினருக்கு புலிகள் இயக்கத்தினர் அறிவுறுத்தியிருப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும், ராஜ்குமாரின் மகன்கள் வீரப்பன் உலவும் காட்டுப்பகுதிகளில் கிரனைட் தொழில் செய்து வருகிறார்கள். வீரப்பனுக்கு மற்றவர்கள் தரமறுத்ததால் தான் கோபம் கொண்டு அவர் ராஜ்குமாரைக் கடத்தியதாகவும் செய்திகள்.

மேலே கூறியிருப்பது போல பானுவிற்கே கிரானைட் தொழிலில் தொடர்பிருக்கிறது. இந்தத் தமிழினவாத அரசியலுக்கு அப்பாற்பட்ட, கிரானைட் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ராம்குமார் என்ற ஒருவரும் நெடுமாறனுடன் இறுதிக் கட்டப் பயணத்தில் கலந்து கொண்டி ருக்கிறார். ஏகப்பட்ட பணம் கைமாறியிருக்கும் என்பதில் ஐயமேயில்லை. இந்தத் தொகையெல்லாம் பல்வேறு ஆயுதங்கள் வாங்க பயன்படும், பின்னாளில் ஏதேனும் அதிரடி நடவடிக்கைகளில் வீரப்பன் குழுவினர் இறங்க அவை உதவும். காடுகள் அளிக்கும் பாதுகாப்பினைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளும் ஒரு தளத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். இறுதியாக வீரப்பன் விடுத்த அறிக்கையில் அதிரடிப்படையினரால் துன்புறுத்தப்பட்ட மலைவாழ் மக்களின் இன்னல்களை, கர்நாடகத் தமிழர்களின் அவல நிலையை, உளுத்துப்

**கானகன்**

போன அரசு இயந்திரத்தின் செவிட்டு காதுகளுக்கு உரத்து எடுத்துரைக்கவே, ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவே, ராஜ்குமாரைக் கடத்தியதாகவும் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டாலும் செய்தி மக்களுக்குப் போய்ச் சேர்ந்ததே ஒரு வெற்றியென்றும் கூறியிருக்கிறார்.

அவரைப் பொறுத்தவரை, பணம், ஆயுதங்கள் லாபம். பின்னாளில் ஏதாவது பயங்கரவாதச் செயலில் உள்ளேயிருக்கும் இளைஞர்கள் ஈடுபடமுடியும்.

நெடுமாறன் இன்னும் சில நாட்களுக்கு தொலைக்காட்சிகளுக்கு பேட்டி கொடுத்து மகிழ்ச்சியடையலாம். தமிழினவாதக்குழுக்கள் அவருக்கு பாராட்டு தெரிவித்து கூட்டங்கள் நடத்தலாம், பத்திரிகைகளில் புகழ்ந்தெழுதி புளகாங்கிதம் அடையலாம். அதெல்லாம் சரி, பிறகு?

இந்த சாதனையின் காரணமாக தமிழ்நாட்டில் தமிழ்தீவிரவாத இயக்கங்கள் பெரிய அளவில் வலுப்பெற வாய்ப்பிருக்கிறதா வென்றால், இல்லை. விடுதலைப்புலிகள் தமிழகத்தில் மீண்டும் காலூன்றினால் பாரதூரவிளைவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், ஜெயலலிதாவும் மற்ற போலி தேச பக்தர்களும் புலம்புவதைப் போல, தனித்தமிழ்நாடு கோரிக்கையோ அல்லது எவ்விதமான அதிதீவிர நிலைப்பாடோ மக்களின் ஆதரவைப் பெறப் போவதில்லை. இனவாத அரசியலை தமிழர்கள் மறந்து பல ஆண்டுகளாகிவிட்டன.

'பாப்பாத்தி ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வரப்போகிறார்' என்று நம்பி அவர் காலில் பலர் விழுந்துகொண்டிருக்கிறார்கள். சூத்திரர்கள் நடத்தும் சன் டீ.வி.யில், ஆயிரக்கணக்கில் தமிழர்கள் தினமும் பார்த்து ரசிக்கும் அந்தச் சானலில், பார்ப்பனீயத்தாக்கம், அப்பப்பா, சொல்லிமாளாது. அய்யராத்து மாமிகள் அதிகம் பார்க்கிறார்கள், என்பதால் கதைகளிலிருந்து எல்லாம் பார்ப்பனமயம்.

பார்ப்பன இளைஞர்கள் கம்ப்யூட்டர் துறையில் நுழைந்து அமெரிக்கா போவதைப் பார்த்து பார்ப்பனரல்லாதோரும் அமெரிக்கக் கனவு காணத் தொடங்கிவிட்டார்கள்.



இந்தச் சூழலில் தமிழர்கள் உரிமைபற்றி கவலைப்பட யாருக்கும் நேரமில்லை. எனவே தமிழ்தீவிரவாதம் பெரிய அளவில் செல்வாக்கு பெற்றுவிடும் என்பதற்கான அறிகுறிகளேயில்லை.

இன்னுஞ் சொல்லப் போனால், உச்ச நீதிமன்றத்தில் கண்டனக்கணைகளினால் சற்று நிலைகுலைந்திருக்கும் இரு அரசுகளும் வீரப்பனைப் பிடிக்க அதிரடிப் படையினரை முடுக்கிவிடவே தயாராகிக் கொண்டிருக்கின்றன.

அதுவும் தனது நம்பிக்கைக்குரிய நக்கீரன் கோபாலை அவமானப்படுத்தியதற்காக நெடுமாறன் மீதும், வீரப்பனை தற்போது இயக்கி வரும் மாறன் போன்றோர் மீது கடுங் கோபத்தில் இருக்கும் கருணாநிதி, வீரப்பனைப் பிடிக்கத் திட்டமிடலாம். சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் அப்படி ஏதாவது ஸ்டண்ட் கூட அடிக்கலாம்.

ராஜீவ் கொலைகாரணமாக தமிழகத்தில் இழந்துவிட்ட செல்வாக்கினை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளத் துடிக்கும் எல்.ரீ.ரீ.யினரின் திட்டங்கள் நாளடைவில் சிதைந்துவிடவும் கூடும்.

ஆனாலும் அவர்களின் தூண்டுதலால் தமிழ்நாடு விடுதலைப்படை போன்ற அமைப்புக்களை சிறிய, பெரிய பயங்கரவாத செயல்களில் ஈடுபடும், வேலையற்ற இளைஞர்கள் அவற்றால் ஈர்க்கப்படுவார்கள்; அர்த்தமற்ற போராட்டங்களில் இறங்குவார்கள். ஒரு சில ஆண்டுகளுக்கு அவர்களால் அரசு இயந்திரத்திற்கு கடும் சோதனைகளை உருவாக்க முடியும். ■

## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

சற்று வித்தியாசமான விடயத்தை- எம் மக்களின் சாதனையை- அதனால் பலர் படும் வேதனையை இம்முறை எழுதுகின்றேன். இதனை எழுதும் பொழுது எனது ஒரு கண்ணில் இருந்து நீர்வடிந்தபடியே உள்ளது. முன்நெற்றியிலும் உச்சந்தலையிலும் பிடரியிலும் தோள்பட்டையிலும் குத்துவலி சுண்டி இழுக்கிறது.

ஏதோ குழவிக் கூட்டிற்கு கல்லால் எறிந்ததால் குழவியிடம் கலைத்துக் கலைத்து குட்டுவாங்கியதாக எண்ணவேண்டாம்.

இவை அனைத்திற்கும் உபயகாரர் வெயில் இல்லாத போதும், மழைபெய்யாத போதும், வீட்டால் புறப்பட்டது முதல் அனுமான் கதாயுதம் போல் தம் குடைகளை தூக்கி சுழற்றியபடி செல்லும் குடைபிடி மக்களே.

நல்ல பொருட்கள்- அது என்ன விலையோ-வாங்கவேண்டுமென்றால் எம்மவர் தெரிவு வெள்ளவத்தை நடைபாதை சந்தைதான். அருத்துசா வீதி முதல் சப்பல் லேன் வரை மிக நீண்ட நடைபாதையில் பாதி இடத்தை நடைபாதை வியாபாரிகளும், மீதி இடத்தை பாதசாரிகளும் பங்கிட- இடித்து மோதி முன்னேறி, செல்வதுதான் ஒரேவழி என்பதால் இந்த குடைபிடி மக்களின் குத்துக்களில் இருந்து தப்பிச் செல்வோர் பாக்கியவான்களே.

குனிந்து பொருள் வாங்கியவர் நிமிர்ந்து திரும்புமுன் பிடறியில் ஒரு டொக் குத்துவிழும். பின்னால் நிற்கும் குடைபிடி பெருமக்கள் அதைப்பற்றி எதுவும் அலட்டிக் கொள்ளாமல், அடுத்த இலக்கிற்கு முன்னேறிச் செல்ல பிடரியில் குத்துவாங்கியவர் போறவரை முறைத்து திரும்ப, விழும் நெத்தியில் ஒரு குத்து. ஆகா... இதனை அடுத்த குடைபிடி அன்பர் சாதித்திருப்பார். ஆக திரும்பிய பக்கம் எல்லாம் குடைகளை சமாளித்து வெளியேறிய பின் பலபகுதிகள் பதம் பார்க்கப்பட்டிருக்கும்.

நெருக்கடியான சனப்புழக்கத்தில் குடையை சுருக்கி பின் விரித்தால் குடை தேய்ந்துவிடும் என்பதுபோல் அவை விரிந்தபடியே வீதி உலா வரும்.

சற்று உயர்த்திப்பிடிப்பதும் ஸ்ரைல் இல்லைத்தானே? இதில் தெரிந்தவர் இருவர் சந்தித்துவிட்டால் மிகவிசேசம். ஏரியாவையே குத்தகைக்கு எடுத்து, போவோர் வருவோர் எல்லாம் இருவரின் குடைக்கும் கீழால் புகுந்து வெளியேறும் பயிற்சியில் ஈடுபடவேண்டியதுதான்.

கனடாபோன கடைசிமகள் புதினம் முதல் கௌரிவிரதம் வரை களநிலவரங்களை பேசியபடியே தாம் வாங்கிய பொருளுக்கு பணம் கொடுக்கும்போது குடைகள் அவர்கள் தோளுக்கும் கழுத்திற்கும் இடையில் இடம்மாறி சுழன்று சுழன்று பலரை பதம்பார்க்கும் அந்த கண் கொள்ளாக் காட்சியை காண குத்துவாங்காத கண்வேண்டும்.

ரியூசன் பாவையரும் தம்பங்களிப்பை செய்ய தவறுவதில்லை. கும்பலாக நடைபாதையை மறைத்து குத்தகைக்காரர் போல் வருவார்கள். அவர்களில் ஒருவர் பிரியும் காட்சி சுவாரசியமானது.

"ஓமப்பா பின்னேரம் வருவனப்பா. அன்ரிற்ர சொல்லுமப்பா" என பம்பரம் போல் குடையை சுழட்டும் மங்கையரால் மண்டைகிழிய குட்டுவாங்கியவரின் "நாசமறுப்பாளவை" என்ற முனகலுக்கு "சொறி அங்கிள்" என்ற கனிமொழி இதமாகிவிடுவதும் உண்டு.

யான் பெற்ற துன்பம் போல் பலரும் பட்டிருப்பார்கள். என்பதனால் குடைபிடி அன்பர்களிடம் ஒரு குறைந்தபட்ச கோரிக்கை! உங்கள் உரிமைகளில் நாம் தலையிடமுடியாவிட்டாலும் எங்கள் தலைகளைக்காத்துக் கொள்ள உங்களுடன் ஒரு விசில் எடுத்துச் செல்லுங்கள். அவ்வப்போது ஒலி எழுப்புவீர்களானால் நாம் நிலத்தில் குந்திவிடுகிறோம்; நீங்கள் முன்னேறிச் செல்லும்வரை. எது எம் மண்ணில் எமக்கு பங்கர்தந்த பாடமல்லவா? ■

**~குத்தியன்~**

# இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அதிகரிக்கும் சர்வதேச கரிசனை

அலசுவது - இராஜதந்திரி

இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் சர்வதேச சமூகத்தின் கவனம் பெரிதும் ஏற்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் சிலவாரங்களுக்கு முன்னர் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இப்பேச்சுக்கள் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து மீளவும் அரசதரப்புக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே சமரச முயற்சிகள் சம்பந்தமாக சந்திப்புக்களை நடத்தப் பெரிதும் உதவுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் ஏகோபித்த முன்னேற்றத்துக்கும், ஒரு நீடித்த சமாதான, சகவாழ்வுக்கும் வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமானதாகின்றது.

கடந்த சுமார் இரு தசாப்தகாலமாகவே நீடித்து வருகின்ற வடக்கு-கிழக்கு யுத்தம் 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களைப் பலியெடுத்துள்ளது. அத்துடன் பல கோடிக்கணக்கான பெறுமதிவாய்ந்த சொத்துக்கள், உடமைகளுக்கும் பெருமளவிலான சேதங்களையும் வடக்கு-கிழக்கு யுத்தம் ஏற்படுத்தி விட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் எற்பட்ட உயிர், உடமைச் சேதங்கள் என்பவற்றை விட அகதிகள், அநாதைகள், விதவைகள் என்று பல்லாயிரக்கணக்கான மக்கள் பெருமளவு மனிதாபிமானப் பிரச்சனைகளையும் எதிர் நோக்கியோராக இருக்கின்றனர்.

இலங்கையின் பொருளாதாரம் எவ்விதத்திலும் ஒருவளர்ச்சிப் போக்கை எட்டமுடியாது ஆரோக்கியமற்ற நிலைக்கே தள்ளப்பட்டதாக இருந்து வருகின்றது.

யுத்தத்தினால் சமூகவிரோத சக்திகளும் விழிப்படைந்து நாட்டில் பலதரப்பட்ட வகையிலும் கொடூரமான குற்றச் சம்பவங்களும் பெருகிவருவதையே அவதானிக்கமுடிகின்றது.

இந்நிலையில் இலங்கையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வைக்காணமட்டுமல்ல, நாளுக்கு நாள் மோசமடைந்து செல்லும் சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்பினருக்குமிடையிலான பேச்சுக்கள் இடம்பெறவேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் ஜனாதிபதி சந்திரிக்காவையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இவ்விருசந்திப்புகளும் நோர்வேயின் சமரசமுயற்சிகளைப் பொறுத்தவரை மிகவும் பிரயோசனமானவை என்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இத்தடவை வடக்கு-கிழக்கில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ் அரசியல் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, தமிழீழவிடுதலைக் கழகம், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் என்பவையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்குமிடையே சமரசப் பேச்சுக்கள் இடம் பெறுவதைப் பெரிதும் வரவேற்றுள்ளன.

இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை எப்போது ஆரம்பமாகுமென்பதே அரசியல் அவதானிகளின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

நோர்வே சமரச முயற்சிகள் தொடர்பாக சாதகமான முறையில் செயல்பட ஆரம்பித்துள்ள இத்தருணத்திலேயே, பிரிட்டனின் கனிஷ்ட வெளிவிவகார அமைச்சரான பீற்றர் ஹெய்னும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச அரங்கை எடுத்து நோக்கும் பட்சத்தில் இன்று மேற்குலக நாடுகள் பல்வேறு அரசியல் விடயங்கள் தொடர்பாக ஒன்றையொன்று நன்கு அனுசரித்து வருபவையாகவே இருந்து வருகின்றன.

ஐரோப்பிய நாடுகள் தம்மிடையே அரசியல் சமூக, பொருளாதார விடயங்களில் ஒற்றுமையை வெளிப்படுத்திவருவதோடு ஐரோப்பிய யூனியன் என்ற அமைப்பையும் தமது நடவடிக்கைகள் தொடர்பாகச்சிருஷ்டித்துள்ளன.

எனவே ஐரோப்பிய சமூக நாடுகள் இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் ஆர்வங் காட்டிவருவதோடு விரைவானதொரு அரசியல் தீர்வையும் வலியுறுத்துபவையாக இருந்து வருகின்றன.

ஐரோப்பிய யூனியனில் பிரிட்டன் ஒரு முக்கிய நாடாக இருக்கின்றது. நோர்வே இந்த யூனியனுக்கு நிதியுதவி வழங்குகின்ற ஒரு தேசமாக இருந்துவருகின்றது.

இந்நிலையில் நோர்வேயின் சமரசமுயற்சி இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் ஏற்படுவதை பிரிட்டன் வரவேற்றுள்ளதையே பிரிட்டனின் கனிஷ்ட வெளிவிவகார அமைச்சர் திரு.பீற்றர் ஹெய்னின் கருத்துக் கண்ணோட்டங்கள் எடுத்துக் காட்டுபவையாக இருக்கின்றன.

திரு.பீற்றர் ஹெய்ன் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அரசதரப்பினர் தொடர்ந்து கூறிவருவதை நிறுத்தி அரசியல் பேச்சுக்களுக்கான முயற்சிகளில் இறங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.


திரு.பீற்றர் ஹெய்ன் வெளியிட்டுள்ள இக் கருத்துக் கண்ணோட்டம் காலமறிந்து தெரிவிக்கப்பட்டதாகவே இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக இயங்கி வருகின்ற ஓர் அமைப்பினர் என்பதை அனைவருமே நன்கறிவர். அவர்கள் தமது அரசியல் இலக்கை அடைய ஆயுதப்போராட்டத்தை ஒரு சாதனமாகக் கொண்டுள்ளதை வெளிப்படையாகவே தெரிவித்துமுள்ளனர்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப் பாட்டை நன்கறிந்து வைத்துள்ள நிலையில் அவர்களைப் பயங்கரவாதிகள் எனக் கூறி ஒதுக்கிவருவது எவ்வகையிலும் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு உதவமாட்டாதென்றே கருதமுடியும்.

பிரிட்டிஷ் கனிஷ்ட வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன் தமது அபிப்பிராயங்களை மேலும் வெளியிடுகையில், வட அயர்லாந்துப் பிரச்சனையையும், இலங்கைப் பிரச்சனையோடு ஒப்பிட்டிருந்தார்.

வட அயர்லாந்துப் பிரச்சனையில் ஒரு முக்கிய போராட்ட சக்தியாக இயங்கிய அயர்லாந்து குடியரசு இராணுவமும் பிரிட்டிஷ் அரசுக்கு மிகவும் நெருக்கடிகளையே கொடுத்து வந்திருந்தது.



பிரிட்டிஷ் கனிஷ்ட வெளிவிவகார அமைச்சர் பீட்டர் ஹெய்ன்.

பிரிட்டனின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் இளவரசர் சாள்ஸின் அன்புக்குப்பாத்திரமாகத் திகழ்ந்தவருமான மவுண்ட்பேட்டன் பிரபு கூட ஐரிஷ்குடியரசு இராணுவம் நடத்திய குண்டுத்தாக்குதலொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தவிர பிரிட்டனைக் கிலிகொள்ளச் செய்யும் விதத்தில் ஐ.ஆர்.ஏ. அமைப்பினர் அவ்வப்போது பல்வேறு விதமான தாக்குதல்களையும் மேற்கொண்டே வந்திருந்தனர்.

ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வடஅயர்லாந்துப் பிரச்சனை தொடர்பாக மிகவும் நிதானமான முறையிலேயே நடந்து கொண்டனர்.

உலகில் ஒரு முக்கிய இராணுவபலங் கொண்ட நாடாகவே பிரிட்டன் இருந்துவருகின்றது. பிரிட்டனின் முப்படைகளும், வியக்கத்தக்க விதத்தில் நவீன யுத்த தளபாடங்களைக் கொண்டவையாகவும் இருந்துவருகின்றன.

இருந்தபோதிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வட அயர்லாந்துப் பிரச்சனையை அரசியல் ரீதியாகவே தீர்க்க வேண்டுமென்பதில் ஆர்வத்தை வெளிப்படுத்திவந்திருந்தனர்.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினருக்கெதிராக விமானக் குண்டுவீச்சுக்களை நடத்தியோ அல்லது கனரக பீரங்கிகள், கடற்படைக் கப்பல்களைப் பாவித்தோ பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பிரச்சனைகளை வளரவிடவில்லை.

இதன் காரணமாகவே வட அயர்லாந்துப் பிரச்சனை பூதாகரமாக மாற்றமடைவதை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தவிர்த்துக் கொண்டதோடு, அப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வுகளை எட்டுவதிலும் முன்னேற்றங்கண்டுள்ளனர்.

பிரிட்டனின் கனிஷ்ட வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ன், வட அயர்லாந்துப் பிரச்சனையை முன்னுதாரணம் காட்டியுள்ளதோடு, அப்பிரச்சனையை பிரிட்டன் கையாண்ட பாணியில் இலங்கையும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அரசியல் தீர்வொன்றைக் காண முன்வரவேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனையை எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் பிரிட்டனுக்கும் அப் பிரச்சனையோடு நிறையவே சம்பந்தமிருப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கை பிரிட்டனின் காலனித்துவ நாடாக ஒருநூற்றாண்டு காலத்துக்கும் மேலாக இருந்துள்ளது.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையில் இருவேறு முக்கிய இனங்கள் இருப்பதை பிரிட்டிஷார் நன்கறிந்திருந்தபோதிலும், பெரும்பான்மைச் சிங்கள இனத்தலைவர்களிடமே இலங்கையின் எதிர்காலத்தைக் கையளித்திருந்தனர்.

ஆனால் இலங்கையின் இன, மத வாதங்கள் என்ற குறுகிய வட்டத்தினுள் தம்மை வைத்துக் கொண்ட சிங்கள இனத்தலைவர்கள் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நடந்து கொள்ள முடியாமல் இருந்து வந்துள்ள்தையே அவதானிக்க முடிந்தது.

இலங்கைக்குச் சுதந்திரத்தை வழங்கிய தருணத்திலேயே பிரிட்டிஷார் இலங்கையிலிருந்த பிரதான இனங்களின் அரசியல் நிலைப்பாடுகளை உரியவகையில் வரையறை செய்திருப்பார்களேயானால் ஓர் இரத்தப் பிரவாகம் எற்படுவதை இலங்கையில் என்றோ தவிர்த்திருக்க முடியும்.

இந்நிலையில் இலங்கை இனபிரச்சனை தொடர்பாகத் தனது கரிசனையை வெளியிடுவதில் பிரிட்டனுக்கும் பூரண உரிமையுண்டென்றே கருதலாம்.

திரு.பீட்டர் ஹெய்ன் நோர்வேயின் சமாதான முயற்சிகளை வரவேற்றுள்ளதோடு, பல்வேறு உலக நாடுகளும் இச்சமரச முயற்சியை மிகுந்த ஆவலோடு அவதானிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையைப் பொறுத்தவரை நவம்பர் மாதம் கடந்த சில வருடங்களாகவே முக்கியத்துவம் மிக்கதாக இருந்து வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் வாரம் இம்மாத இறுதிப் பகுதியிலேயே அனுஷ்டிக்கப்படுகின்றது.

மாவீரர் வாரத்தின் இறதிநாளன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது அமைப்பின் அரசியல் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளார்.

கடந்தகாலங்களில் அவரது மாவீரர் வார உரைகள் அரசியல் தீர்வு, மற்றும் சமரச முயற்சி என்பவைகுறித்து அவர் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களை வெளிப்படுத்துபவையாகவும் விளங்கியிருந்தன.

இந்நிலையில் நோர்வேயின் சமரச முயற்சி மற்றும் சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ள கரிசனை என்பவற்றுக்கு மத்தியில் இவ்வருட மாவீரர் வார உரையில் திரு.பிரபாகரன் எதனைக் கூற விருக்கிறார் என்பதையே இலங்கையின் அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமுள்ளன.


ஒரிருவாரங்களுக்கு முன்னர் இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்திய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதில் தமக்கிருக்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் குறித்த சாதகமான கருத்துக்கள் சமாதான விரும்பிகளை மிகவும் உற்சாகப்படுத்துபவையாகவே இருக்கின்றன.

இராணுவ ரீதியான நிலைப்பாடுகள், மற்றும் அதனூடாக யுத்தத்தை முன்னெடுப்பதால் எவருக்கும் எவ்வித பயனும் கிடைத்துவிடப் போவதில்லை என்பதையே கடந்தகால அனுபவங்கள் எடுத்தியம்புகின்றன.

அழிவுக்குமேல் அழிவுகள் சூழ்ந்துள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசதரப்பினருக்குமிடையிலான நேரடிப் பேச்சுக்களிலேயே இலங்கையின் சுபீட்சம் பெரிதும் தங்கியுள்ளதென்றே கருதலாம்.

## அதிரடி அய்யாத்துரை



**இராணுவத்துக்கு** ஆட் சேர்க்க பகீரதப் பிரயத்தனம் மேற் கொள்ளப்படுகிறது. பணம், பதவி உயர்வு, என்றெல்லாம் நிறையவே வாக்குறுதிகள் வழங்கப் படுகின்றன. பணத்தைக் கண்டால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். ஆனால் இராணுவத்தில் சேருவது விடயத் தில் யுத்தப்பகுதிகளிலிருந்து வரும் பிணங்களைக்கண்டு சலித்துப் போன சிங்கள இளைஞர்கள் "பணமும் வேண்டாம் பதவியும் வேண்டாம் எம்மைச் சும்மாவிட்டால் காணும்" என்று சண்டை பிடிப்பதையே வெறுத்து நிற்கிறார்கள்.

**ஒரு காலத்தில்** யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு மிடையே ரயில் சேவை ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் என்று இடம் பெற்றது. ரயில் திணைக்களத்துக்கும் ஏகப்பட்ட வருமானம். ஆனால் தண்டவாளம் வழியாகக் கிடைத்த அவ் வருமானம் இப்போ வான் வெளி வழியாகக்கிடைக்கிறது. பலாலிக்கும், இரத் மலானைக்குமிடையே விமானப்போக்குவரத்து. நூறு ரூபாக்களுக்கும் குறைவான கட்டனத்தில் யாழ்ப்பாணம்-கொழும்பு பயணம் இருந்த நிலைமாறி பல அயிரம் ரூபாக்களில் ஆகாயப் பயணத்துக்கு வாரி இறைக்க வேண்டியிருக்கிறது.

**சக்தி தொலைக்காட்சி** மற்றும் ஒலிபரப்புச் சேவை அவற்றின் இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் கலாரசனைக்கு விருந்தளிப்பதாக சக்தி டி.வி.யின் பணி விளங்குகிறது. கடந்த இரு வருடகாலத்தில் சக்தி வழங்கும் நிகழ்ச்சிகள் பாராட்டப்படக் கூடியவையாக இருக்கின்றன. அதன் ஒளிபரப்பு சகலதிசைகளிலும் எதிரொளிக்க வேண்டுமென இரசிகர்கள் விரும்புகிறர்கள் சக்தியின் தமிழ்ப்பணி மேலும் சக்திபெற வாழ்த்துக்கள்!

**இலங்கையின்** பொருளாதாரம் வளர்ச்சி பெறும் அறிகுறி சிறிதளவேனும் இல்லை. ஆனால் தலைநகர் கொழும்பில் ஒன்று மட்டும் ஒரு பில்லியன் அளவையும் எட்டியதாக வளர்ச்சிகண்டிருக் கிறது. கொழும்பு மாநகரின் குப்பை கூளங்களின் தொகை நாளொன் றுக்கு ஒரு பில்லியன் தொன்களையும் தாண்டியுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. யுத்தச் சீரழிவு, அரசியல் சீரழிவு இவற்றுடன் நாற்றெமெடுக் கும் அசுத்தங்களும் நாட்டு மக்களை அச்சுறுத்துகின்றன. டெங்குநோய் அசுரன் கூத்தாடிக் கும்மாளம் போடத் தொடங்கிருக்கிறான்.

**வியட்நாமில்** அமெரிக்கா நடத்திய யுத்தத்தில் மூன்று மில்லியன், அதாவது முப்பதுலட்சம் வியூட்நாமிய மக்கள் கொல்லப் பட்டனர். 50 ஆயிரத்துக்குமதிகமான அமெரிக்க படைவீரர்களும் பலியானார்கள். அமெரிக்கா என்றதும் வியட்நாமியர்களுக்கு சிம்ம செப்பனம். ஆனால் இப்போ யுத்த வடுக்களையெல்லாம் மறந்து அமெரிக்காவின் நட்பை வியட்நாம் நாடிநிற்கிறது. அரசியலில் தான் நீடித்த பகையும் இல்லை. நட்பும் இல்லை என்பார்கள். வியட்நாமில் யுத்தத்தைப் பொறுத்தவரை கூட பகைமை நீடிக்காது நட்புக்கு வடிகாலிடப்பட்டுள்ளதையே காணமுடிகிறது.

## திகில் தொடர்

# தீக்குள் விரல்

பட அதிபர் தாணுமாலயமாமணி புதுக்கதாநாயக நடிகனான சிவப்பிரகாஷ், வீணாக அலறி பிலிமை வீணாக்கி விட்டானே என்று கோபமடைந்தார்.

சினிமாஸ்கோப்-ஈஸ்ட்மென்கலர் நெகட்டிவ் பாழாகி விட்டதே என்று காமிராமேன் வடிவாவும் முகம் சுளித்தான்.

அந்த காதல் காட்சி ஏரோநட்டிவ் காமிரா மூலம் வீடியோ காமிராமேன் சுகவதனம் படமாக்கிக் கொண்டிருந்ததால், அவன் நிறுத்தாமல் ஒவ்வொருவர் அசைவுகளையும் 'கவரேஜ்' செய்து கொண்டிருந்தான்.

"என்னய்யா... பசி எடுத்தால் ஃபிலிமையா சாப்பிடுவது? இதனாலதான் கத்துக்குட்டி புது முகம் என்றாலே எனக்குப் பயம்," என்று சாடினார் பட அதிபர்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு டைரக்டர் வசீகர், பிறர் தன்னை, குறிப்பாக கதாநாயகி ரத்னா மெச்ச வேண்டும் என்பதற்காக நிறையவே தோள்பட்டையை குலுக்கிக் கொண்டு உடம்பை அலட்டினார்.

ஆனால், வீடியோக்காரன் தொடர்ந்து ஏரோநட்டிவ் கமிராவை நிறுத்தாமல் இயக்கிக் கொண்டிருக்கிறான் என்பது அவருக்குப் புரியவில்லை.

டைரக்டர் வசீகர் ஸ்கவுட் மாஸ்டர் போல் தூய வெள்ளை அரைக்கால் சட்டையும், வட்டவடிவ தொப்பியும் அணிந்து சிறிய விசிலை அதே நிறச் சட்டையும் கழுத்தில் தொங்க விட்டிருந்தார்.

இளமைத் துடிப்புள்ள உற்சாகமான பெரிய டைரக்டர் என்பதை கித்தாப்புடன் எடுத்துக் காட்ட ஏகப்பட்ட சுறுசுறுப்பு காட்டினார்.

குறிப்பாக தன்னை இரண்டு பேர் மெச்ச வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஒன்று கடாமீசைக்கு சொந்தக்காரரான பட அதிபர் தாணுமாலயமாமணி. இன்னொன்று இளமை ததும்பி வழியும் புதுக் கதாநாயகியான ரத்னா.

அவளுக்கும், தனக்கும் காதல் என்று பத்திரிகைகளில் 'கிசுகிசு' செய்தி வராதா என்ற ஆதங்கம்.

"ஒன் மோர் டேக்!" என்று கூவிய அவர், "இந்தா மேன் இப்போ நாம் மானிட்டர் போகிறோம். பாட்டுக்கு ஏற்ப லிப் மூவ்மென்ட் கொடுத்து ஒழுங்காக 'ஆக்ட்' பண்ணிக் காட்டு." டைரக்டர் இதை 'பந்தா' தோரணையில் சொல்ல, நடிகர் சிவப்பிரகாஷ் மிரண்டு விழித்தான். ஏற்கனவே முகத்திலிருந்து உடம்பு பூராவும் வியர்த்து கொட்டியது.

நெஞ்சுக்குள் இதயம் துள்ளும் ஒலி 'திக் திக்' என்று கேட்டு அவனது படபடப்பை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

"பிளே பேக்...." என்று டைரக்டர் குரல் கொடுத்தார்.

உதவி டைரக்டர் 'பிளேபேக்'கை இயக்க, பலவிதமான இசைக்கருவிகள் முழங்கின.

டான்ஸ் மாஸ்டர் கோபி கண்ணாவும், உமாவும் நடித்துக் காட்ட, நடிகர் சிவப்பிரகாஷும், நடிகை ரத்னாவும் கை கோர்த்தபடி நடனத்தை உற்று கவனித்தனர்.

பாடல் ஒலிக்க இருவரும் சேர்ந்தபடியே ஓடிவந்து உதிரிப் பூக்கள் பல வண்ணத்தில் பரப்பப்பட்ட தரையில் உருண்டு புரண்டு கழுத்தில் முத்தமிடுவது போல் பாவனை செய்தனர்.

கவிஞர் குருமுத்து எழுத சுந்தரன் இசையமைத்த அற்புதமான பாடல் அது. ஏராளமான பின்னணி இசை. டைரக்டரும், பட அதிபரும் திருப்தியடைய 'டச்சப்' என்று குரல் கொடுத்தார் படத்தின் துணை இயக்குனர்.

உடனே இரு ஆண், பெண் உதவி மேக்கப் கலைஞர்கள் சென்று ஹீரோவுக்கும், ஹீரோயினுக்கும் ஒப்பனையை மெருகேற்றி விட்டு வந்தனர்.

"டேக் ரெடி" என்று கத்தினார் டைரக்டர்.

உடனே கிளாப் பாய், கிளாப் போர்டை எடுத்துச் சென்று அவர்கள் முகத்தை மறைத்தபடி குனிந்து நின்றான்.

காமிராமேன் வடிவா டிராலியின் மீது நிறுத்தப்பட்டிருந்த காமிரா அருகில் நின்று உதவியாளர்கள் தள்ள காமிரா இயக்கத்தைப் பார்த்துக் கொண்டு திருப்தியடைந்து முன்பு போல் நின்றுகொண்டார்.

"காமிரா ரெடியா?"

"ஓ.கே., சார்."

"இனி டேக் போயிடலாம்," என்று டைரக்டர் சொல்ல டான்ஸ் மாஸ்டர் கையசைத்தார்.

"ரன்னிங்," என்றார் காமிராமேன்.

"பிளேபாக்," என்று டைரக்டர் கத்தியதும் இசையுடன் பாடல் முழங்க ஆரம்பித்தது.

கிளாப் பாய், "டம்டம் மூவிஸ் மலைக் காட்டு மங்கம்மா... சீன் டென்... டேக் டூ..." என்ற குரல் கொடுத்த படியே தாழ்வாக ஓடிக்கொண்டே மறைந்தான்.

ரத்னா, வெட்கம், கூச்சம் இரண்டையும் மறந்து, கதாநாயகன் சிவப்பிரகாஷை கட்டிப்பிடித்து முகத்துக்கருகே முகம் கொண்டு போனபோது, திடீரென்று பயங்கரமாக புருவங்களை நெளித்துக் கொண்டு பார்த்தாள். பார்த்த ரத்னாவின் முகம் மாறியது.

டைரக்டர் வசீகர் அதை கவனித்ததும் கோபமடைந்தார். முகம் மாறுவது காட்சிக்குப் பொருத்தமானதில்லையே என்று நினைத்து தனக்குப் பின்னால் நின்று காதல் ஆட்டத்தை பார்த்து கொண்டிருந்த படத்தின் கதை வசன கர்த்தாவும் பாடலாசிரியருமான கவிஞர் குருமுத்துவை பார்த்தார்.

### திகில் கதை மன்னன்
### பி.டி.சாமி

அவன், நடிகையின் அழகில் சொக்கிப் போய் முகமாற்றமே ஒருவிதமான நடிப்புத்தான் போலிருக்கிறது என்பது போல் நின்றிருந்தது தான்.

காமிராமேனுக்கு காட்சியமைப்பிலோ, நடிப்பிலோ அக்கறை இல்லை. இலக்கை தாண்டாதபடி தெளிவாக படமாக்கினாலே போதுமானது.

தண்டவாளம் போல் நீளமாக அமைக்கப் பட்டிருந்த ட்ராலியில் உதவியாளர்கள் காமிராவுடன், காமிராமேனையும் சேர்த்து தள்ளிக்கொண்டு போனார்கள்.

எல்லாருடைய பார்வையும் ரத்னா மீதே பாய்ந்திருக்க டான்ஸ் மாஸ்டர் கோபி, கண்ணா, அவளுக்கு என்ன ஆயிற்று என்பதை போல் பார்த்தார்.

தான் சொல்லிக் கொடுத்தது போல் அவளுடைய பார்வையில் காதல் நளினம் இல்லை. முகத்தில் பாவனை இல்லை. அது மட்டுமல்ல.... காமிராமேன் 'ஜூம்' லென்சை இயக்கும் போது உண்டாகும் 'க்ளோசப்' காட்சியில் அவளுடைய உதடுகள் பாடலின் வரிகளுக்கேற்ப ஒத்துழைக்கவில்லை.


அவன் உடனே டைரக்டருக்கு பின்னால் வந்து காதோரமாக போய், "சார்... லாங் ஷாட்டுக்கு லிப் மூவ்மென்ட் சரியாக இல்லை... வார்த்தைகள் 'ஜம்ப்' ஆகுது.... அதை கவனிச்சீங்களா...? பேஸ்...லுக்கிங் ரியாக்ஷன் எதுவுமே சரியாக இல்லே... 'கட்' சொல்லுங்கோ," என்று சொன்னான்.

அதன் பிறகுதான் அம்பாரம் பாளையம் ஏரிக்கரை பக்கம் ஷூட்டிங்கில் இருக்கிறோம் என்ற ஞாபகமே வந்தது. இதற்கு முன்னால் கற்பனையில் ரத்னாவோடு மிதந்து கொண்டிருந்தார்.

எத்தகைய பத்தினி நடிகையாக இருந்தாலும் டைரக்டர்ரை அனுசரித்து போனால்தானே படத்தில் குழப்பமின்றி நடிக்க முடியும்!

காமிராமேன் வடிவா டூயட் பாடல்காட்சியில் அவளுடைய நடிப்பில் குளறுபடி இருப்பதை ஆரம்பத்திலேயே தெரிந்து என்ன செய்வது என்று தோன்றாமல் திணறிக் கொண்டிருந்தான்.

இப்போது காமிரா இயக்கத்தை நிறுத்த முயன்றபோது அவள் "டாய்" என்ற மிகப் பலத்த குரல் அந்த பிராந்தியமே அலறும்படியாகக் குரல் கொடுத்தாள்.



அதிர்ச்சி திடுமென்று தாக்கக் காமிராவை நிறுத்த காமிராமேன் மறந்து விட்டான். காமிரா இயங்கி, படமாக்கிக் கொண்டே இருந்தது.

பட அதிபர் தாணுமாலயமாமணிக்கு எதுவும் புரியவில்லை. "புதுமுக நடிகையான ரத்னா ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்?

ரத்னாவை பார்த்தார். புருவங்கள் நெற்றிக்கு ஏற, கண்கள் இரண்டும் புடைத்துக் கொண்டு வெளியே வந்துவிடுவது போல் ஏன் வெறித்து நோக்குகிறாள்?"

கதாநாயகனை கட்டிப்பிடித்து கொண்டு நடித்த அவளுக்கு என்ன ஆயிற்று?

யாருக்கும் ஒருகணம் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

ஷூட்டிங்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொது மக்கள் திகைத்துப் போய் நடப்பதை அதுவும் ஷூட்டிங் தான் என்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தனர்.

அவர்கள் முன்னேறி வந்து விடாமல், தடுப்பதில் புரொடக்ஷன் மனேஜர் முரளீதரன் தீவிரமாக இருந்தான்.

ரத்னா திடீரென்று மேலும் உரத்த குரல் எழுப்பி "டேய் ஹீரோ பயலே... சிவப்பிரகாஷா... என்னையா கட்டிப் பிடிச்சே! இப்போது உன்னை என்ன செய்கிறேன் பார்! தலையைப் பறித்துப் பந்தாடுகிறேன்," என்று கத்தியவள், எகிறிக் குதித்து, அவனை கால்களைப் போட்டுப் பின்னிக் கொண்டு அருகே இருந்த ஏரிசரிவில் அவனோடு சேர்ந்து உருண்டாள்.

எல்லோரும் ஒரே நேரத்தில் "ஹோ" என்று பலத்த குரலோடு அலறிவிட்டனர்.

ஏனென்றால்.....

அந்த சரிவு கரடு முரடான ஏரிக்கரையாகும். சமீபத்தில் தொடர்ந்து பெய்த பேய் மழையால் ஏரி முழுமையாக நிரம்பியிருந்தது.

(திகில் தொடரும்)

---


# தத்துவம் பாடிய முத்தையா 3

**டாக்டர்.சு.சண்முகசுந்தரம்**

'தென்றல்' அலுவலகத்துக்கு ஒரு முறை வாடகைக்கு சோபா நாற்காலி வாங்கினார். ஆறு மாதத்திற்குள் அவற்றின் வாடகை அதன் விலையைவிட மூன்று மடங்கு ஆகிவிட்டது. அப்போது 'பாமா விஜய'த்துக்குப் பாட்டு எழுதும் நேரம். "வாடகை சோபா இருபது ரூபாய் விலைக்கு வாங்கினா முப்பதே ரூபா." என்று எழுதினார்.

ஒரு தடவை, திருப்பதிக்குப் போய் வந்தார். அதனால் கவலைகள் கொஞ்சம் குறைந்தன. இதனை, "திருப்பதி சென்று திரும்பி வந்தால்-ஒரு திருப்பம் நேருமடா-உன் விருப்பம் கூடுமடா" என்று எழுதினார்.

இவர் 'பகவத் கீதை' படித்துக் கொண்டிருக்கும்போது, 'காலங்களில் அவள் வசந்தம்' என்ற வரி தோன்றியது.



ஒரு முறை, எழும்பூர் கோர்ட்டில் உட்கார்ந்துகொண்டு இருக்கும் போது தான் 'ஆலயமணி'க்கான "சட்டி சுட்டதடா கை விட்டதடா" என்ற பாடல் உருவானது.

'கர்ணனு'க்குப் பாடல் எழுதும்போது காமராசரிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். அவரை நினைத்தே, "உள்ளத்தில் நல்ல உள்ளம்" என்ற பாடல் உருவாயிற்று.

இவரது முதல் மனைவி பொன்னழகி அம்மையார். அவரது இயல்பினையே 'பாலும் பழமும்' படத்தில்,

"உண்ணும் அழகைப் பார்த்திருப்பாயே
உறங்க வைத்தே விழித்திருப்பாயே
கண்ணை இமைபோல் காத்திருப்பாயே
காதல் கொடியே கண் துயில்வாயே"

என்று எழுதி வைத்தார்.

'பாவமன்னிப்பு'க்குப் பாடல் எழுத வேண்டும். கதாநாயகன் அனாதை. அழவும் சிரிக்கவும் முடியாத நிலைமை. திடீரென்று கவிஞருக்குப் ஃபோன் வந்தது. இவரது கம்பெனிக்குக் கடன் வசூலிக்க அமீனா வந்து அழைக்கிறான், கவிஞரோ இருதலைக் கொள்ளி எறும்பானார்.

"சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்-நான்
சிரித்துக் கொண்டே அழுகின்றேன்"

என்று எழுதினாராம்.

இசை இரட்டையர்களான விசுவநாதனும் ராமமூர்த்தியும் ஒரு காலத்தில் பிரிந்துவிட்டார்கள். ஒரு நாள் 'விசுவநாதன் மிகவும் வருத்தத்தோடு இருந்தார். காதலியின் பிரிவுக்கு டியூன் போட வேண்டும். "நீங்க வார்த்தை கொடுங் கண்ணே" என்றார் விசு.

"நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு
மறக்கத் தெரியாதா"

என்று கவிஞர் கூற விசு திகைத்து நிமிர்ந்தார். கவிஞர் பொறுமையாகச் சிரித்தபடியே தலையை அசைத்தார். நட்பின் பிரிவும் காதலின் பிரிவு போன்றது தானே?

1962ல் பொது தேர்தல். கண்ணதாசன் தி.மு.க.வில் இருந்து விலகி தமிழ்த் தேசிய கட்சியில் சேர்ந்தார். தேர்தலில் அவரது கட்சி தோற்றுப் போனது. இதனை இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அப்போது 'பலேபாண்டியா' படத்துக்குப் பாட்டெழுத வேண்டும்.

'யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும்
தெரியலே-அட
அண்டங் காக்காய்க்கும் குயில்களுக்கும்
பேதம் புரியலை"

இது, இவர் தனக்குத் தானே சொல்லிக் கொண்ட சமாதானம்தான் என்பார் இராம.கண்ணப்பன்.

"காவியத் தாயின் இளைய மகன்
காதல் பெண்களின் பெருந்தலைவன்
நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை"

என்று 'இரத்ததிலகம்' படத்தில் சுய விளக்கமாக ஒரு பாடல் எழுதினார்.

"கோப்பையிலே என் குடியிருப்பு
கோலமயில் என் துணையிருப்பு"

என்று தான் குடிப்பதையும் பெண் சபலம் கொள்வதையும் ஒப்புக் கொள்ளும் உத்தம குணமாகும். ஆனால் இன்னொரு விமர்சகர், கோப்பை என்பது மைபுட்டி என்றும் கோலமயில் என்பது எழுதுகோல் என்றும் விளக்கம் கூறினார். இது கவிஞரே எண்ணிப் பார்க்காத புதுப் பொருள்.

ஒரு அம்பத்தூர் கூட்டத்தில் பேசும் போது "ஒரு மனைவி போதும் என்பவன் இராமனை வணங்குகிறான், இரு மனைவி வேண்டும் என்கிறவன் முருகனை வணங்குகிறான். இரண்டுக்கு மேல் வேண்டும் என்பவன் கண்ணனை வணங்குகிறான். நான் கண்ணனின் தாசன்" என்றார்.

"ஊரெல்லாம் பெண்ணானால் நடுவுல
உட்கார்ந்து பார்த்து ரசிப்பேன்"

என்று 'இவ்வளவுதான் உலகம்' என்ற படத்தில் எழுத முடிகிறது.

"ஆறெல்லாம் கள்ளானால் அதுல
நான் விழுந்து நீச்சல் அடிப்பேன்"

என்று பாடுவது போல், கவிஞர் சுய நினைவோடு இருக்கும் பொழுதுகளை விட போதையில் மிதக்கும் பொழுதுகளே அதிகம். சுதந்திரத்தின வெள்ளிவிழாவில் மியூசிக் அகாடமி அரங்கில் இவரது தலைமையில் கவியரங்கம், அப்போது ஒரு கவிஞர் (யாரென்று பேர் ஞாபகமில்லை), இனி மேல் கவிஞர் 'குடிப்பதை நிறுத்த வேண்டும்' என்று கவிதையிலேயே வேண்டுகோள் விடுத்தார். அதற்கு இவர்,

"நாளை முதல் குடிக்க மாட்டேன்
சத்தியமடி தங்கம்
ராத்திரிக்குத் தூங்கவேணும்
ஊத்திக்கிறேன் கொஞ்சம்"

என்று பாடினார். பின்னர் 'நீதி' படத்திலும் இது இடம் பெற்றது.

ஒரு முறை அண்ணா கழக நண்பரை 'எங்கிருந்து வருகிறாய்' என்று கேட்டார். அதற்கு அவர் 'கருவூரிலிருந்து வருகிறேன்' என்று பதில் சொன்னார். உடனே அண்ணா, "எல்லோரும் கருவூரிலிருந்து சாவூர் போகிறவர்கள்தான்" என்று கூறினாராம். அருகில் இருந்த கண்ணதாசன் இதனை ரசித்தார். அவரது கற்பனை விரிந்தது. 'காட்டு ரோஜா' படத்தில்,

"எந்தவூர் என்றவனே இருந்த ஊரைச்
-சொல்லவா
அந்த ஊர் நீயும் கூட அறிந்த ஊர்
-அல்லவா?

உடலூரில் வாழ்ந்திருந்தேன் உறையூரில்
-மிதந்து வந்தேன்
கருவூரில் குடிபுகுந்தேன் மண்ணூரில்
-வீழ்ந்து விட்டேன்

கண்ணூரில் தவழ்ந்திருந்தேன் கையூரில்
-வளர்ந்திருந்தேன்
காலூரில் நடந்து வந்தேன் காளையூர்
-வந்து விட்டேன்

வேலூரைப் பார்த்து விட்டேன் விழியூரில்
-கலந்து விட்டேன்
பாலூறும் பருவம் என்னும் பட்டினத்தில்
-குடி புகுந்தேன்

காதலூர் காட்டியவள் காட்டூரில் விட்டு
-விட்டாள்
கன்னியூர் மறந்தவுடன் கடலூரில்
-விழுந்து விட்டேன்

பள்ளத்தூர் தன்னில் என்னை பரிதவிக்க
-விட்டு விட்டு
மேட்டூரில் அந்த மங்கை மேலேறி நின்று
-கொண்டாள்

கீழூரில் வாழ்வதற்கும் கிளிமொழியாள்
-இல்லையடா
மேலூரு போவதற்கும் வேளை வர
-வில்லையடா"

என்று முடித்தார்.

இப்பாடலில் உடலூர், உறவூர், கருவூர், மண்ணூர், கண்ணூர், கையூர், காலூர், காளையூர், வேலூர், விழியூர், காதலூர், காட்டூர், கண்ணியூர், கடலூர், பள்ளத்தூர், மேட்டூர், கரூர், மேலூர் என 18 ஊர்களைப் பற்றி பாடுகிறார். இதில் மனித வாழ்க்கை ஊர்ந்து செல்கிறது. உடல், கரு, கண், கை, கால், விழி, போன்றவை அதே பொருளைத்தரும். மண்ணூர் பூமியையும் கன்னி, காளையூர் பருவத்தையும், கடல் துன்பத்தையும், மேடு செல்வத்தையும் கீழ் பூமியையும் மேல் மரணத்தையும் குறித்து பாட்டைக் கவிதையாக உயர்த்திவிடுகிறது.

இது போலவே இன்னொரு முறை அண்ணா அவர்கள் நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 100வது படவிழாவில் கலந்து கொண்டு பாராட்டினார். தி.மு.க.வை விட்டு பிரிந்து காங்கிரஸில் இருந்த கணேசனை 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று வாழ்த்தினார். இது அனைவரையும் கவர்ந்தது போலவே கண்ணதாசனையும் கவர்ந்திருக்க வேண்டும். 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்துக்குப் பாடல் எழுதும்போது அதுவே பல்லவி ஆயிற்று.

ஒரு தடவை அண்ணா பேசும் போது, "நாடு, அதை நாடு, நாடா விட்டால் நமக்கு வீடில்லை" என்று பேசினார். கண்ணதாசன் இதனைக் கவனித்தார்-'நாடோடி' படத்தில் ஒரு பாடல் எழுதும்போது, "நாடு நாடு அதை நாடாவிட்டால் ஏது வீடு" என்று எழுதியிருக்கிறார்.

(தொடரும்)

# கூடை உடை



← மூங்கிலால் அமைக்கப்பட்ட கூடையைப் போன்றதொரு உடையை அணிந்து, நடந்து வரும் இப்பெண், அண்மையில் இலண்டனில் உள்ள ஃபாஷன் ஷோவில் தோன்றினார்.

புதரிலிருந்து புறப்பட்டு வருவதுபோல் வாய் வரை மறைத்து அணிந்திருக்கும் இந்த உடையை ஆர்கடியஸ் என்பவர் வடிவமைத்திருந்தார்.



## மாணவர்கள் கொடுத்த தண்டனை

↑ கிரிக்கெட் விளையாட்டு கனவான்களுக்குரிய விளையாட்டு என்று போற்றப்பட்டது. சினிமா நட்சத்திரங்களைவிட கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு உலகெங்கணும் பெரும் பெயரும், புகழும், பணமும் குவிந்தன. சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு. ஆனால் இன்று சூதாடிகளின் குகையென்று காறி உமிழும் அளவுக்கு கிரிக்கெட் உலகம் எள்ளி நகையாடப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் அதி சிறந்த விக்கெட் கீப்பர் என்று முன்னர் போற்றப்பட்ட நயன் மொங்கியாவின் கொடும்பாவிதான் இது. நவம்பர் மாத முதல் வாரத்தில் மும்பாய்(பம்பாய்) நகரத்தின் ஒரு வீதியில் இது கட்டித் தொங்கவிடப்பட்டது.

கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபாடு கொண்டு பயிற்சி பெறும் மாணவர்கள் ஒன்று திரண்டு, மொங்கியாவின் கொடும்பாவிக்கு கிரிக்கெட் மட்டைகளினால் அடித்து, கேவலப்படுத்துகின்றனர்.

கிரிக்கெட் ஆட்ட முன் நிர்ணய சூதாட்டங்களில் ஈடுபட்டார் என்று மொங்கியா மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டமையினால அவருக்கு இந்தத் தண்டனை!



## கரையொதுங்கிய திமிங்கிலம்

↑ ஆழ்கடலின் உள்ளே சீதோஷ்ண நிலை மாறுவதால் அங்கு வாழும் உயிரினங்களும் அவதிப்படுவதுண்டு. அப்படியான நிலையில் அதற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில்- அவை இறந்து கரையொதுங்குவது உண்டு.

சில வாரங்களுக்கு முன் அவுஸ்திரேலியக் கடற்கரை ஒன்றில் இறந்து ஒதுங்கிய திமிங்கிலம் தான் இது. இதன் நீளம் மட்டும் 8 மீட்டர்.



## பாவையும் பாதணியும்

↑ சீன நகர் ஒன்றின் பாதணிகளை உற்பத்தி செய்யும் தொழில்சாலை ஒன்றின் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் பெரியதொரு பொம்மை சப்பாத்திற்குள் காலை நுழைக்க முயல்கிறார் ஒரு பெண்.

உலகில் அமெரிக்காவிற்கு அதிகமான பாதணிகளை ஏற்றுமதி செய்யும் நாடு சீனா தான். படத்தில் பொம்மைச் சிறார்கள் இருவரில் ஒருவர் சப்பாத்திற்குள் காலை நுழைக்க, மற்றவர் வேடிக்கை பார்ப்பது போல் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் காட்சியில் வேடிக்கையாகத் தானும் பங்கு கொள்கிறார் இந்தப் பாவை.

தகவல் பெட்டி



## தட்டெழுத்துச் சாதனையாளர்

↑ படத்தில் தட்டச்சுக் கருவியை மடியில் வைத்தபடி அமர்ந்திருப்பவரது பெயர் லெஸ் ஸ்ரூவர்ட். அவுஸ்ரேலியாவின் குவின்ஸ்லாந்தைச் சேர்ந்த இவரது இருமருங்கிலும் குவிந்திருக்கும் காகிதக் கட்டுக்கள் இவரால் டைப் அடிக்கப்பட்டவை.

19 ஆயிரத்து 990 பக்கங்களுக்கு வெறும் எண்களாக டைப் செய்து கின்னஸ் சாதனை படைந்துள்ளார் இவர். இந்தச் சாதனையைச் செய்ய இவருக்கு 16 வருடங்களும் 7 மாதங்களும் பிடித்தன.

ஒரு தீ விபத்தில் சிக்கி ஒரு விரல் மட்டுமே இயங்கும் நிலையில் இருந்தும், உலக சாதனை படைத்திருக்கும் ஸ்ரூவேர்ட்டின் மன உறுதியையும் விடாமுயற்சியையும் பாராட்டாமல் இருக்க முடியாது.



## வெற்றிக்கொடி காட்டு

← இந்தியத் தலைநகர் புதுடில்லியில், இலண்டன்-டில்லி விமான சேவையைத் தொடக்கி வைத்தார் இங்கிலாந்தைச் சேர்ந்த பெரிய கோடீஸ்வரரான ரிச்சர்ட் பிரோன் ஸன் என்பவர்.

வேர்ஜின் அட்லாண்டிக் விமான நிறுவனத்தின் சொந்தக்காரரான ரிச்சர்ட், விமான சேவையில் முதலாவது பயணத்தின் போது விமானத்தின் உச்சியில் நின்று வெற்றியைக் கொண்டாடும் வகையில் இந்தியக் கொடியை அசைத்தபடி போஸ் கொடுத்தார்.

# முன்னணி நடிகையால் தண்ணீரில் மிதக்கும் மூன்றெழுத்து இயக்குநர்!

இப்போது தமிழ்த் திரையுலகில் முதலிடத்திற்கு வந்து கொண்டிருப்பவர் இந்தத் தங்கை நடிகை. சில வருடங்களாக முன்னணியில் இருந்த சில நடிகைகளைப் பின்னுக்குத் தள்ளிய பெருமை இந்த நடிகையையே சேரும்.

இந்த நடிகை இந்திப் படமொன்றில் நடித்து அது தோல்வியடைய, தமிழில் நடிக்க வந்தார். எப்படியோ ஒரு படத்தில் கதாநாயகியாக நடிக்க வாய்ப்பும் பெற்றார்.

இப்படத்தை 'வசந்த'மான இயக்குநர் ஒருவர் இயக்கினார். இப்படத்தை இயக்கிக் கொண்டிருந்த வேளையில், இயக்குநரிடம் பயிற்சி பெற்ற இளைஞர் ஒருவர் தனியாகப் படமெடுக்க ஆரம்பித்தார்.

நடிகையைக் காதலித்துக் கைப்பிடிக்க இளம் நாயகனைக் கதாநாயகனாக்கி, இரட்டை வேடத்தில் நடிக்க வைத்தார் இந்த இளம் மூன்றெழுத்து இயக்குநர். படத்தில் அண்ணன்-தம்பி என வில்லன்-கதாநாயகன் பாத்திரங்களை ஏற்றிருந்த நாயகனுக்கு ஜோடியாக அப்போது முதலிடத்தில் இருந்த 'ஸிம்' நடிகையை நடிக்க வைத்தார்.

குருநாதர் இயக்கத்தில் நடித்து வந்த இந்தக் 'குளுகுளு' நடிகை இளம் இயக்குநரின் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தினார். எப்படியாவது நடிகையின் மனதில் இடம்பிடிக்க விரும்பிய அவருக்கு சந்தர்ப்பமும் சாதகமாக அமைந்தது.

இளம் இயக்குநரது முதல் படமான இரண்டெழுத்துப்படத்தில் இருந்து முதலில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்ட நடிகை ஒருவர் விலக, 'குளுகுளு' தங்கை நடிகையை அந்த வேடத்தில் நடிக்க வைத்தார். இளம் நாயகனின் கற்பனைக் காதலி வேடத்தை நடிகையும் அசத்தலாக நடித்திருந்தார்.

முதல் படம் வெளிவருவதற்கு முன்னரே நடிகை சின்ன வேடத்தில் நடித்த படம் வெளியாகி வெற்றி நடை போட நடிகை பிரபலமானார். இதனால் இயக்குநர்-நடிகை நட்பு வளர ஆரம்பித்தது.

அதிரடியாகத் தனது இரண்டாவது படத்தைத் தொடங்கிய இயக்குநர் அதில் நடிகையைக் கதாநாயகியாக்கினார். அதில் 'குஷி'யாக நடித்து வந்த நடிகை அப்படத்தில் நடிக்கும் வரை இயக்குநரோடு இணைபிரியாமல் இருந்தார்.

இயக்குநரது இரண்டாவது இரண்டெழுத்துப் படமும் வெளியாகி பெரு வெற்றி பெற, நடிகை முன்னணிக்கு வந்து விட்டார். வேறு இயக்குநர்களது படங்களில் நடிகை நடித்து வருவதாலும், அப்படங்களைப் பற்றி இளம் இயக்குநருடன் அளவளாவத் தவறுவதில்லை.

இவர்கள் இருவரது நெருக்கம் திருமணத்தில் முடியும் எனப் பரவலாகப் பலர் பேசிக் கொண்ட வேளையில் 'சூப்பர்' நடிகருக்கு ஜோடியாக மூன்றெழுத்துப்படத்தில் நடிக்க ஒப்பந்தமானார் நடிகை. எப்படியோ அப்படத்தை இயக்கிய தாடிக்கார இயக்குநரைக் கவர்ந்து கொண்ட நடிகை, இளம் இயக்குநருடனான நட்பைத் துண்டித்து விட்டார்.

தாடிக்கார இயக்குநரின் அன்புக்குரியவரானால் அடுத்து 'சூப்பர்' நட்சத்திரத்தின் ஜோடியாக நடிக்கலாம் என்று கணக்குப் போட்டுத் தான் இளம் இயக்குநரது நட்பை கத்தரித்தார் தங்கை நடிகை.

வட நாட்டு நடிகைகளில் அநேகம் பேர் வாய்ப்புக்காக அடிக்கடி ஆளை மாற்றுவது ஒன்றும் அவர்களுக்குப் புதிதல்ல. இதை உணராத அந்த இளம் இயக்குநர் மனமுடைந்து போய்விட்டார்.

நடிகை தன்னை வெட்டி விட்டதை நினைத்து நினைத்து இரவு பகல் பாராது குடித்து வருகிறார் இளம் இயக்குநர். இப்படித் தண்ணீரில் மிதப்பதற்கு இப்போது முன்னணியில் இருக்கும் அந்தத் தங்கை நடிகை தான் காரணம் என்று அவரது நண்பர்கள் கூறுகிறார்கள்.

## 'வருஷம் 16' படமான பங்களாவில் 'டும் டும் டும்'

மணிரத்னம் தயாரிப்பில் அவரது உதவியாளர் அழகப்பெருமான் இயக்கும் படம் 'டும் டும் டும்'. மாதவன், ஜோதிகா ஜோடியாக நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்புகள் பெரும்பாலும் கேரள நகரான திருவனந்தபுரத்தில் இருக்கும் பங்களா ஒன்றில் படமாக்கப்பட்டன.

இந்த பங்களாவில் தான் கார்த்திக்-குஷ்பு நடித்துப் பெரு வெற்றி பெற்ற 'வருஷம் 16' படமாக்கப்பட்டது.

## ஊசி போட்டு உப்ப வைத்த அம்மா

முன்னாள் கவர்ச்சி நடிகையான அனுராதாவின் வாரிசு அபிநயாஸ்ரீ 'ப்ரண்ட்ஸ்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார்.

'ப்ரண்ட்ஸ்' படத்தில் விஜய்யை ஒரு தலையாகக் காதலிக்கும் வேடம் அபிநயாஸ்ரீக்கு.

"அம்மா போல கவர்ச்சியாகவும் நடிப்பேன்; குடும்பப் பாங்கான வேடங்களிலும் நடிப்பேன்." என்று கூறும் அபிநயாஸ்ரீ அச்சு அசலாக அம்மா அனுராதாவைப் போலவே இருக்கிறார்.

"பன்னிரெண்டு வயதான சின்னப்பொண்ணை ஊசிகள் போட்டு உப்ப வைத்து விட்டார் அவரது அம்மா" என்று தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் அனுராதாவுக்கு வேண்டப்பட்ட துணை நடிகை ஒருவர்.

## இருவர் எழுதுகிறார்கள்

அஜித்குமார் பல கெட்-அப்களில் நடிக்க சரவண சுப்பையா இயக்கும் 'சிட்டிசன்' படத்திற்கு இரண்டு வசனகர்த்தாக்கள் வசனம் எழுதுகிறார்கள்.

படத்தில் இடம்பெறும் நீதிமன்றக் காட்சிகளுக்கான வசனத்தை லியாகத் அலிகானும், ஏனைய காட்சிகளுக்கான வசனத்தை எழுத்தாளர் சுஜாதாவும் எழுதுகிறார்கள்.



கமல்-மீனா
படம்: தெனாலி



சாக்ஷி

## மீண்டும் ஒரு முப்பரிமாணப் படம்

இந்தியத் திரைப்பட வரலாற்றில் சாதனை படைத்து, 1984ம் ஆண்டின் இந்திய தேசிய விருது பெற்ற படம் தான் 'மைடியர் குட்டிச்சாத்தான்' என்ற முப்பரிமாணப் (3டி) படம்.

அப்பச்சனால் தயாரிக்கப்பட்டு ஜிஜோவினால் இயக்கப்பட்ட இந்தப் படத்தை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை குடும்பத்தோடு பார்த்துக் குதூகலித்தார்கள். சிலவருடங்களுக்கு முன் 'மைடியர் குட்டிச்சாத்தான்' கொழும்பிலும் திரையிடப்பட்டது.

பல வருட இடைவெளிக்குப்பின் இன்னொரு முப்பரிமாணப் படம் ஒன்றை எடுக்கவுள்ளார்கள். இந்த முப்பரிமாணப்படம் தமிழ்-தெலுங்கு-மலையாளம்-இந்தி ஆகிய மொழிகளில் படமாக்கப்படவுள்ளது.

## அடுத்த படத்திலும் ராம்கி

படவாய்ப்பின்றி இருந்த ராம்கியை 'பாளையத்து அம்மன்' படத்தில் கதாநாயகனாக நடிக்க வைத்த இராம நாராயணன் தனது இன்னொரு படமான 'ஷக்கலக்க பேபி' படத்திலும் ராம்கியை நாயகனாக்கி விட்டார்.

'யப்பா யப்பா ஐயப்பா' என்ற பெயரில் சத்யராஜ், ரோஜா நடிக்க தொடங்கப்பட்ட இப்படத்தில் பின்னர் சத்யராஜ் நடிக்க மறுத்துவிட, 'ஷக்கலக்க பேபி' என்று பெயர் மாற்றப்பட்டு நாயகன் இல்லாது படப்பிடிப்பு வேகமாக நடந்து வந்தன. இப்போது நாயகனாக ராம்கி நடிக்க படப்பிடிப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.



கமலேஷ்-நிஷா
படம்: டிக்

## வயிற்றைக் கலக்கும் தொடர்

தற்கொலை செய்து கொண்ட நடிகைகளின் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து அதிர்ச்சி கொடுக்கும் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது 'தமிழ் சினிமா டொட் கொம்' என்ற இன்டர்நெட் பத்திரிகை.

தற்கொலை செய்து கொண்ட நடிகைகளான ஷோபா, படாபட் ஜெயலட்சுமி, பிரவீனா, சில்க் சுமிதா, உட்பட பல நடிகைகள் தற்கொலைக்குக் காரணமானவர்களைப் பற்றி விலாவாரியாகச் சொல்லப்படும் இந்தத் தொடர் சம்பந்தப்பட்டவர்கள் வயிற்றில் புளியைக் கரைத்து வருகிறது.

...கப்பில் கார்த்திக்-தேவயாணி



ரம்பா
படம்: தங்கமும் பொட்டுக் கவுண்டர்

## இயக்குநரின் சிபார்சு

'என்னமாக்கண்ணு' படத்தில் 'நான் ஒரு பொம்பளை ரசினி...' என்று பாடி ஆடும் அல்போன்சாவுக்குப் போட்டியாக 'நான் ஒரு பொம்பளை கமலு...' என்று பாடி ஆடியவர் ஜோதிலட்சுமி.

இவரைத் தனது அடுத்த படமான 'மிஸ்டர் நாரதர்' படத்திலும் பாடல் காட்சியில் நடனமாட ஒப்பந்தம் செய்து விட்டார் இயக்குநர் சக்தி சிதம்பரம்.

அது மட்டுமன்றி 'மிஸ்டர் நாரதர்' படத்தைத் தயாரிக்கும் சுந்தர் தியேட்டர்ஸ் ஸ்ரீயாதவிடம் ஜோதிலட்சுமியின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லியுள்ளார் இயக்குநர்.

இதைக் கேட்ட ஸ்ரீயாதவ் தனது இன்னொரு தயாரிப்பான 'தாலி காத்த அம்மன்' படத்திலும் ஜோதிலட்சுமியை ஒரு பாடலுக்கு ஆட வைத்து விட்டார்.

## பாட்டுச் சத்தம் கேட்குதம்மா

'நாட்டுப்புறப்பாட்டு', 'வீரத் தாலாட்டு', 'கும்மிப்பாட்டு' என்று கிராமிய மணத்துடன் படங்களை இயக்கிய கஸ்தூரிராஜா அடுத்து இயக்கும் படங்களில் ஒன்றுக்கு 'பாட்டுச்சத்தம் கேட்குதம்மா' என்று பெயரிட்டுள்ளார்.

இதில் முரளி கதாநாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக ரம்பா நடிக்கிறார். இவர்களுடன் மணிவண்ணன், வடிவேலு உட்பட பலர் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை அமைத்து படத்தை இயக்குகிறார் கஸ்தூரிராஜா.

## 'பத்ரி'யான 'தம்முடு'

சிரஞ்சீவியின் தம்பி பவன் கல்யாண் நடித்த தெலுங்குப் படமான 'தம்முடு' தற்போது 'பத்ரி' என்ற பெயரில் தமிழில் தயாராகிறது.

தமிழில் விஜய் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் பூமிகா என்ற தெலுங்கு நடிகையும், சிம்ரானின் தங்கை மோனலும் கதாநாயகிகளாக அறிமுகமாகிறார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

முன் அழகுக்குப் பேர் போன அந்த நடிகை அண்மையில் கலைச்சேவை செய்ய வெளிநாடு ஒன்றுக்குப் போனாராம். அங்கு நடிகையின் அழகில் மயங்கிய சில தொழில் அதிபர்களுடன் ஒட்டிக் கொண்டு விட்டாராம். மற்ற நடிகைகள் தங்கி இருந்த ஹோட்டலில் தான் இவரையும் தங்க ஏற்பாடு செய்திருந்தார்களாம். ஆனால் நடிகையோ ஒரு நாள் கூட அந்த ஹோட்டலில் தங்கியதில்லையாம். அத்தனைக்கு ஆட்டம் போட்டாராம் அம்மணி.

பலமுறை பிரிந்து ஒன்றான குடும்பம் அண்மையில் மணமுறிவு பெற்று, ஒரேயடியாகப் பிரிந்தது பலருக்குத் தெரியும். மண முறிவுக்குப் பிறகும் இன்னும் பணம் கொடு என்று 'தனி'யாக நச்சரித்து வருகிறாராம் அந்த முன்னாள் நாயகி. 'கிராம' நடிகரோ விழிபிதுங்குகிறாராம்.

இதுவரை தான் நடிக்கும் படங்களில் நடனத்தில் மட்டும் தலையிட்டு வந்த 'நடன' நடிகர் சமீபத்தில் 'உள்ளத்தைக் கொள்ளை போக' வைக்கும் படத்தின் பாடல் பதிவின் போது மூக்கை நுழைத்து அந்த டியூன் நல்லால்ல. அடுத்து... அடுத்து' என இசையமைப்பாளரான 'யுவராஜா'வை எரிச்சலடைய வைத்தாராம்.

இரண்டெழுத்து மீன் நடிகைக்கு இப்போது இறங்கு முகம். புதிய பட வாய்ப்புகள் வராததால் தானே நேரடியாக தயாரிப்பாளர்களையும், இயக்குநர்களையும் சந்தித்து வருகிறாராம். ஒரு பாடல் காட்சியென்றாலும் பரவாயில்லை அதிலும் ஆடத்தயார் என்று கூறும் நடிகை சம்பள விஷயத்தில் மட்டும் கறாராக இருக்கிறாராம்.

சி
வி
னி
சி
ட்



சுரேஷ்கோபி
படம்: பைலட் (மலையாளம்)



விக்னேஷ்-ரேஷ்மா
படம்: நீ எந்தன் வானம்

## மினி சினி

☆ 'அமர்க்களம்' படத்தில் ஷாலினியையும் 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் பிரசாந்தையும் சொந்தக்குரலில் பாட வைத்த இயக்குநர் சரண், 'அல்லி அர்ஜுனா' படத்தில் அதன் நாயகன் மனோஜையும் பாட வைக்கிறார்.

☆ 'ரிதம்' படத்தில் அர்ஜுனுக்கு ஜோடியாக சிறிது நேரமே நடித்திருந்த ஜோதிகா, 'நண்பா' படத்தில் அர்ஜுன் ஜோடியாக படம் முழுவதும் வருகிறார். இப்படத்தை செல்வா இயக்கவுள்ளார்.

☆ 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'உன்னுடன்' ஆகிய படங்களை இயக்கிய ஆர்.பாலு இப்போது படவாய்ப்பின்றி இருக்கிறார். விரைவில் இவர் 'சன் டி.வி.'க்காகத் தொலைக்காட்சிப் படமொன்றை இயக்கவுள்ளார்.

☆ 'பூவேலி', 'ரோஜாவனம்' ஆகிய படங்களை இயக்கிய செல்வா மறுபடி கார்த்திக்கை வைத்து இயக்கவுள்ள படத்திற்கு 'கைகோர்த்து வா' என்று பெயரிட்டுள்ளார். இதில் நிலாம்பரி என்ற கன்னட நடிகை ... ஜோடியாக நடிக்கிறார்.

☆ 'மிஸ்டர் நாரதர்' படத்தைத் தயாரித்து வரும் சுந்தர் தியேட்டர்ஸ் பட நிறுவனம், விக்ரம் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றையும் தயாரிக்கவுள்ளது. இப்படத்தை 'உதயம்' ராம்கோபால் வர்மாவின் உதவியாளர் இயக்கவுள்ளார்.

☆ 'விரும்புகிறேன்' படத்தில் அறிமுகமாகும் ஸ்நேகா அப்படம் வெளியாகும் முன்னரே மாதவன் ஜோடியாக 'என்னவளே' படத்திலும் அப்பாஸ் ஜோடியாக 'ஆனந்தம்' படத்திலும் நடித்து வருகிறார்.

☆ 'மறுமலர்ச்சி', 'கள்ளழகர்' போன்ற படங்களை இயக்கிய பாரதி அடுத்து பிரபுவை நாயகனாக வைத்து 'தம்பி உடையான்' என்ற படத்தை இயக்குவதாக இருந்தது. இப்போது அப்படத்தில் சரத்குமார் நடிப்பார் எனத்தெரிகிறது.

☆ 'பூவே உனக்காக' படத்திற்குப் பின் விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தில் கதாநாயகியாக லைலா நடிக்கவுள்ளார். இப்படத்தில் லைலாவுடன் இன்னொரு நாயகியும் நடிக்கவுள்ளார்.

## ...லையை வெறுக்கும் கௌசல்யா

...காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தில் அறிமுகமான ... அந்தப்படத்தில் சேலை கட்டி இழுத்துப் போர்த்தி ... அதேபோல் எல்லாபடங்களிலும் நடித்து வரு... நேருக்குநேர்' படத்தில் மட்டும் நவீன பாணி உடையில் ... கௌசல்யா.

இப்போது இவரை நடிக்க வைக்க அணுகும் இயக்குநர்களிடம் ... விட்டு நவீன பாணி உடை உடுத்தி நடிக்கக் கூடியதான ... கொடுக்கும்படி கெஞ்சி வருகிறார்.

... சேலை கட்டி நடித்து வெறுப்படைந்திருக்கும் ... புகைப்படப்பிடிப்பாளர் ஒருவரை வரவழைத்து நவீன ... உடைகளில் தன்னை விதவிதமாக புகைப்படங்கள் எடுத்து ... க்கிறார்.

## வெற்றி நிச்சயம்?

'சங்கமம்' படத்தில் அறிமுகமான விந்தியாவுக்கும் ரோஜாவுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருவரும் ஆந்திர மாநிலத்தில் இருக்கும் திருப்பதியைச் சேர்ந்தவர்கள்.

'சங்கமம்', 'திருநெல்வேலி', 'மகளிர்க்காக' என்று தோல்விப் படங்களிலேயே நடித்த விந்தியா 'உயிரிலே கலந்து' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

இதனால் சொல்லிக் கொள்ளும்படியான வாய்ப்புகள் எதுவும் வரவில்லை. விந்தியாவின் இப்போதைய நம்பிக்கை 'கற்றது காதல் அளவு', 'பூங்குயிலே' ஆகிய இரண்டு படங்களும் தான்.

"இவை இரண்டும் இளமையான காதல் கதைகள் அதனால் வெற்றி நிச்சயம்" என்று கூறிவருகிறார் விந்தியா.

## பெயர் மாற்றம்

பிரேம் கதாநாயகனாக நடித்து இயக்கிய 'குரோதம் 2' படம் தமிழ்நாட்டின் திருச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் 'காக்கிச் சட்டையா? கறுப்புச்சட்டையா?' என்ற பெயரில் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டன.

வழக்கமாக 'பலான' படங்களுக்குத் தான் வெவ்வேறு இடங்களில் இப்படிப் பெயர் மாற்றி சுவரொட்டி அச்சிட்டு ஒட்டுவார்கள். இந்தப் படத்திற்கு ஏன் இப்படி பெயர் மாற்றினார்கள் என்று தெரியவில்லை.

## புது பிஸ்னஸ்

நடிப்பதோடு 'ஓயட் சினிமா' என்ற படத்தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வரும் பிரகாஷ்ராஜ் இப்போது புது பிஸ்னஸ் ஒன்றையும் ஆரம்பித்துள்ளார்.

'ஓயட் டிராவல்ஸ்' என்ற பெயரில் பயண ஒழுங்குகள் செய்யும் கம்பனி தான் பிரகாஷ்ராஜ் ஆரம்பித்துள்ள புது பிஸ்னஸ்.




※ கலை அம்சம் பாதியும், வியாபார அம்சம் பாதியும் இணைந்த இலக்கியமே செழிப்படையும்.

-ரால்ப் இங்க்.

※ சிரத்தை இல்லாமல் எழுதப்படும் எந்தப் புத்தகமாக இருந்தாலும் சரி, அது உற்சாகம் இல்லாமலேயே படிக்கப்படும்.

-ஜோன்ஸன்.

※ வரலாறு என்பது கடந்த கால அரசியல்; அரசியல் என்பது நிகழ்கால வரலாறு.

-ரொபேர்ட் செல்லி.

※ நல்ல ஓவியன் இயற்கையை நகல் செய்வான். மோசமான ஓவியனோ அதை வாந்தி எடுப்பான்.

-செர்வனின்.

※ ஒருவரை அலுப்பூட்ட விரும்பினால், உங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் கூறி விடுங்கள் போதும்.


-வால்டேர்.

※ நம்பிக்கை என்பது ஒரு நல்ல காலை உணவு. ஆனால் அது ஒரு கெட்ட இரவு உணவு.

-பேகன்.

# தேன் கிண்ணம்

## ஆசைகள்



ஆசை ஆசை
எனது ஆசை
ஈழத்தில் நான்
அடையாள அட்டையின்றி
எங்கும் சென்றுவர ஆசை!
***
ஆசை ஆசை
எனது ஆசை
குடும்பப் பதிவு அட்டையின்றி
மூதூர் நகருக்குச் சென்று
அத்தியாவசியப் பொருட்களை
வாங்கிவர ஆசை!
***
ஆசை ஆசை
எனது ஆசை
இராணுவ சோதனைச்
சாவடியால்
வரும் போது
சைக்கிளில் இருந்து
இறங்காமல் ஓடிவர ஆசை!
***
ஆசை ஆசை
எனது ஆசை
இராணுவ சோதனைச்
சாவடியால்
வரும்போதும் போகும்
போதும்
குடை மடக்காமல் பிடித்து
வர ஆசை!
***
ஆசை ஆசை
எனது ஆசை
அகதி முகாமில் இருந்து
கல்வி கற்காமல்
பாடசாலையில் இருந்து
கல்வி கற்றுவர ஆசை!
***
ஆசை ஆசை
எனது ஆசை
இக்கவிதையும்
என்னினிய முரசில்
தேன் கிண்ணம் பகுதியில்
இடம்பிடித்து வர வேண்டும்
என்ற ஆசை!

அ.அச்சுதன்-சேனையூர்.

## ஹைகூ

### மரணம்

வாழ்க்கை என்னும் புத்தகத்தின்
இறுதிப் பக்கத்தில்
முற்றுமென்று முடிக்கின்ற
முற்றுப்புள்ளி!

### கல்லறை

இறுதியாக இளைப்பாற,
இரைச்சலின்றித் தனித்திருக்க,
ஆறடியைச் சொந்தமாக்கி
அமைத்திட்ட 'அவுட்ஹவுஸ்!'

### வயிறு

உணவுப் பொருட்களை
ஒரு நாள் சேமித்து
உரமாக வெளியேற்றும்
வாடகையற்ற களஞ்சியம்!

### சிகரெட்

மனித இனத்தின்கையில்
ஆறாவதாய் அமர்ந்து
அழிக்கச் சபதமெடுத்த
அழகான வெள்ளைவிரல்!

### தீக்குச்சி

தலையில் ஹெல்மெட்டணிந்து
தன்னை அழித்து
தணலொளி தருகின்ற
தற்கொலைப் படையாளி!

மாணிக்கன் இளங்கோ-
முன்னம் போடிவெட்டை.

## இனி வேண்டாம்!

முண்டி அடித்துக் கொண்டு
மூர்க்கத் தனமாக
கண்டி பஸ் தனிலே
தனியாக நான் ஏற
பெண்டில் பிள்ளையுடன்
வந்தவர்க்கு
இடங் கொடுத்து-நான்
இரண்டாவது படியைவிட்டு
உள் நுளைய 'விர்' என
புறப்பட்டது பேருந்தும்,...
இடை நடுவே ஓர் இடத்தில்
டிறைவர் அடித்த பிறேக்கில்
எதிர் பாராத விதமாக
முன்னால் நான் சாய,
முட்டை விழிப் பெண் ஒருத்தி
முறைத்துப் பார்த்தாள் என்னை;
சட்டென சமாளித்துக்
கொண்டேன், என்னை-அடுத்து
தார் அற்றா றோட்டதில்
காற்றோடு வந்த
கிறவல் புழுதியும்
கணப் பொழுதில்-என்
மூக்கில் நுழைந்துவிட
அடக்க முடியாமல்
வந்த தும்மல்
அவள் மேலே; அடுத்த கட்டம்
வெடுக்கெனப் பார்த்தாள் என்னை
வெட்டி விடுவது போல்...!
இது என்ன சோதனை!
இனி வேண்டாம்-இப்
பயணம் என்றெண்ணி
இறங்கிவிட்டேன்-அடுத்த
தரிப்பிடத்தில் நானும்!

பற்குணன் அம்பிகாபதி-
மன்னார்.

## காதலித்துப் பார்

பொழுது... உனக்கு
மட்டும்...
விடியாமல் போகும்!
பல் துலக்கக்கூட
மறந்து போவாய்!
கனவுகளெல்லாம்...
காணாமல்-போய்விடும்!
உன்னாலும்;
அழ முடியும்!
காதலித்துப்பார்...!
***
உதடுகள்-புன்னகையை...
உதறிவிடும்!
புலன்களெல்லாம்...
செயலிழந்து விடும்!
உன்.. இமைகள் கூட
உனக்குப்...
பாரமாய்த் தெரியும்!
காதலித்துப்பார்...!
***
உறவெல்லாம்
துரோகமாகும்..!
நினைவுகள்...
சுமையாகும்...!
கவிதையெல்லாம்
கண்ணீரால்... எழுதப்படும்!
தலையெழுத்து
மிக.. மிக.. மோசமாகும்!
காதலித்துப்பார்...!
***
அமிர்தம்..
விஷமாகும்!
தண்ணீர் கூட
தணலாகும்!
இருதயம்..
இரும்பாகும்!
சுவாசம்...
அவஸ்தையாகும்!
காதலித்துப்பார்...!
***
விதியுடன் சதியும்...
சேர்ந்து.. விடும்!
சந்தோஷம்...
சமாதியாகி விடும்!
பூக்கள் கூட
மலர மறுக்கும்!
மரணம் மட்டும்...
உனை... கைநீட்டி
அழைக்கும்!
காதலித்துப்பார்.....!

றிஸ்மி கோயா-
கெக்கிறாவ.

## கரையைத் தொடாத அலைகள்....



மனித நேயம்...
மருந்துக்கும் இல்லாத
மானுடம் தன்னில்...
***
மனம் பார்த்து
மணம் முடிக்கும்
மன்னன் ஒருவனுக்காய்
மங்கை இவள் காத்திருப்பு....
***
வந்தவனெலாம்...
வதனம் பார்க்கின்றான்;
வாட்டம் கொள்கிறான்;
அவர்கள் இரு மனம்
இணைவதுதான் திருமணம்
என்பதை உணராதவர்கள்.
***
மனிதனிடையே மதம் வேண்டாம்
சீதனம் சிறிதளவும் வேண்டாம்
ஜனனத்தால் எல்லாம் ஒன்று
மரணத்தில் எல்லோரும் மண்ணுக்குள்
சென்று
மடியும் மனித வாழ்வில்...!
***
புதுமைகள் படைக்க புதுமை பிரியனாய்
ஒருவன் வந்தான்; வாழ்வில் வசந்தத்தை
அள்ளி வீசிச் சென்றான் என்று என்
கவிக்கு முற்று புள்ளி வைக்கிறேன்.
கரையேறாக் கன்னியரின் கனவுகளை
கவிதையிலாவது கரையேற்று-என்கிறாள்
கல்யாணக் கனவுடன் காலம் கடத்தும்
அன்புச் சகோதரி...!

எஸ்.மனோஹரன்-ஹட்டன்.

## இந்நாடு அழுகின்றது

கால்களே ஏன் அமர்ந்து
கொள்ள மறுக்கின்றீர்கள்....?
மிதி வெடிகளின் முகவரி
அறிந்து கொள்ள வில்லையா....?
அகதிகளாய் நடை பயின்றது
ஞாபகத்தில் இல்லையா....?
***
கரங்களே ஏன் வேற்று
இன விரல்களைத்
தொட்டுக் கொள்ள
மறுக்கின்றாய்....?
துப்பாக்கிதான் உங்கள்
அன்றாட தேவையா....?
அடிதடிதான் வயிற்றுப் பசி
போக்கும் தொழிலா....?
***
இதழே ஏன் புன்னகைக்க
மறுக்கின்றாய்....?
சமாதானத்தை முத்தமிட
உனக்கு ஆசை இல்லையா....?
***
மனமே! மணல் கோட்டையை
இடித்து விடு!
கல் நெஞ்சத்தை உடைத்து விடு...!
இதயமே,
நாட்டை நேசித்து
உயிரை சுவாசிக்கவே
காலம் போதாது.
வரையறுக்கப்பட்ட வயது வரைக்கும்...!
விழியே. கண்ணீர் சிந்தாதே!...
உடலே இரத்தம் வடிக்காதே....

இ.லெ.சுல்ஹான்-அக்கரைப்பற்று-01.

## நில் - கவனி - முன்னேறு

செல்வந்தனாக இருக்க விரும்பினால் எப்படி இருக்க வேண்டும் என்று அறிஞர் ஒருவர் இப்படிக் கூறுகிறார்.

"செல்வம் என்றால் சொத்து சுகம் மட்டும் தான் என்று நினைக்கக் கூடாது."

நான் சொல்கிறேன்; நீ தர்ம சிந்தனையுள்ளவனாக இருந்தால், நீ செல்வந்தன் தான். நீ தர்ம சிந்தனை இல்லாமல், நீ ஒரு செல்வந்தன் என்ற மாயையில் இருக்கலாம். ஆனால் நீ ஏழையாகத்தான் இருக்கிறாய்.

தர்ம சிந்தனைதான் உண்மையான செல்வம். தர்ம சிந்தனையுடையவனாக இருப்பதற்கு அநேக பொருட்கள் தேவை



யில்லை. தர்ம சிந்தனையுடையவன் யார் என்றால், தன்னிடம் இருப்பவைகள் அனைத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்பவனே தர்ம சிந்தனையாளன் ஆவான். உன்னிடம் நிறைய பொருட்கள் இல்லாமல் இருக்கலாம், அது விஷயமல்ல, யாரிடம் நிறைய இருக்கிறது? யாரிடம் அவர் திருப்தியடையத்தக்க அளவு நிறைய இருக்கிறது? எது இருந்தாலும் போதுமானதாக இல்லை. உன்னிடம் ஒன்றுமே இல்லாமல் இருக்கலாம். நீ தெருவில் திரியும் ஒரு பிச்சைக்காரனாகக்கூட இருக்கலாம். அப்படி இருந்தும்கூட தர்ம சிந்தனையுடையவனாக இருக்கலாம்.

உனக்கு அறிமுகமில்லாதவன் உன்னைக் கடந்து செல்லும்போது அவனைப் பார்த்து சற்று புன்னகைகூட செய்ய முடியாதா? நீ அவனைப் பார்த்து புன்னகை செய்யலாம். உன்னுடைய உயிரோட்டத்தை அந்த அறிமுகமில்லாதவனிடம் பகிர்ந்து கொள்ளலாம். இப்படிச் செய்தால் நீ தர்ம சிந்தனையுடையவனாவாய். ஒருவன் சோகமாக இருக்கும் பொழுது அவனுக்கு ஆறுதலாக ஒரு பாட்டு பாட மாட்டாயா? நீ தர்ம சிந்தனையுடையவனாக இருக்கலாம். புன்னகை செய்ய காசு தேவையில்லை. ஆனால் நீ மிகவும் கருமியாகிவிட்டாய், சிரிப்பதற்குக் கூட ஒரு முறைக்கு இரு முறை சிரிக்கலாமா, வேண்டாமா என்று யோசித்துப் பார்த்து விட்டுத்தான் சிரிக்கிறாய்.

உன்னிடம் பகிர்ந்து கொள்ள ஒன்றுமே இல்லையென்றால்கூட உன் உயிரோட்டத்தை, உன் இருப்புணர்வை பகிர்ந்து கொள்வதே மிகப் பெரிய செல்வமாகும். ஒவ்வொருவரும் உயிருடன் தான் பிறக்கிறார்கள். உன்னுடைய உயிரோட்டத்தைப் பகிர்ந்து கொள்-உன் கைகளை அன்புடன் மற்றவருக்கு நீட்டு, மற்றவர்களை அன்னியராக, அறிமுகமில்லாதவராக நினைக்கவேண்டாம். இப்படி இருந்தால் எல்லாரும் உன்னுடையவர்கள்தான்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ்.எச்.றிஸ்வான்
வயது: 16
முகவரி: ஜாவா வீதி,
பெரிய கிண்ணியா,
கிண்ணியா 06.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: சு.மனோரஞ்சினி
வயது: 17
முகவரி: சென்ன் எஸ்டேட்,
ஹட்டன்.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்னா'

26.11.2000 முதல் 02.12.2000வரை

### மேடம் :

உறவினர் வருகை, கடன்பிரச்சனைகள் தீரும். நோய்துன்பம் நீங்கும். கல்வி கற்கும் பிள்ளைகளின் பரீட்சைகள் நன்றாக அமையும். விவாகப் பேச்சுக்கள் நடைபெறும். மகரராசிக்காரர்களால் உதவிகள் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 26, 28.

### இடபம் :

கோபத்தை அடக்கவும். தொழில் கஷ்டம், கடன் பிரச்சனைகள் தலை தூக்கும். நெடு நாட்கள் எதிர்பார்த்த விடயங்கள் தாமதமடையும். ரோகிணிப் பெண்களுக்கு விவாகம் கைகூடும் பலன் உள்ளது.

அதிஷ்டநாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 29, 12.

### மிதுனம் :

கல்வியால் உயர்வுகள் ஏற்படும். குடும்பத்தில் உறவினர்களால் பிரச்சனைகள் தோன்றும். உடலில் நோய்துன்பம் தரும். மருத்துவச் செலவுகள் ஏற்படும். வார இறுதியில் வெளியாரால் உதவிகள் கிடைக்கும். கல்வி உயர்வான முடிவுகளைக் கொடுக்கும்.

அதிஷ்டநாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 29, 30.

### கடகம் :

மனக் கஷ்டம் தோன்றும். அதிக வேலைப்பளுவுடன் குடும்பத்தில் பிரச்சனைகள் அதிகமாகும். எதிர்பார்த்த முக்கிய விடயங்கள் தள்ளிப்போவதுடன் பணச் செலவும் அதிகரிக்கும். மீனராசிக்காரரால் வசதிகள், உதவிகள் கிட்டும்.

அதிஷ்டநாட்கள் : திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 26, 02.

### சிம்மம் :

குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான விடயங்கள் நடைபெறும். மிக முக்கிய கருமங்கள் நண்பர்களால் நிறைவு பெறும். திருமண, காதல் விடயங்கள் நல்ல முடிவு தரும். பண வசதிகள் பெருகும். துலாராசிக்காரரால் நன்மைகள் ஏற்படலாம்.

அதிஷ்டநாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 27, 01.

### கன்னி :

கணவரால் நன்மைகள் ஏற்படும். காரிய சித்தி இருந்தாலும் குறைகள் ஏற்படும். வாகனத்தால் விபத்துக்கள் வந்துசேரும். கடன் வசூலாகும். பரீட்சைகள் வெற்றியைக் கொடுக்கும். அத்த நட்சத்திரர் மகிழ்ச்சி அடைவார்கள்.

அதிஷ்டநாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 27, 30.

### துலாம்:

எதிலும் திருப்திகரமான நிலை தென்படும். தொழில் மற்றும் கல்வி முயற்சிகள் வெற்றி தரும். ஆலய தரிசனமும் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கிடைக்கும். சிக்கல்கள் விலகப் பெற்று, உயர்வுகள் அமையும். எதிலும் நம்பிக்கை பிறக்கும்.

அதிஷ்டநாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 02.

### விருட்சிகம் :

எதிரிகள் சிக்கல் படுவார்கள். எதிர்பார்த்த வெற்றிகள் சாதகமாக அமையும். தூர இடத் தொடர்புகளால் நன்மைகள் தொடரும். பிள்ளைகளின் உதவிகள் கிட்டும் சுபகருமச் செய்திகள் வரும். பயணம் வெற்றி தரும்.

அதிஷ்டநாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூண் வர்ணம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 29.

### தனுசு :

உறவினர் சகோதரரால் நன்மைகள் கிட்டும். தெய்வ அனு கூலம் கிடைக்கும். எதிர்ப்புக்கள் விலகும். நாட்பட்ட முக்கிய விடயங்கள் கைகூடிவரும். மூல, பூராட நட்சத்திரர் பணவசதிகள் பெறுவர்.

அதிஷ்டநாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு வர்ணம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 27, 02.

### மகரம் :

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பணவசதிகள் பெருகிய நிலை காணப்படும். மாமன் வழி உறவினர்களால் பலவசதிகள் கிடைக்கும். திருவாதிரைக்காரர் வெற்றிகளைப் பெறுவார்கள்.

அதிஷ்டநாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 26, 02.

### கும்பம் :

வாகனவசதிகள் ஏற்படும். நோய் துன்ப நிவர்த்தியுண்டு. எடுத்த தொழில் விடயங்கள் மெல்ல நகர்வுறும். மனதில் மகிழ்ச்சி ஓரளவு தோன்றும். பிறரால் சில உதவிகள் கிடைக்கும். சதய நட்சத்திரருக்கு சிக்கல்கள் குறைந்து மனச்சந்தோஷம் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

### மீனம் :

தாய், தந்தையரால் பாராட்டுக்களைப் பெறுவார்கள். தூர இடத்து இனிப்பான செய்திகள் கிடைக்கும். பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நிகழும். எதிர்பார்த்த திட்டங்கள் வெற்றியாக அமையும். தனுசுராசிக்காரரால் நன்மைகள் ஏற்படும்.

அதிஷ்டநாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 28, 30.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## முகப்பருக்களா? கவலை வேண்டாம்!



பருவப் பெண்களுக்கு முகத்தில் சர்வ சாதாரணமாகப் பருக்கள் தோன்றுகின்றன. முகத்தில் பரு வந்துவிட்டாலே சில பெண்கள், வெட்கப்படுவார்கள். பலருக்கு ஒன்று, இரண்டு, பருக்கள் தோன்றி விரைவில் மறைந்துவிடும். ஆனால் சிலருக்கு முகம் முழுவதும் பருக்கள் அள்ளி தட்டிவிடும். விரைவிலும் போகாது. இவர்கள் சாப்பாட்டில் உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு குறைக்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது.

15 நாட்களுக்குள் இதன் பலன் தெரியும். பரு உண்டாவது குறையும்.

ஒரு வாரத்திற்குள் முழுவதும் குணமாகிவிடும். 12, 13, வயதில் உடல் வேகமாக வளர்கிறது. உடலை மெருகேற்றும் பருவ வளர்ச்சியும் சேர்ந்து கொள்கிறது. அப்பொழுது உடலிலிருந்து அதிக அழுக்குகள் வெளியேற்றப்படுகின்றன. அவைதான் பருக்களாக உருவாகின்றன. பரு உள்ளவர்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பாட்டில் காய்கறி, கீரைகள் நிறைய சேர்த்துக் கொள்ளவேண்டும். உடலிலிருந்து கழிவை வெளியேற்ற இவை பயன்படும். ■

## உங்கள் வீட்டில் நீங்களும் ஒரு வைத்தியராகலாம்



### பாதத்தில் கெட்ட வாடை

பாதணிகளை பாத உறை (சொக்ஸ்) களுடன் பாவிப்போரின் கவனத்திற்கு!

நாள் முழுவதும் பாதணி போட்டுக் கொண்டிருப்பதால் அப்பாதங்களில் காற்றோட்டமில்லாமையினால் கெட்ட வாடை ஏற்படும். பாதணிகளைவிட பாத உறைகள் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசும். ஆகவே பாத அணிகள் அவ்வப்போது கழுவப்படுதல் அவசியம்.

சிலருக்கு பாதங்களில் வெண்மையான படலங்கள் ஏற்படும். பருக்களும் தோன்றலாம். இவற்றை நீக்குவதற்கு 'பென்ஸோயில் பெறொக்சைடு' 10 வீதம் கலந்த களிப்பினை (0x4-10) பாவிக்கலாம். இவ்வாறு நெப்ரெஸ்கா பல்கலைக்கழக மருத்துவபீட பேராசியர் டாக்டர் றொட்ணி பாஸ்லர் கூறுகிறார்.

கேஸ் வெஸ்டேர்ண் றிசேர்வ் பல்கலைக் கழக மருத்துவ மையத்தின் பேராசிரியரான டாக்டர் ஜெரோம் ஸற்.லிற், நம் நாட்டுக்கு ஏற்ற மருத்துவ முறையினைத் தந்துள்ளார்.

நம் நாட்டு தேயிலையே இதற்குச் சிறந்த மருந்தாம். தேயிலைத் தூளை 15 நிமிடம் வேகவைத்த பின்னர், பெறப்படும் சாயத்தில் குளிர்ந்த நீரைக் கலந்து பாதிப்புக்குள்ளான பாதங்களை 30 நிமிடங்கள் வரை அந்தச் சாயத்துள் வைத்திருக்க வேண்டும். தொடர்ந்து 10 நாட்கள் இதனைச் செய்தால் வெண்மைப் படலங்கள், பருக்கள் நீங்குவதுடன் துர்நாற்றமும் தோன்றாது. பாதங்களிலுள்ள ஏனைய தொற்றுகளும் நீங்கிவிடும்.

### நெஞ்செரிவு

நெஞ்செரிவு ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அளவுக்கு மிஞ்சிய அழுத்தம், மன உளைச்சல், கொழுப்பு மற்றும் ஒத்துக்கொள்ளாத உணவும் நெஞ்செரிவினை ஏற்படுத்தக் கூடும். இதனைத் தடுப்பதற்கு சில மார்க்கங்கள் உள்ளன. அவற்றை முதலில் இவற்றைக் கவனிக்கலாம்:

★ காப்பி, மதுபானம், வாசனைத் திரவியங்கள் கலந்த உணவுகள், புளிப்புத் தன்மை உள்ள பழ வகைகளைக் குறைத்து விடுவது நல்லதென இயோவா மருத்துவ பல்கலைக்கழகத்தில் குடும்ப இயல் பேராசிரியரான டாக்டர் ஜோன் சூதர்லண்ட் கூறுகிறார். எண்ணையில், வதக்கப்பட்ட உணவு வகை, தக்காளி, சொக்கலேட்டுகளையும் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

★ ஈரவெங்காயம் நெஞ்செரிவினை நீக்கும் மருந்தெனவும் கூறப்படுகிறது.

★ உணவருந்தும் வேளையில் இடைக்கிடையே சற்று வெதுவெதுப்பான நீர் அருந்துவது நலமென தெரிவிக்கப்படுகின்றது. இதனால் உணவுக்குழாயில் ஒட்டிக் கொண்டிருக்கும் உணவுப் பருக்கைகள் அவற்றுக்குரிய இடமான வயிற்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டு விடும்.

★ உண்வு உண்ட உடனே படுப்பது நல்லதல்ல. படுக்கும்போது உணவு வயிற்றுக்கு இழுபடுவதில் தாமதம் ஏற்படலாம்.

★ 'அன்ரசைட்' எனப்படும் மாத்திரைகளை சப்பி விழுங்குவதும் நல்லதென ஒக்லஹாமா உணவியல் ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டென்னிஸ் டெக்ரர் கூறுகிறார். இதனால் உமிழ் நீர் சுரப்பின் வேகம் அதிகரித்து சமிபாட்டுக்கு உதவுகிறது என்று தெரிவித்துள்ளார்.

(இதனால் தான் நம்மவர்கள் உணவின் பின் தாம்பூலம் தரிக்கப்பழகியுள்ளனர் போலும்)

★ நெஞ்செரிவு அடிக்கடியோ தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஏற்படுமானால் உணவுக் குழாயில் ஏதோ தொற்று ஏற்பட்டிருக்கலாம். அல்லது குடற்புண் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. ஆகவே மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IQ

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-12-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது புவனா 64

# மோனிக்கா என் மோனிக்கா

'டைடானிக்' திரைப்படத்தைப் பார்த்தது முதல் அந்தப் படத்தில் வரும் கதாநாயகி தான் தான் என்றும் கதாநாயகன் கிளின்ரன் என்றும் கற்பனையில் நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இடையில் ஒரு நாள் தற்செயலாக தொலைக்காட்சியில் ஒரு காட்சியைப் பார்த்தாள். அதில் ஒரு கடற்கரையில் கிளின்ரனும் அவருடைய மனைவி ஹிலாரி கிளின்ரனும் நீச்சலுடையில் இருப்பது போன்ற காட்சி தான். இதைப்பார்த்ததும், டைடானிக் படக் கதையினால் குழம்பிப் போயிருந்த மோனிக்கா மேலும் வேதனையடைந்தாள். பொறாமையுணர்வு தலையெடுத்தது. உடனடியாகவே ஒரு கடிதமெழுதினாள்.

அன்று 1998 ஜனவரி 4ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பெட்டிகியூரியின் இல்லத்திற்கு தொலைபேசி அழைப்பெடுத்து ஜனாதிபதிக்குக் கொடுப்பதற்காகத் தன்னிடம் ஒரு பொருளும் கடிதமுமிருப்பதாக தெரிவித்தாள். கியூரி அவற்றை எடுத்துக் கொண்டு தனது இல்லத்திற்கு வருமாறு கேட்டுக், கொண்டார். மோனிக்கா அங்கு சென்று கடிதத்தையும் மற்றுமொரு பொதியையும் பெட்டி கியூரியிடம் கொடுத்தாள்.

'அமெரிக்காவின் ஜனாதிபதிகள்' என்ற பழைய புத்தகம் ஒன்றும் கடிதமும் தான் கியூரியிடம் கொடுக்கப்பட்டிருந்தன.

அடுத்த நாள் ஜனவரி 5ம் திகதி திங்கட்கிழமை மாலையில் ஜனாதிபதியிடமிருந்து மோனிக்காவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஹிலாரி கிளின்ரனுடன் கிளின்ரன் எடுத்திருந்த படத்தைப் பார்த்தது முதல் பொறாமையால் கருவிக்கொண்டிருந்த மோனிக்காவின் நிலை கிளின்ரனுடன் ஒரு சண்டைபோடுவதற்கு ஆயத்தமாக இருந்தது. ஆனால் கிளின்ரன், "ஹலோ டியர் கிடோ,..." என்று கூறியதும், மோனிக்காவின் உள்ளம் திடீரென மென்மையடைந்து விட்டது. அவளுக்குப் பதிலாக கிளின்ரன் தனது கோபத்தை வெளிப்படுத்தினார். "உனக்கு எத்தனையோ தடவை கூறியிருக்கிறேன். இத்தகைய முட்டாள் தனமான கடிதங்களை எழுதி என்னைக் குழப்ப வேண்டாம் என்று. ஆனாலும் தொடர்ந்தும் நீ இத்தகைய கடிதங்களையே எனக்கு எழுதுகிறாய்". தொடர்ந்து "சரி... இனிமேலாவது இம்மாதிரி கடிதங்களை எழுதி என்னைக் குழப்பிவிடாதே. போகட்டும் நீ அனுப்பி வைத்த புத்தகம் எனக்கு மிகவும் உபயோகமானது. ஆகவே அதற்காக நன்றி கூறுகிறேன்," என்று கூறினார். 15 நிமிடங்கள் வரை உரையாடல் நீடித்தது.

அன்று பகல் மோனிக்கா தன்னுடைய சட்ட ஆலோசகரைப் போய்ப் பார்த்தாள். 'பவுலா ஜோன்ஸ் வழக்கில் சாட்சி சொல்லுவதற்குத் எனக்கு எந்தவிதமான அருகதையும் இல்லை. ஜனாதிபதி கிளின்ரனுக்கும் எனக்குமிடையில் எந்தவிதமான பாலியல் ரீதியான தொடர்பும் கிடையாது. அவரை நான் மிக மேன்மையானவராக மதிக்கிறேன். வெள்ளை மாளிகையில் நான் பணிபுரிந்த காலத்தில் ஜனாதிபதி என்னுடன் எந்தவிதமான தவறான எண்ணங்களுடனும் பழகியவரல்ல, தவிர வேறு எவருடனும் கூட அவர் அவ்வாறு நடந்து கொண்டார் என்பதற்குக் கூட என்னிடம் எதுவிதமான சான்றுகளும் கிடையாது.' என்று வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டிருந்த சத்தியக் கடதாசியில் மோனிக்கா ஒப்பமிட்டுக் கொடுத்தாள்.

ஜனவரி 5ம் திகதி இந்தச் சத்தியக் கடுதாசியை மோனிக்கா ஒப்பமிட்டுக் கொடுத்த போதும், நான்கு நாட்களின் பின்னர் தான் அது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பொய் கலந்த சத்தியக் கடுதாசி ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதானது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். இருப்பினும் இதனை ஒப்பமிட்டுக் கொடுத்த பின்னர் மோனிக்காவுக்கு ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. லிண்டா ட்ரிப் தனக்கு மேலும் சிக்கல்களை ஏற்படுத்துவளோ என்ற பயம் மோனிக்காவுக்கு இருக்கவே செய்தது.

ஜனவரி 8ம் திகதி நியூயோர்க் நகர் சென்றாள். முன்பு நேர்முகப்பரீட்சை நடத்திய நிறுவனம்இரண்டாவது பரீட்சைக்கு ஏற்பாடு செய்திருந்தது. இப் பரீட்சையில் மோனிக்கா கலந்து கொண்டாள். ஆனால் மோனிக்காவுக்கு அது திருப்தியாக அமையவில்லை. வேர்னன் ஜோர்டனை தொலைபேசியில் அழைத்து "அன்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தான் சிறப்பாக பதில்களைக் கூறவில்லை; என்ன நடைபெறுமோ தெரியாது," என்று தன் சங்கடத்தைத் தெரிவித்தாள். அவளை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்ட ஜோர்டன், அந்த நிறுவனத்தின் இயக்குநர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, எப்படியாவது அந்தப் பெண்ணுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள்," என்று கேட்டுக் கொண்டார். ஆனால் மோனிக்கா எதிர்பார்த்திருந்ததைவிட, அவள் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று இயக்குநர்களுக்கு திருப்தியை ஏற்படுத்தியிருந்திருக்கிறாள் என்பது ஜோர்டனுக்குத் தெரிய வந்தது. வருடமொன்றுக்கு 40 ஆயிரம் டொலர் மோனிக்காவுக்கு வேதனமாக வழங்குவதற்கு அந்த நிறுவனம் ஒழுங்குகளைச் செய்திருந்தது. இந்தத் தொகை அவளுக்குப் பென்டகனில் கிடைத்த சம்பளத்தைப் பார்க்கிலும் சற்றுக் குறைவானதுதான், இருப்பினும் இந்தத் தொழிலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள மோனிக்கா தயாராகிவிட்டாள்.

கென்னத் ஸ்டார் அரசாங்கத்தால் பிரத்தியோகமாக நியமிக்கப்பட்ட உயர்தர விசாரணை அதிகாரி. உயர்மட்டத்திலுள்ள–ஜனாதிபதி பதவியில் இருக்கக் கூடிய ஒருவர் குற்றமிளைத்தாலும் அதனை விசாரித்து அவரைப் பதவியிலிருந்தும் இறக்கக்கூடிய ஆதாரங்கழைத்திரட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கொண்டவர். ஏற்கனவே ஜனாதிபதி கிளின்ரனும் அவர் மனைவி ஹிலாரி கிளின்ரனும் வைற் வாட்டர் நிலம் தொடர்பான ஊழலில் இவரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இப்பதவிக்கு கென்னத் ஸ்டார் நியமிக்கப்பட்டு நான்கு வருடங்கள் 4கோடி டொலர்வரை செலவு செய்தும் கூட போதுமான ஆதாரங்களை நிரூபிக்க முடியாமல் போய் விட்டது.

இப்பொழுது கென்னத் ஸ்டார் பவுலா ஜோன்ஸ் விவகாரத்தில் கிளின்ரனை மாட்டுவதற்கான ஆதாரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார் அவருடைய உதவியாளர்களிடம் லிண்டாட் றிப் மாட்டியிருந்தாள். கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்குமிடையில் இருந்து வந்த பாலியல் ரீதியான உறவுகள் பற்றிய ஒலிப் பதிவு நாடாக்களை லிண்டா வழங்கியிருந்தாள்.

இந்த வழக்கில் லிண்டா ட்ரிப் ஏற்பாடு செய்திருந்த தனக்கான வழக்கறிஞர் லிண்டாவை எச்சரித்திருந்தார். மேரிலாந்து மாநிலத்தின் சட்டப்படி, சம்பந்தப்பட்டவருடைய அனுமதியில்லாமல் அவருடைய உரையாடலை ஒலிப்பதிவு செய்வது கடும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அந்த வழக்கறிஞர் தெரிவித்தகருத்தை லிண்டா ட்ரிப்பால் எற்றுக்கொள்ள முடியவில்லை இதனால் அவரை நீக்கி விட்டு மற்றுமொரு வழக்கறிஞரை லிண்டா ஏற்பாடு செய்திருந்தாள்.

கென்னத் ஸ்டாரிடம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள் பற்றிய தகவல் போய்ச் சேர்ந்ததும் அது பற்றி அவரும், இது சட்டவிரோதமான ஒரு நடவடிக்கை என்று கூறிவிட்டார். "எப்படியும் ஜனாதிபதி கிளின்ரனுக்கும் தனக்குமிடையிலிருந்த உறவுகள் பற்றி மோனிக்கா சாடைமாடையாக சில வார்த்தைகள், குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் கூறுவாளானால் அதுவே கிளின்ரனை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு போதுமானதாகும்" என்று தெரிவித்தார். ஆனால் குற்றப்புலனாய்வு உத்தியோகத்தர்களிடம் மோனிக்கா எவ்வாறு இத்தகவல்களை வெளியிடுவாள்? என்ற பிரச்சனை எழுந்தது.

## சட்டவிரோதமான ஒலிப்பதிவு?



பவுலா ஜோன்ஸ்

கென்னத் ஸ்டாரின் உதவியாளர்கள் லிண்டாவிடம், எப்படியாவது மோனிக்காவை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம், கிளின்ரனுடனான தனது உறவுபற்றி ஓரிரு வார்த்தைகளாவது கூறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு போட்டனர். இதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால், சட்டவிரோதமாக பிறருடைய உரையாடல்களை ஒலிப்பதிவு செய்த குற்றத்துக்காக கடும் தண்டனை பெற்றாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று லிண்டாட்ரிப்பை எச்சரித்தனர்.

'பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்த கதை' போலானது லிண்டாவின் பரிதாப நிலை. இவ்வாறு ஒப்புக் கொள்வதற்கு மோனிக்கா ஒருபோதும் சம்மதிக்க மாட்டாள் என்ற லிண்டா அழுதுபுலம்பினாள். கென்னத் ஸ்டாரின் உதவியாளர்களுடன் லிண்டா சேர்ந்து ஏதாவது ஒரு மார்க்கம் கண்டுபிடிக்கலாம் என்று யோசித்தனர்.

இந்த ஆலோசனையின் முடிவில் லிண்டா, தனது நட்பைப் பயன்படுத்தி மோனிக்காவை ஒரு உணவு விடுதிக்கு அழைத்து வருவதெனவும் அங்கிருந்து இருவரும் பழைய சம்பவங்களைப் பற்றிப் பேசுவதெனவும் அதனை புலன் விசாரணை அதிகாரிகள் ஒட்டுக் கேட்பதெனவும் தீர்மானித்தனர். இதற்கான ஏற்பாட்டை லிண்டா செய்வதென ஒப்புக் கொண்டாள்.

(வருவாள்)

கடந்த வாரம் இடம்பெற்றிருந்த படங்கள் கென்னத் ஸ்டார் மற்றும் பவுலா ஜோன்ஸ் ஆகியோருடையவை.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**


**பதுளை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | புஸ்பராதா லோகநாதன், இல.41/8, கிளினிக் பாதை, பதுளை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# பேராசை பெரும் நஷ்டம்!

ஓர் ஊரில் கோபி, முரளி என்று இரண்டுபேர் இருந்தார்கள். இருவரது வீடுகளும் அருகருகே இருந்தன. கோபி அநியாய வழிகளில் பிறரை மோசம் செய்து பணம் சேர்த்து செல்வந்தன் ஆகிவிட்டான். ஆனால் முரளியோ நியாயமான வழியில் சென்றதால் குடும்பத்தைக் காப்பாற்றவே மிகவும் கஷ்டப்பட்டான்.

அந்த ஊரை ஆட்சி செய்த மன்னனுக்கும் மகாராணிக்கும் இளவரசனுக்கும் இளவரசிக்கும் ஒருநாள் திடீரென்று பார்வை போய்விட்டது. அனைவரும்



குருடராகிவிட்டனர். அதற்கு என்ன காரணமென்று யாருக்கும் தெரியவில்லை. இரவில் தூங்கிக்கொண்டிருந்தபோது, கனவில், கறுப்பான பயங்கரமான பறவை ஒன்று வந்து தன் பெரிய கனமான சிறகால் பலமாக அடித்ததாகவும் அக்கணமே எலலோருக்கும் பார்வை போய்விட்டதாகவும் கூறினார்கள்.

அரண்மனை மருத்துவர்களும் விசேட மருத்துவர்களும் பலவிதமான வைத்தியங்கள் செய்தும் அவர்களுக்குப் பார்வை மீளவில்லை. அரச குடும்பத்தினருக்குப் பார்வையை மீட்டுக் கொடுப்பவர்களுக்குப் பொன்னும் மணியும் வைரமும் வாரி வழங்கப்படும் என்று அறிவித்தும் எவ்வித பயனும் இல்லை.

முரளியின் குடும்பத்தில் திடீர் செலவு ஒன்று ஏற்பட்டது. அதற்கு ஆயிரக்கணக்கில் பணம் தேவைப்பட்டது. 'பணத்திற்கு என்ன செய்வது?' என்று யோசித்த முரளி கோபியிடம் கடன் கோட்டான். மனைவிக்கு நகைகள் செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்த கோபி, தன்னிடம் ஒரு காசுகூட இல்லை என்று சொல்லிவிட்டான்.

மனம் நொந்துபோன முரளி, சற்றுதள்ளி இருக்கும் கிராமத்தில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து அவரிடம் கடன் கேட்கலாம் என்று எண்ணிப் புறப்பட்டான்.

அந்தக் கிராமத்திற்குச் செல்வதானால் காட்டு வழியில் செல்ல வேண்டும். முரளி காட்டு வழியில் சென்று கொண்டிருந்தபோது- இருட்டிவிட்டது. இரவில் கால் நடையாகச் செல்வது உசிதமல்ல என்று எண்ணி ஒரு மரத்தடியில் தங்கினான். நேரம் செல்லச் செல்ல காட்டு விலங்குகள் சத்தமிடத் தொடங்கின. தான் இரவில் மரத்தடியில் தூங்கினால் காட்டு மிருகங்கள் தன்னைக் கொன்றுவிடும் என்றெண்ணி மரத்தின் மீதேறி இரு கிளைகள் பிரியும் இடத்தில் உட்கார்ந்து சாய்ந்து கௌர்டான்.

காட்டுப் பகுதியானபடியாலும், காட்டு விலங்குகளின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்ததாலும் முரளியால் நித்திரை கொள்ள முடியவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான். அவன் இருக்கும் மரத்தில் வசிக்கும் இரண்டு பேய்கள் எங்கோ சென்றுவிட்டுத் திரும்பி வந்தன.

ஒரு பேய், "என்ன மிகவும் சந்தோசமாக இருக்கிறாய்?" என்று மற்றப் பேயைப் பார்த்துக் கேட்டது.

அதற்கு மற்றப் பேய், "நான் கண்களைக் குருடாக்கி விட்டு வந்தேனே அரச குடும்பத்தை சேர்ந்தவர்களை அவர்களுக்கு என்ன வைத்தியம் செய்தும் கண் பார்வை திரும்பவில்லையாம். அதுதான் எனக்குச் சந்தோசமாக இருக்கிறது," என்றது.

"அப்படி என்றால் அவர்களுக்கு கண் பார்வை மீள வழியே இல்லையா?" என்று கேட்டது முதல் பேய்.

"ஏன் இல்லை. இந்த மரத்திற்குக் கீழே சின்னஞ் சிறிய இலையுடன் ஒரு கொடி இருக்கிறதல்லவா? அதன் இலைகளைப் பறித்துச் சாறு பிழிந்து பார்வையற்றவர்களின் கண்களுக்குள் விட்டால் அவர்களுக்கு பார்வை கிடைத்துவிடும்," என்றது இரண்டாவது பேய்.

இரண்டு பேய்களும் பேசிக்கொண்டதைக் கேட்ட முரளிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. தன் கஷ்டங்கள் நீங்கி வாழ- இறைவன் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். என்றெண்ணிய முரளி எப்போது விடியும் என்று காத்திருந்தான்.

மறுநாள் பொழுது புலர ஆரம்பித்ததும் மரத்திற்குக் கீழே படர்ந்திருந்த கொடியில் இருந்த இலைகள் அனைத்தையும் பறித்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அங்கு அரண்மனை அதிகாரியிடம், "அரச குடும்பத்தினர் அனைவரின் பார்வையையும் மீட்டுத்தர அபூர்வ மூலிகையுடன் வந்திருக்கிறேன்," என்றான் முரளி. அவர், உடனே அரசரிடம் அழைத்துச் சென்று விபரத்தைக் கூறினார்.

அரசர் சிகிச்சையை ஆரம்பிக்கச் சொன்னதும், தான் கொண்டு வந்திருந்த மூலிகையை அரைத்து சாறு எடுத்து அரச குடும்பத்தினரின் கண்களுக்குள் விட்டான். அடுத்த கணமே அவர்களுக்குப் பார்வை கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியில் குதித்தார்கள். அரசரும், முரளியைப் பாராட்டி அவனுக்கு ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார்.

முரளி எல்லாக் கஷ்டங்களும் நீங்கி ஒரே நாளில் செல்வச் சீமானாகிவிட்டான். தன்னை விட முரளி எப்படிச் செல்வந்தனானான் என்று புரியாத கோபி அவனிடமே கேட்டுவிட்டான். முரளியும் ஒளிவு மறைவின்றி எல்லாவற்றையும் சொன்னான்.

அதைக் கேட்ட கோபி தான் இன்னும் பெரிய செல்வச் சீமானாக வர வேண்டும் என்ற பேராசை கொண்டான். "நமது அரசர் பலமுறை அயல் நாட்டின் மீது படையெடுத்தும் வெற்றி காண முடியாமல் இருக்கிறார். அவர் வெற்றியடைய முடியாத படி அந்தப் பேய்கள்தான் ஏதாவது செய்திருக்கும். அரசர் வெற்றி பெறும் மார்க்கத்தை அவை சொன்னாலும் சொல்லலாம். அவை சொல்வதைக் கேட்டு நான் அரசனிடம் சொன்னால் எனக்கு பொன்னும் பொருளும் அள்ளி அள்ளித் தருவார். நான் குபேரனாகிவிடலாம்" என்று எண்ணிக் காட்டிற்குச் சென்ற முரளி சொன்ன மரத்தின் மீதேறி, பேய்கள் என்ன சொல்கின்றன எனக் கேட்கத் தயாரானான்.


இருட்டியதும் பேய்கள் வந்தன. ஒரு பேய் மற்றப் பேயிடம், "ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டது.

"நான் அரச குடும்பத்தினர் மீண்டும் பார்வை பெறுவது எப்படி என்று சில நாட்களுக்கு முன்பு உன்னிடம் கூறினேன் அல்லவா? அதை எவனோ கேட்டுச் சென்று எல்லோரது பார்வையையும் மீட்டுவிட்டான்" என்றது இரண்டாவது பேய்.

"அப்படியென்றால் நாம் பேசும்போது அவனும் இந்த மரத்திலிருந்துதான் கேட்டிருக்க வேண்டும்," என்றது முதல் பேய்.

"ஆமாம்... இன்னும் நாம் என்ன பேசுகிறோம் என்று கேட்க இன்று கூட இம்மரத்தில் வந்து ஒளிந்திருக்கலம். வா அவனைத் தேடிப்பிடித்துக் கொல்வோம்," என்றது இரண்டாவது பேய்.

இரண்டு பேய்களும் தேடிய போது மரத்தில் இருந்த கோபி அகப்பட்டுக் கொண்டான். அவை கோபியைப் பிடித்து அடித்துக் கொன்றுவிட்டன.




வித்தை காட்டும் முயலார் ஏ,பி,ஸி,டி. என்ற நான்கு பாதைகளில் எந்தப் பாதையில் பந்தைப் போட்டால் மேசை மீதுள்ள டப்பாவுக்குள் சென்று சரியாக விழும்? சரியாகக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.12.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **370**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 368

**பரிசுக்குரியவர்:**
பிரதாப் கிருபாஹரன்
நு/புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன் இன்ஸத்நூர் இஸ்மாயில், புதிய கன்கன்கொட வீதி, பேருவளை. | கே.கமல் கண்ணா, க/ஓல் பி கோக் தமிழ்.வி.த., புஸ்ஸல்லாவ. |
| ஆ. டில்ஷான், நம்மாதா பாடசாலை, நுவரெலிய. | த.நிஷாந், தருமரெட்ணம் வித்தியாலயம், நாவற்குடா. |
| ஏ.எம்.ஐ.எஃப். ஜெரோஸா, மஹ்முத் மகளிர் கல்லூரி, கல்முனை. | எம். ஆர்.பாத்திமா றிமாஷா, லிட்டில் ஃபிளாவேர்ஸ் ஆங்கில ஆ.பாடசாலை, கிண்ணியா. |
| சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | ப.போல்ராஜ், புகையிரத நிலைய விடுதி, கொம்பனித்தெரு, கொழும்பு-02. |
| எஸ். ஜோசப் எடிசன், இஸ்பிரிவெளி கோட்டகொட 7ம் பிரிவு, ஸ்பிரிங்வெளி. | பாதிமா நிஷ்மா நஜீம், மிரிஸ்வத்தை, பலாங்கொடை. |

## முக்கிய தினங்கள்

**ஜனவரி** 12 தேசிய இளைஞர்கள் தினம்
**பெப்ரவரி** 26 தேசிய அறிவியல் தினம்
**மார்ச்** 08 சர்வதேச பெண்கள் தினம்
**மார்ச்** 15 உலக ஊனமுற்றோர் தினம்
**ஏப்ரல்** 7 உலக ஆரோக்கிய தினம்
**மே** 8 உலக செஞ்சிலுவை தினம்
**ஜூன்** 27 உலக நீரிழிவாளர் தினம்
**ஜூலை** 11 உலக மக்கள் தொகை தினம்
**செப்டம்பர்** 05 ஆசிரியர் தினம்
**அக்டோபர்** 01 உலக முதியோர் தினம்
**அக்டோபர்** 16 உலக உணவு தினம்
**டிசம்பர்** 01 உலக எய்ட்ஸ் தினம்.

ஜெ.சண்முகராஜா-அலுத்மாவத்த வீதி,
கொழும்பு-15.

## தேசியப் பறவைகள்

இலங்கை-காட்டுக்கோழி
இந்தியா-ஆண்மயில்
மலேசியா- மாயா
ஜப்பான்-பச்சை கொண்டை காட்டுக் கோழி.
இங்கிலாந்து- ரொபின்
டென்மார்க்- வானம் பாடி
ஜேர்மனி- வெள்ளைக் கொக்கு
கொலம்பியா- பருந்து.
ஐக்கிய அமெரிக்கா-வழுக்கைத் தலை கழுகு

எம்.எச்.ஹயாஸ்-ஸாஹிரா தேசிய பாடசாலை,
மாத்தளை.

## புதுமை நட்பு



**தெ**ன் அமெரிக்காவில் உள்ள ஈக்குவடோர் நாட்டில் வெள்ளை எறும்பு மரம் என்று ஒரு வகை மரம் உள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் 'செக்ரோபியா அல்பிடா'.

இந்த மரத்தில் எப்போதும் எறும்புகள் அதிகமாக இருக்கும். யாராவது இந்த மரத்திற்குக் கிட்ட வந்தால் படையெடுத்து விரட்டிவிடும். பிற செடி, கொடிகளைக் கூட இந்த மரத்தைச் சுற்றி வளரவிடாது. ஈக்குவடோரில் இந்த மரத்தில் மட்டுமே எறும்புகள் வாழும்.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு கன மைல் கடல் நீரில் 5000,000 விலை மதிப்பான தங்கம் இருக்கிறது. இதை எடுப்பதற்கு தங்க விலையிலும் பார்க்க 5 மடங்கு அதிக செலவாகும்.

1 1/2 அங்குல தடிப்புள்ள பனிக்கட்டி ஒரு மனிதனை தாங்கும்.4 அங்குல தடிப்பான பனிக்கட்டி ஒரு குதிரையை தாங்குமாம்.

## போன்சாய்

### 'போன்சாய்' என்றால் என்ன?

பெரிய மரங்களின் உருவத்தைச் சுருக்கி, அவற்றைச் சிறிய தொட்டிகளில் சிறிய வடிவமாக வளர்ப்பது ஆகும். 'போன்சாய்' என்றால் 'தொட்டிகளில் அல்லது ட்ரேயில் வளர்த்தல்' என்று பொருள். இது ஒரு சீனக்கலை.

### 'போன்சாய்' மரம் பெரிய மரங்களை ஒத்திருக்குமா?

ஆம். உருவம் மட்டுமே சிறியதாய்



இருக்கும். மற்ற எல்லா அம்சங்களும் பெரிய மரத்தையே ஒத்திருக்கும். இவையும் பூக்கும், காய்க்கும்.

### இது எப்படி வளர்க்கப்படுகிறது?

விதை மூலமாகவோ அல்லது மற்றொரு மரத்தின் கிளையை வெட்டி வேறொரு தொட்டியில் வைத்தோ வளர்க்கப்படுகிறது.

### மரத்தின் வளர்ச்சி எப்படித் தடை செய்யப்படுகிறது?

வேர்கள், கிளைகள் போன்றவற்றை அடிக்கடி வெட்டுதல், மரத்தை வேறு தொட்டிகளுக்கு மாற்றுதல் என்று தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் மரம் குள்ளமாகவே இருக்கும்.

### இதைச் செய்வதற்கு அதிக கவனம் தேவையா?

ஆம். தண்ணீர் ஊற்றுதல், உர மிடுதல், வேறு தொட்டிக்கு மாற்றுதல் போன்றவற்றைக் கவனமாகச் செய்ய வேண்டும்.

## விறு விறு தொடர்

**23**

அலங்கரிக்கப்பட்ட மண வறையில் ஆகாஷ் அமர்ந்திருக்க, ஹோமம் வளர்த்து புரோகிதர்கள் மந்திரம் சொல்ல, அதைத் திருப்பிச் சொல்லி அவர்கள் சொன்னபடியெல்லாம் செய்து கொண்டிருந்தான்.

மண்டபம் நிரம்பி வழிந்தது.

நிறைய பிரமுகர்களுக்கு நாற்காலி இல்லாமல் போய் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள்.

முழு அலங்காரத்தில் தீபிகாவை அழைத்து வந்தார்கள்.

ஆகாஷ் அருகில் அமர்ந்த அவளின் விரல்கள் மெலிதாக நடுங்குவதைப் பார்த்த ஆகாஷ் அவள் கையை ஆதரவாக அழுத்தி, "தைரியமா இரு!" என்று ரகசியமாகச் சொன்னான்.

வீடியோ கேமிராக்களின் மானிட்டர்களை கண்காணிக்க அமைக்கப்பட்டிருந்த தனி அறைக்குள் உட்கார வைக்கப்பட்டிருந்த அப்ஸரா மாறி மாறி எதிலாவது ரஞ்சித் எந்த வேடத்திலாவது தெரிகிறானா? என்று உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவளைத் தவிர இரண்டு போலீஸ் அதிகாரிகளும் அங்கே இருந்தார்கள். அவர்களுக்குக் குறிப்புகள் சொல்லி விட்டு, வெளியே வந்த நியூட்டன் பரத்திடம் வந்தார்.



"மண்டபத்துக்கு வெயில் நாம மார்க்செஞ்ச மொட்டை மாடிகளை ரகசிய கேமிராக்கள் கவர் பண்ணிட்டு இருக்கு. இது தவிர தெரு முழுக்க பத்து மஃப்டி போலீஸ் ஆபீசர்ஸ் தூவப் பட்டிருக்காங்க. ரஞ்சித் வந்தா அவனை மடக்க நமக்கு ஒரு நிமிஷம் கூட ஆகாது பரத்!" என்றார்.

"வெரிகுட், அவன்கிட்ட கன் இருக்கின்ற தகவலை எல்லாருக்கும் தெரிவிச்சிட்டீங்களா சார்?" என்றான் பரத்.

"சொல்லிட்டேன். அலர்ட்டா இருக்காங்க."

மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்த சுரேகா அடிக்கடி கர்சீப் எடுத்துத் தன் கழுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

**கா**ர்கள் நிறுத்தப்பட்டிருக்கும் பகுதியில் காத்திருந்த ரஞ்சித்தின் கண்கள், பேண்ட் வாத்தியம் வாசிக்கும் குழுவில் இருந்த ஒவ்வொரு நபராக மேய்ந்தன.

இவன் நினைத்தபடியே அந்தக் குழுவில் ஒரு ஆசாமிஃப்ரெஞ்ச் தாடி வைத்திருந்தான். தலையில் தொப்பி. கிட்டத்தட்ட இவன் உயரம்.

ரஞ்சித் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதம் எடுத்தான். பேனா எடுத்தான். சரசரவென்று எழுதத் துவங்கினான்.

'உங்கள் வாழ்க்கை பற்றி மிக முக்கியமான விஷயம் சொல்லவேண்டும். உடனடியாக டாய்லெட் பகுதிக்கு வரவும். காத்திருக்கிறேன், உங்களுக்கு உதவ நினைப்பவன்.

எழுதிய காகிதத்தை நான்காக மடித்தான்.

மெதுவாக பேண்ட் வாத்திய கோஷ்டியை நெருங்கினான், காத்திருந்தான்.

ஒரு பாட்டு முடிந்து அடுத்ததைத் துவங்க, ஒரு சின்ன இடைவெளி விட்ட சமயத்தில் அவனை நெருங்கினான். நீட்டினான்.

"இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாரு."

"யாரு?"

"தெரியாதுங்க!" என்று விலகினான்.

துண்டுச் சீட்டைப் படித்துப்பார்த்த அவன் முகத்தில் குழப்பம். தன் அருகில் இருந்தவனிடம், "இதோ வந்துட்டேன்!" என்று சொல்லிவிட்டு தான் வாசித்துக் கொண்டிருந்த வாத்தியத்தை வைத்துவிட்டு டாய்லெட் பகுதியை நோக்கி நடந்தான்.

பரத் மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி எல்லாப் பகுதிகளுக்கும் போய் வந்து கொண்டிருந்தவன், சட்டென்று சுசீலாவிடம் திரும்பி, "சுசீ, இந்த மண்டபத்தோட டாய்லெட் பகுதில் போலீஸ் யாரையாவது நிறுத்தியிருக்காங்களா?" என்றான்.

"தெரியலை"

"வா, பார்த்துடலாம். அங்க யாரும் இல்லைன்னா ரெண்டு பேரை நிறுத்தச் சொல்லணும்."

"சரி."

இருவரும் மண்டபத்தின் டாய்லெட் பகுதி நோக்கி நடந்தார்கள். 'ப' வடிவத்தில் மூன்று புறமும் டாய்லெட் அறைகள். ஆண்களுக்குத் தனியாக, பெண்களுக்குத் தனியாக இருந்தன.

சுசீலா பெண்கள் பகுதிக்குள் செல்ல, பரத் ஆண்கள் பகுதிக்குள் சென்றான். அங்கே போலீஸ் நபர் யாருமில்லை என்பதை உணர்ந்து திரும்பி நடந்த போது,

ஒரு முனகல் கேட்டான்.

'ம்...ம்...ம்...' என்கிற தவிப்பின் முனகல்!

எந்த அறையிலிருந்து முனகல் வருகிறது என்று கணித்து, நெருங்கி அந்த குளியலறையின் கதவைத் திறக்க....

உள்ளே ஓர் ஆள் வெறும் ஜட்டி, பனியனோடு கைகள் பின் பக்கம் கட்டப்பட்டு வாயில் கர்சீப் திணிக்கப் பட்டுக் கிடந்தான்.

பரத் அவசரமாக அவனை கட்டுக்களிலிருந்து விடுவித்தான்.

"என்னாச்சு? யார் நீங்க?"

"என் பேரு ஜோசப். பேண்ட் வாத்திய கோஷ்டில இருக்கேன். ஒரு ஆள் இப்படி ஒரு லெட்டர் கொடுத்தான்" என்று துண்டுச் சீட்டை நீட்டி, "நான் புரியாம இங்கே வந்தா, அதே ஆள் கிட்டே வந்து ஒரு கட்டையால என் மண்டைல அடிச்சான். இப்படி பண்ணிட்டு என் டிரெஸ் எல்லாம் எடுத்துட்டுப் போய்ட்டான் சார்."

பரத்திற்கு 'சுரீர்' என்று உறைத்தது.

பேண்ட் வாத்திய கோஷ்டி நின்றிருந்த இடத்திற்கு அருகில் கிறில் வைத்து அகல ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னல் வழியாக உள்ளே மணவறை தெரிந்தது.

'ரஞ்சித் இப்போது பேண்ட் வாத்திய கோஷ்டியின் அதே யூனிஃபார்மில் அவர்களோடு ஜோசப் நின்ற அதே இடத்தில் நின்று அவன் வாசித்த அதே வாத்தியத்தை சும்மா அவ்வப்போது மற்றவர்களைப் போலவே வாயில் வைத்து எடுத்தான். காத்திருந்தான். பேண்ட் பாக்கெட்டில் துப்பாக்கி.

இன்னும் ஐந்து நிமிடங்களில் தாலி கட்டப்போகிறான் ஆகாஷ்.

அதன் பிறகு இந்த ஜன்னல் வழியாக குறி பார்த்து சுட்டுவிட வேண்டும். தாலி கட்டியதும் மண்டபத்திற்குள் ஒரே பரபரப்பாக இருக்கும். அந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த சமயம் இந்தக் கும்பலில் இருந்து விலகி, ஜன்னலை நெருங்கி உள்ளே கல்யாணத்தை வேடிக்கைப் பார்ப்பவன் போல நின்று கொண்டு....

அவன் தோளில் ஒரு கை விழுந்தது.

திரும்பிப் பார்த்தால் கையில் துப்பாக்கியுடன் பரத். அருகில் சுசீலா.

"ரஞ்சித், உன் கண்ணாம்மூச்சி ஆட்டம் ஓவர்! கையை மேலே தூக்கு. கமான்" என்றான் பரத்.

வாத்தியகோஷ்டி வாசிப்பதை நிறுத்தி ஆச்சர்யமாகப் பார்க்க, சட்டென்று தன் கையிலிருந்த வாத்தியத்தை பரத் முகத்தில் வீசினான் ரஞ்சித்.

பரத் உடனே குனிய, அந்த விநாடி அவகாசத்தில் ரஞ்சித் தன் துப்பாக்கியை எடுத்ததோடு மட்டுமல்லாமல், சுசீலாவை தன் பக்கமாக இழுத்து அவள் நெற்றியில் அதன் முனையை வைத்தான்.

"பரத், உன் துப்பாக்கியைப் கீழே போடு! இல்லைன்னா கண்டிப்பா சுசீலாவை சுட்டுடுவேன்" என்றான் ரஞ்சித்.

"நோ!" என்றான் பரத்.

"ம்... கமான்!"

பரத் தன் துப்பாக்கியை வேறு வழியில்லாமல் கீழே போட்டுவிட்டு ரஞ்சித்தைத் தாண்டிப் பார்த்தவன் பதட்டமாக, "நோ! நியூட்டன் சார்! சுட்டுடாதீங்க!" என்று பதட்டமாகக் கத்தினான்.

அந்தப் பதட்டத்தை உண்மை என்று நம்பி ரஞ்சித் அவசரமாகத் திரும்பிப் பார்க்க, அவன் கவனம் திசை திரும்பியதை பயன்படுத்திக் கொண்ட பரத் மூர்க்கமாக அவன் மேல் பாய்ந்து துப்பாக்கி பிடித்த அவன் கையை வலுவாகப் பற்றி முறுக்கினான்.

உச்ச வலியில் அவன் விரல்கள் விடுபட்டு அவன் துப்பாக்கி கீழே விழ.... சுசீலாவின் கையில் இப்போது இரண்டு துப்பாக்கிகள்!

வேறு வழியின்றி ரஞ்சித் இரண்டு கைகளையும் தூக்கினான்.

**ஆ**காஷ் தீபிகாவின் கழுத்தில் தாலி கட்டினான்.

பரத்-சுசீலா அட்சதை தூவினார்கள்.

விஷால் பரத் கையைப் பிடித்து, "எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை பரத், சாதிச்சிட்டே" என்றான்.

"நான் இதை தனியா சாதிக்கலை. எத்தனை போலீஸ்! குறிப்பா அந்தப் பொண்ணு சுரேகாவுக்கு நன்றி சொல்லு விஷால்."

"சுரேகாவுக்கு சிம்லால என் ஆபீஸ்ல வேலை போட்டுக் கொடுக்கிறதா சொல்லிட்டேன்."

"உங்க கெஸ்ட் ஹவுசை ரெடி செஞ்சி வை விஷால். அடுத்த வாரம் வித் சுசீலா நான் வருவேன்." என்றான் பரத்.

"ஷ்யூர்"

"வாட் சுசீ, உனக்கு ஆட்சேபனை இல்லைன்னா அப்ஸராவையும் கூட்டிட்டுப் போகலாமா?" என்றான் பரத்.

"ஏய்!" என்று கைப்பையால் அவன் முதுகில் அடித்தாள் சுசீலா.

மண்டபத்தை விட்டு அவர்கள் புறப்படும் முன்பாக பரத்தை மட்டும் விஷாலின் அப்பா விஸ்வநாத் தனியாக அழைத்துச் சென்றார்.

"எனக்கு இங்கே ரகசியமா ஒரு பெண்ணோட தொடர்பு இருக்கு. அவளோட தான் நான் ரகசியமா ஃபோன்ல பேசினேன். கல்யாணத்துக்கு வரச் சொன்னேன். அதை அரைகுறையா கேட்டுட்டு விஷால் என்னையே சந்தேகப்பட்டுட்டான். இந்த உண்மையை நான் எப்படிச் சொல்ல முடியும்? நீங்களும் எப்பவும் சொல்லிடாதீங்க ப்ளீஸ்.." என்றார்.

புன்னகைத்து ஆமோதித்தான் பரத்.

ஆகாஷ்-தீபிகாவை கை குலுக்கி வாழ்த்தி வீடியோவுக்காக மீண்டும் சிரித்துவிட்டு தங்கள் காருக்கு வந்ததும் பரத் கொட்டாவி விட்டான்.

"ஒரு ராத்திரி தூக்கம் போச்சுன்னாலும் மனசுக்கு திருப்தியாக இருக்கு!" என்றான் பரத்.

(முற்றும்)

**மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

# ஒரு நடிகையின் கதை

ஒரு கட்டத்தில் நான் அவனிடம் கேட்டேன்,

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறயா? சம்பாதித்தது போதும், இருப்பதை வச்சுக்கிட்டு நிம்மதியாகக் காலம் தள்ளலாமே, என்ன சொல்றே? என்னால விபசாரத்துக்கு போகமுடியவில்லை." என்றேன். என் கஷ்டம், என் கண்களில் கண்ணீராய் தழும்பியது.

அவன் யோசித்துக் கொண்டிருந்தான். எதிரில் இருந்த விஸ்கி கிளாஸில் ஒரு துண்டு ஐசை எடுத்துப் போட்டுக்கொண்டான்.

"எனக்கு ஆட்சேபனை இல்லை."

தொடர்ந்து. "இந்தப் படம் முடியட்டுமே. அப்புறம் யோசிக்கலாம்" என்றான். எனக்கும் அது நியாயம் என்று தோன்றியது.

படம் பூஜைக்கு நாள் குறிப்பிடப்பட்டது. ஹீரோவை நான் 'புக்' பண்ணிக் கொடுக்கும்படிக் கேட்டான். அதற்காகவே எனக்குப் பிடிக்காத அவனுடன் நான் இருக்க வேண்டி வந்தது. ரெண்டு நாட்களுக்குப் பிறகு ஹீரோ கால்ஷீட் கொடுத்தான்.

பட பூஜை நெருங்க நெருங்க கடுமையான வேலையில் அவன் அலைந்து கொண்டிருந்தான்.

திடுமென்று ஒரு நாள் ஃபோன் செய்தான்.

"நான்தான், என்னப்பா?" என்றேன் நான்.

"ஊரில் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்."

"அடடா, என்ன ஆச்சு?"

"அவங்களுக்கு ரத்தக் கொதிப்பு இருக்கிறதே, அது அதிகம் ஆயிடுச்சு போல, நான் போறேன். பட பூஜையைத் தள்ளி வச்சுக்க வேண்டி இருக்கும்."

"அதைப்பற்றிக் கவலைப்படாதே. அம்மா முக்கியமா, சினிமா முக்கியமா? நீ ஊருக்குப் போய்த் திரும்பு. எதுக்கும் கவலைப்படாதே."

அவன் புறப்பட்டுப் போனான். ஃபோன் வரவில்லை, போனவனும் வரவில்லை. எனக்கு ஏதோ சந்தேகம் தட்டியது.

அவன் வேலை செய்யும் அலுவலகத்துக்குப் ஃபோன் செய்தேன். அவன் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட்டதாகத் தெரிந்தது. அன்று மாலையே, அவன் தங்கியிருந்த மந்தவெளி அறைக்குச் சென்றேன். நான் காரில் அமர்ந்து கொண்டு என் டிரைவரை அனுப்பினேன். டிரைவர் வந்து சொன்னான்,

"அந்த ஆள், அறையைக் காலிபண்ணி விட்டுப் போயிட்டானாம்மா."

நான் அமைதியாக இருந்தேன்.

"எனக்கு அப்பவே தெரியும்மா, அந்த ஆள் பிராடுன்னு."

15 லட்ச ரூபா.

அத்துடன் அதுக்கும், இதுக்கும் என்று சுமார் 5 லட்சம் ரூபாய்கள்.

ஆக மொத்தம் 20 லட்ச ரூபாய்கள்.

கடன்காரர்களுக்கு நான் என்ன பதில் சொல்லப்போகிறேன்?

பணம் போனது கூட பெரிய விஷயமாக எனக்குப் படவில்லை. ஆனால், அந்த ஏமாற்றம்? அதுதான் என்னைப் பெரிதும் துன்புறுத்திற்று.

அவனை மறக்கத் தொடங்கினேன்.

அந்தச் சமயத்தில் ஒரு நாள், அவனைக் கடற்கரையில் வைத்துப் பார்த்தேன்.

புதுசாக இருந்த ஒரு காரில் அவன் அமர்ந்திருந்தான்.

"என்ன மறந்துட்டியா?"

"......"

"நான் வேணாம்னு முடிவு பண்ணிட்டியா?"

"......."

காற்று மிகவும் உறைப்பாக இருந்தது.

"சரி போகட்டும், படம் என்ன ஆச்சு?"

"என்ன படம்?"

"நீ எடுக்கிறதா இருந்த படம்."

"டிராப் பண்ணிட்டேன்."

"ஏன்."

"எனக்கு வேணாம்னு தோணிச்சு."

"அந்தப் பணம்?"

"எந்தப் பணம்?"

என்ன சொல்வது என்று விளங்கவில்லை.

"படம் எடுக்க நான் கொடுத்த பணம்."

"நீ பணம் கொடுத்ததுக்கு என்ன சாட்சி?"

நான் சிரித்தேன். இதைத்தான் அவன் சொல்ல முடியும் என்று நான் எதிர்பார்த்தேன்.

"மனசாட்சிதான்."

"அது கோர்ட்டுக்கு வரும்னா, கேஸ் போடு."

"எனக்குப் பணப் பிரச்சனை இருக்கு. 15 லட்சம் என் பணம், அது போனா போறது. கடனா 5 லட்சம் இருக்கு."

"அது நான் என்ன பண்ணமுடியும்?"

"தோ பார்! எனக்கு அந்த 15 லட்சம் தேவையில்லை. 5 லட்சத்தையாவது கொடு."

"என்னிடம் பணம் இல்லை."

"ப்ளீஸ், நீ பணம் தர்லேன்னா, என் வீட்டை நான் வித்துத்தான் அந்தக் கடனை அடைக்கணும்."

"செய்."

அவன் சிகரெட்டை விட்டெறிந்து, காரைக் கிளப்பினான். அது புறப்பட்டது. புகை என் முகத்தில் அடித்தது.

அவன் என் பார்வைக்கு மறைந்தான்.

என் வீட்டை, நகைகளை விற்றேன். எல்லாக் கடனையும் அடைத்தேன்.

மந்தைவெளிக்கு ஒரு வாடகை வீட்டுக்கு குடியேறினேன்.

அம்மாவை அழைத்துக் கொண்டு வந்து என்னுடன் வைத்துக் கொண்டேன்.



**தனது பெயரை வெளியிட முடியாத நடிகையின் சோகக் கதை**

முற்றும்

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 30

எம்.ஜி. சக்கரபாணி அவர்களுடைய இல்லத்தில் வைத்து எம்.ஜி.ஆர். அவர்களால் அழைக்கப்பட்ட பத்மநாபன் அவர்களிடம் வண்டியை எடுக்கும்படி எம்.ஜி.ஆர். கூறினார். அவர் வண்டியை எடுக்கச் சொல்வதற்கு முன்னர் என்னருகில் வந்து "மறுபடியும் எப்போ சந்திக்கலாம்?" என்று கேட்டார். இந்த வினாவுக்கு நான் பதில் கூறுமுன்னர் எம்.ஜி.ஆர் அவர்களே, "அவர் இப்போது நம்முடனேயே வரப்போகிறார். ஆகவே இன்றே நீங்கள் இருவரும் பேசிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது," என்று பத்மநாபனிடம் சொன்னார்.

எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சொந்தமான சத்தியா ஸ்டுடியோ கலையகத்தின் நிர்வாகியாக பின்னர் பத்மநாபன் செயற்பட்டார். நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமியின் மனைவியின் சகோதரியைத் தான் பத்மநாபன் மணம் முடித்திருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் "வண்டி தயார்" என்று பத்மநாபன் வைந்து கூறினார். எனது தோளில் கை வத்து, "உங்கள் நண்பர் எம்முடன் வர வேண்டியதில்லை. அவரை வழியனுப்பி விட்டு நீங்கள் மட்டும் என்னுடன் வாருங்கள்!" என்று இரகசியமாகவே என்னிடம் கூறினார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் வீட்டின் உள்ளே சென்றார். இந்தவேளையில் என்னுடன் வந்திருந்த நண்பர் நல்லையா அவர்கள் நிலைமையை அனுசரித்து விடைபெற்றுக் கொண்டார். வண்டி புறப்பட்டது. பின்னிருக்கையில் எம்.ஜி.ஆருடன் நானும் ஏறிக் கொண்டேன். பத்மநாபன் வண்டியைச் செலுத்தினார். வண்டி மகாபலிபுரம் நோக்கி விரைந்து சென்றது. இருவரும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனைகள் பற்றி உரையாடினோம்.

அந்தப்பாதையில் சுமார் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் சென்றதும் இருமருங்கும் சவுக்குமரத் தோப்புக்கள் காணப்பட்டன. இடது புறமாகச் சென்ற ஒரு பாதையின் ஊடாக வண்டி சென்று கடற்கரையை அண்டியதும் நிறுத்தப் பட்டது. மாலையர்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த வேளை, கடற்கரை வெளியானதால் ஒருவரையொருவர் பார்க்கக் கூடியளவு இயற்கை வெளிச்சம் இருந்தது.


வண்டி நின்றதும், வண்டியின் பின்புறத்தைத் திறந்து ஒரு கம்பளத்தை எடுத்து பத்மநாபன் தரையில் விரித்தார். பிரம்பால் இழைக்கப்பட்ட இரண்டு பெட்டிகளுள் ஒரு பெரிய ஃபிளாஸ்க்கும் இறக்கி வைக்கப்பட்டன. எம்.ஜி.ஆர் அவர்களுடன் நானும் அமர்ந்து கொண்டேன். இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்பாக மேலும் பல விடயங்களைப் பேசினோம். இதன் பிறகு திடீரென்றொரு வினாவை எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் தூக்கிப் போட்டார்?

"கலைவாணர் பற்றி நீங்கள் எழுதிய கட்டுரையைப் படித்தேன். கட்டுரையின் முடிவில் 'கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார்' என்று எழுதியிருக்கிறீர்களே? ஏன் அவ்வாறு எழுதினீர்கள்?" என்று கேட்டார்.


இதற்கு பதில் கூறிய நான், "கட்டுரையிலேயே இதற்கான பதில் இருக்கிறதே" என்று கூறியதுடன் மேலும் விளக்கத்தைக் கொடுத்தேன்.

கலைவாணர் பல ஓரங்க நாடகங்களை நடத்தி வருவார். இவை சில திரைப்படங்களிலும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உள்ள ஒரு நாடகத்தில் 'ஐம்பதும் அறுபதும்' என்று ஒன்றுள்ளது. இந்த நாடகத்தில் ஐம்பதாமாண்டு போதுமானளவு முன்னேற்றமடையாத தமிழ் நாடு, அறுபதாமாண்டளவில் முன்னேற்றம் கண்டுவிடும்' என்று பாடல்களுடன் விளக்கமளிப்பார்.

கொழும்பிலிருந்து பதுளை நகர் நோக்கி திரு.சான்ஸி ராஜரட்ணம் அவர்களுடைய வண்டியில் கலைவாணர் மதுரம்



## கலைவாணர் தற்கொலை?



அம்மையார் ஆகியவர்களுடன் நானும் பயணம் செய்து கொண்டிருந்த போது பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம் என்று முன்னரே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? 'ஐம்பதும் அறுபதும்' நாடகம் பற்றியும் கருத்துப் பரிமாறிக் கொண்டபோது "அண்ணே, ஐம்பதாமாண்டு வராத அபிவிருத்தி தமிழ் நாட்டுக்கு அறுபதாம் ஆண்டு வந்துவிடும் என்று கூறுகிறீர்களே அவ்வாறு அறுபதாமாண்டு சுபீட்சம் ஏற்படா விட்டால் என்ன செய்வீர்கள்? உங்கள் வாக்குப் பெய்த்துவிடுமே?" என்று நான் கேட்டேன்.

"நான் தற்கொலை செய்து விடுவேன் தம்பி!" என்று சட்டென்று கலைவாணர் பதிலளித்தார். 'அறுபதாமாண்டு நாட்டுக்கு சுபீட்சம் ஏற்படாது என்பதை முன்னதாகவே அறிந்து கொண்ட கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார்' என்று தான் அந்தக் கட்டுரையின் முடிவில் எழுதியிருந்தேன்.

இதனை எம்.ஜி.ஆர். அவர்களிடம் நான் கூறினேன். அவர் என்னிடம் "உண்மையாகவே இதற்காகத்தானே "கலைவாணர் தற்கொலை செய்து கொண்டார், என்று நீங்கள் எழுதினீர்கள்? இதனைவிட வேறு எந்தக் காரணமும் இல்லையே?" என்று எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் கேட்டார். நானும் "வேறு காரணம் எதுவுமில்லை!" என்று கூறிவிட்டேன். அந்த மாலை இருளிலும் எம்.ஜி.ஆர். அவர்களின் தங்கவர்ண முகத்தில் திருப்திக்கான அடையாளம் ப்ளிச்சிட்டதை என்னால் அவதானிக்க முடிந்தது. இருப்பினும் எனக்கு ஒரு சந்தேகம் எழவே செய்தது. ஏற்கனவே டி.கே.சன்முகம் அவர்களும் என்னுடைய கட்டுரையில் சந்தேகம் கொண்டிருந்தார். இக்கட்டுரையைப் பிரசுரிப்பதற்கு எம்.ஜி.ஆர். அவர்களின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். இவர்கள் இருவரும் என்னுடைய கட்டுரை மீது சந்தேகம் கொண்டமைக்கு ஏதோ ஓர் அடிப்படைக் காரணம் இருக்க வேண்டும் என்று என் உள்ளமனதில் ஓர் ஐயம் எழுந்தது.

செப்படம்பர் மாத 'நடிகன் குரல்' இதழில் எனது கட்டுரை சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

நடிகன் குரலில் பிரசுரமான என்று கட்டுரையின் பயனாக எனக்குப் பல அனுகூலங்கள் ஏற்பட்டன. கலைவாணர் அவர்களுடைய இல்லதில் கலைவாணரின் முதலாவது சிரார்த்ததின சொண்டாட்டங்கள் 1958 செப்டம்பர் 18ம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றன. இதற்கு எனக்கும் அழைப்புக் கிடைத்தது. அன்று காலையிலேயே அங்கு சென்றிருந்தேன்.

காலையில் காருக்குறிச்சி அருணாசலம் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. ஓவிய மன்னர் மாதவன் வரைந்த கலைவாணரின் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது.

அழைக்கப்பட்டிருந்த அத்தனை பேருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. கலைஞர் கருணைநிதி அவர்களுக்கிடது பிறமாக திரு.எம்.கே.ராதா ('சந்திரலேகா' கதாநாயகன்) அவர்கள் அமர்ந்திருந்தார். ராதா அவர்களுக்கு இடது புறமாக நான் அமர்ந்திருந்தேன்.

உணவு பரிமாறுவதற்கு சற்று முன்னர் சுமார் ஒன்பது பத்து வயது மதிக்கத்தக்க குண்டான ஒரு சிறுமி எங்கள் முன்னிலையில் ஓடி வந்தாள். அவளைத் துரத்திக் கொண்டு வேறொரு சிறுவன் ஓடிவந்தான். தரையை உராசிக் கொண்டிருந்த பட்டு பாவாடையிலிருந்த அந்தச்சிறுமி; பாவாடை தடுக்கி கீழே விழுந்து விட்டாள். என்னருகிலிருந்த ராதா அவர்கள் இச்சிறுமியைத் தூக்கி தனது மடியில் வைத்துகொண்டு அவளுடைய பாவாடையையும் சரிசெய்தார்.

அச்சிறுமியிடம் "ஓம் பேருரென்னம்மா?" என்று கேட்டார். "அம்மு!" என்று அச்சிறுமி கூறினாள். கற்றுத்தள்ளி எதிர்ப்புறமிருந்த ஒரு பெண்மணி எழுந்து எங்களருகில் வந்து 'எம்பொண்தாங்க!" என்றார். அவர் வேறுயாருமல்ல, நடிகை, சந்தியாதான். ராதா அவர்களின் மடியில் இருந்த பெண் தமிழ் நாட்டின் முதலைமச்சராகவிருந்த ஜெயலலிதா தான். பருமனான சொக்குகளுடன் இருந்த அந்தச் சிறுமியை அப்போது நானும் ஒரு தடவை சொக்கைப் பிடித்து செல்லமாகக் கிள்ளி விட்டேன்.

கலைவாணர் அவர்கள் பயன் படுத்தி வந்து தங்க மூடியுடன் கூடிய பார்க்க போனா அன்று கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு கலைவாணர் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். அவர்களிடம் கடற்கரை மணலில் ஏறுத்தாழ இரண்டு மணிநேரம் அமாட்ந்திருந்தேன் வண்டியில் உடனெடுத்து வந்திருந்த இனிப்பு மற்றும் பஜ்ஜி போன்ற பதார்த்தங்களை உண்டு, பிளாஸ்கில் இருந்த காபியையும் குடித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம். எம்.ஜி.ஆர். அவர்களை லாயிட்ஸ் சாலையிலுள்ள சக்கரபாணி அவர்களுடைய இல்லத்தில் இறக்கிவிட்டு திரு.பத்மநாபன் தேனாம்பேடட்டையிலுள்ள எல்டம்ஸ் சாலையிலுள்ள எனது அறையில் இறக்கி விட்டனார். பத்மநாபனுடன் நான் திரும்பும் போதுதான் நான் எழுதியிருந்த கலைவாணர் பற்றிய கட்டுரையில் திரு.சண்முகம் அவர்களுக்கும் எம். ஜி.ஆர் அவர்களுக்கும் எற்பட்டிருந்த சந்தேகத்தின் காரணத்தை அறிய முடிந்தது.

கலைவாணர் அவர்கள் பெரும் தொகை கடன்பட்டிருந்தார். அவற்றை அடைக்கப் பணம் சம்பாதிக்க முடியவில்லை.

இரா. பத்மநாதன்

இது மட்டுமல்ல, வேறுபல பிரசசனைகளாலும் கலைவாணர் அவர் கள் தாக்கப் பட்டிருந்தார். இவற்றினால் உண்மையில் கலைவாணர் தற்கொலையே செய்து கொண்டார் என்ற கருத்து ஒரு சிலர் மத்தியில் பரவியிருந்தது.

திரு.பத்மநாபன், கலைவாணர் அவர்கள் உண்மையில் நஞ்சு அருந்தி தற்கொலை செய்ய முயன்றார் என்றும் அவரை உயிருடன் காப்புற்றுவதற்காக மத்திய மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று பலதரப்பட்ட உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அவருடைய உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது, என்று என்னிடம் தெரிவித்தார்.

கலைவயுலகத்திலுள்ள ஒரு சிலருக்கும் கலைவாணருடைய குடும்பத்தினர் சிலருக்கும் மட்டுமே தெரிந்திருந்த இந்த இரகசியம் இலங்கையிலிருந்து சென்றிருந்த எனக்குத் தெரிந்து விட்டதோ என்று தான் அவர்கள் சந்தேகப் பட்டார்கள்.

இக்கதையைக் கேட்ட எனக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

கலைவாணர், கவிஞர் கண்ணதாசனின் அண்ணன் ஏ.எல்.ஸ்ரீனிவாசன் அவர்களிடம் இரண்டு இலட்சம் வரை கடன் பட்டிருந்தார் கலைவாணர் மருத்துவமனையிருந்தபோது ஏ.எல்.எஸ். அவரைப்பார்க்கச் சென்றிருந்தார். அப்போது கலைவாணர் ஏ.எல்.எஸ். அவர்களுடைய இருகைகளையும் பிடித்து தேம்பித் தேம்பி அழுதிருக்கிறார்.

ஏ.எஸ்.எஸ். அவர்கள் கலைவாணரிடம் 'அண்ணா' எதற்காக அழுகிறீர்கள்- நான் இங்கு உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். கடன் பணத்தைத் திருப்பி தரும்படி கேட்க வரவில்லை. நீங்கள் எனக்குப் பணம் தரவேண்டிய அவசியமில்லை. நீங்கள் குணமாகி வருவீர்களானால் அதுவே போதும் அமைதியாக இருங்கள்! என்று கலைவாணரின் கண்ணீரைத் துடைத்துவிட்டாராம்.

இச்சம்பவத்தையும் திரு.பத்மநாபனே என்னிடம் கூறினார்.

இந்தக் கட்டுரைத் தொடரில் வாசகர்களை நாம் இடையில் திசை திருப்பிவிட்டோம். பதுளை மாநகரில் கலைவாணரின் நாடகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ததில் பல சுவையான சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றை மீண்டும் தொடர எண்ணியுள்ளேன். காலத்தின் கோலத்தால் எத்தனையோ சம்பவங்களை நான் மறந்தும் போனேன். பதுளையைச் சேர்ந்த கலாபூஷணம், கவிமணி தமிழோவியன் அவர்கள் பல சம்வங்களை எனக்கு நினைவூட்டி கடிதங்கள் எழுதியுள்ளார். அச்சம்பவங்களையும் தொடராக தரவேண்டும்.

மட்டக்கப்பு பகுத்தறிவு இயக்கத்துடன் பதுளை திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்தே கலைவாணரின் நாடகத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

தி.மு.கவின் பிரமுகர் திரு சாமி அவர்களைப் பற்றி எழுதியிருந்தேன். அவர்களுடைய உண்மையான பெயர் மு.வே.பெ.சாமி என்பதாகும். அவருடைய புகைப்படம் இப்பத்தியில் இடம் பெற்றுள்ளது.

**(இன்னும் வரும்)**

---

# திரை உலகில் கருணாநிதி

09



மந்திரிகுமாரி'யை அடுத்து, கருணாநிதியின் அடுத்த கதை ஒன்றை படமாக்க விரும்பினார் மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம். கருணாநிதியும், 'ஒரேமுத்தம்' என்ற கதையின் எழுத்துப் பிரதியை சுந்தரத்திடம் கொடுத்தார். ஆனாலும் கருணாநிதிக்கு ஓர் ஐயம், தன் கதையை பயன்படுத்திக் கொண்டு, அவர்களது கதை என்ற சொல்லி விடுவார்களோ என்று! 'மந்திரிகுமாரி' ஏற்கனவே மேடையில் வெற்றி பெற்றிருந்ததால், தன்னிடம் உரிமை வாங்கினார்கள். இந்தக் கதை வெறும் கைப்பிரதியாகத்தானே இருக்கிறது, திருடி விட்டால் என்ன செய்வது? என்ற யோசித்தார். அன்று இரவே தன் கையெழுத்துப் பிரதியை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஜலகண்டாபுரம் என்ற ஊருக்குப் போனார். ஞாயிற்றுக்கிழமை அங்கு தங்கினார். தன்னுடன் மாடர்ன் தியேட்டர்ஸில் பணியாற்றிய ஜலகண்டாபுரம் கண்ணன் உதவியுடன், ஒரேநாளில் தனது, 'ஒரே முத்தம்' கதையை அச்சாக்கி, மறுநாள் திங்கட்கிழமை காலை அதை நூல் வடிவில் கொண்டு வந்து முதலாளி பி. ஆர்.எஸ்., சிடம் கொடுத்தார்.

"அதற்குள் எப்படி அச்சாக்கினாய்?" என்றார் பி. ஆர்.எஸ்., ஆச்சரியத்துடன்.

"முன்பே கொடுத்திருந்தேன்; அச்சாகி விட்டது. உங்களுக்குப் படிக்க சவுகர்யமாக இருக்கும் என்று கொடுத்தேன்," என்று சமாளித்தார் கருணாநிதி.

ஆனாலும் பி. ஆர்.எஸ்., கருணாநிதியின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டார். தன் மீது நம்பிக்கையில்லாத கருணாநிதியின் கதையை படமாக்கக் கூடாது என்று கூறி, 'ஒரேமுத்தம்' தயாரிப்பை கைவிட்டு விட்டார்.

ஆனால் கருணாநிதி இந்த விஷயத்தை 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிடவேயில்லை.

மாடர்ன் தியேட்டர்சில்தான் கவிஞர் கண்ணதாசன், கருணாநிதிக்கு அறிமுகமானார். மு.க.வின் நண்பர் என்.எஸ். சண்முகவடிவேலு ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்: 'மாடர்ன் தியேட்டர்ஸில் அவர் வசனம் எழுதிக் கொண்டிருந்த நேரத்தில் என்னையும் உடனழைத்துச் செல்வார். ஒரு சமயம் எங்களோடு, கண்ணதாசனும் தங்கியிருந்தார். மூவருக்கும் டிபன் வந்தது. நான் உள்ளே குளித்துக் கொண்டிருந்தேன். கண்ணதாசன் எனக்கு வந்ததையும் சேர்த்து சாப்பிடத் துவங்கினார்.

இதைப் பார்த்த கருணாநிதி, 'மூன்று பேர் இருக்கிறோம். இரண்டு பேர் பங்கை நீயே சாப்பிட்டு விட்டாய். உள்ளே குளிப்பவனின் கதியென்ன?' என்று கேட்டார்.

'கண்ணதாசன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அதைக் கண்டு கோபமுற்ற கருணாநிதி, தன்னுடைய பங்கையும் எடுத்து வெளியே எறிந்து விட்டுப் போய் விட்டார்.

கண்ணதாசன் காலமானதும், அவரது நினைவு நாள் கூட்டத்தில் பேசிய கருணாநிதி, 'ஒருமுறை நான் பொள்ளாச்சி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக கோவை வழியாகச் சென்றேன். கோவை தெரு ஒன்றின் வழியே நடந்து செல்லும் போது, ஒரு வீட்டிலிருந்து 'கருணாநிதி! கருணாநிதி' என்று குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

'ஒரு வீட்டின் ஜன்னல் வழியே கண்ணதாசன் கூப்பிட்டார். போனேன் தேனீர் வரவழைத்துக் கொடுத்தார். சாப்பிட்டேன். 'எங்கே இந்த வழியாகப் போகிறாய்?' என்று கேட்டார். பொதுக்கூட்டத்தில் பேசப் போகிறேன் என்றேன். நானும் வருகிறேன் என்றார். நான் பேசப் போவதோ நாஸ்திக-சுயமரியாதை கூட்டம். நீரோ நெற்றியில் விபூதிப் பட்டையும், குங்குமமுமாக இருக்கிறீர். நீ எப்படி பேச முடியும் என்றேன்.

'ப்பூ! இவ்வளவுதானா? என்று கூறி, உடனே தனது நெற்றியிலிருந்த விபூதிப் பட்டையை அழித்துவிட்டு, 'இப்போ சரிதானே! வா, போகலாம்,' என்று என்னுடன் வந்து விட்டார். அந்த கூட்டத்தில்தான் 'வட்டிக்கு வட்டி வாங்கும் செட்டிமார் நாட்டில் பிறந்தவன் நான்!' என்று பேச்சைத் தொடங்கினார்!' என்று பேசினார் கருணாநிதி. ஆனால் அதற்கு முன்பே இவர் எழுதிய, 'நெஞ்சுக்கு நீதி' புத்தகத்தில், வேறுமாதிரி எழுதியுள்ளார்: 'சேலத்திலிருந்து பொள்ளாச்சி கூட்டத்திற்கு கோவை வழியாக என்னுடைய பயணம் ஏற்பாடாகி இருந்தது. நண்பர் கண்ணதாசனும், கோவையில் இருந்து என்னுடன் கலந்து கொண்டு பொள்ளாச்சி வருவதாக எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அவ்வாறே கோவையில் என்னைச் சந்தித்தார்.

நெற்றியில் குங்குமப் பொட்டு இருந்தது. அதன் கீழே ஒரு விரல் விபூதியும் பூசப்பட்டு இருந்தது. இருவரும் பேருந்து வண்டியில் பொள்ளாச்சிக்குப் பயணமானோம். பேருந்து வண்டியிலேயே என் பகுத்தறிவுப் பிரசாரம் தொடங்கிற்று. அவரும் என்னுடன் வாதம் செய்து கொண்டே வந்தார். பொள்ளாச்சியில் போய் இறங்கினோம். என்னுடன் வந்து கொண்டிருந்த அவர் கொஞ்சம் பின் தங்கினார். திரும்பிப் பார்த்தேன். என்னருகே வந்து கொண்டிருந்தார். நெற்றியைக் கவனித்தேன். விபூதியும் இல்லை; குங்குமமும் இல்லை. வெறும் நெற்றிதான் இருந்தது. பொள்ளாச்சி கூட்டத்தில் அவரும் பேசினார்.

ஆர்.சி.சம்பத்

இதில் எது உண்மை? கருணாநிதி பேசியதா? அல்லது எழுதியதா? அதை கருணாநிதியே சொன்னால்தான் உண்டு.

சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த தி.மு.க., தொடக்க விழாவிற்கு மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து கருணாநிதியும், கண்ணதாசனும் வந்து கலந்து கொண்டார்கள்.

*(வருவார்)*

# மதிப்பு

**மு.கலை**


நகரின் மத்தியில் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் காளி அம்மனின் கோயிலை வந்தடையும் எல்லா வீதிகளிலும் பக்தர்கள், தேரில் பவனி வரும் காளி அம்மனின் அருள் பெற சென்றுகொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருத்தியாக செண்பகாவும் பக்கத்துவீட்டு அக்காவுடன் நடந்து கொண்டிருந்தாள். தெளிந்த வானம் போன்ற அவளது முகம் இன்று வாடிப்போயிருந்தது.

அவளுடைய இரண்டு வருட திருமண வாழ்வில் கணவனில்லாமல், எந்தவொரு இடத்துக்கும் சென்றதேயில்லை. ஆனால் வீட்டில் கணவன் இருந்தும்கூட, முதற்தடவையாக தனியே சென்று கொண்டிருந்தாள்.

வீதியில் கணவன்-மனைவி ஜோடியாக செல்பவர்களைப்பார்க்க, அழுகை கிளர்ந்து வந்தது. அடக்கிக் கொண்டாள். கணவன் வராதிருப்பதனால் அவளும் கோயிலுக்கு வராதிருந்திருப்பாள். ஆனால் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றியாக வேண்டுமே என்பதற்காகவே சென்று கொண்டிருந்தாள்.

செண்பகாவின் பிடிவாத குணத்தைக் குறைத்து, அவளை மாற்றியாக வேண்டுமே என்ற எண்ணத்தில்தான் அவளது கணவன் ராஜேஸ் பிடிவாதமாக கோயிலுக்கு வராமல் வீட்டில் இருந்துவிட்டான். ஆனால் அந்நகரமே காளிஅம்மனின் திருவருளைப்பெற இன்று கோயிலிலேயே திரண்டிருக்கும்.



ராஜேஸ், செண்பகா இருவரும் பாடசாலையில் படித்த காலத்திலேயே காதலித்துக் கைப்பிடித்தவர்கள். அவர்கள் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயினும், இவர்களது காதலுக்கு இருவீட்டாரும் சிவப்புக் கொடி காட்டினர். அதனால் இருவீட்டாரின் அனுமதியைப் பெறாமலேயே திருமண பந்தத்தினுள் சங்கமித்துக் கொண்டனர். இன்று வரை அவர்களது பெற்றோருடன் ஒற்றுமையில்லை.

நண்பர்களின் உதவியுடன் சில்லறை வியாபாரம் ஒன்றை நடாத்திவருகின்ற ராஜேஸ், இதுநாள் வரையில் செண்பகாவை எந்தவொரு விடயத்திலும் கவலைப்பட விட்டதில்லை.

வீட்டிற்குத் தேவையான பொருட்கள், செண்பகாவிற்கு போதுமான உடுப்புக்கள், நகைகள் எல்லாம் வாங்கிக்கொடுத்திருந்தான். வீட்டை எதிர்த்து காதல் திருமணம் புரிந்தவர்கள் நிறையப்பேரது குடும்பத்தினுள் கஷ்டம், சண்டை, சச்சரவு என்பன குடிபுகுந்திருப்பது இன்றைய நாளில் சாதாரணமானவையாக இருந்தபோதும், ராஜேஸ் வித்தியாசமாக செண்பகாவை எல்லா விடயங்களிலும் சந்தோசமாகவே வைத்திருந்தான்.

செண்பகாவிடம் அதிகப்படியான முன்கோபமும் பிடிவாதகுணமும் மலிந்துகாணப்படுகின்றன. காதலிக்க முன்பே இவற்றை ராஜேஸ் அறிந்திருந்ததனால் அனுசரித்து நடந்தான். விட்டுக்கொடுத்து வாழ்ந்தான். எனினும் இவ்வாறான குணங்களிலிருந்து அவளை மீட்பதற்காக இப்போது விட்டுக் கொடுப்புக்களைக் குறைத்திருந்தான்.

ராஜேஸ் தனது வியாபாரத்தைப் பெருக்குவதற்காக தேவைப்பட்ட நிதியைத் திரட்டுவதற்கு செண்பகாவின் தாலி தவிர்ந்த ஏனைய நகைகளைப் பெற்று அடகு வைத்து விட்டிருந்தான். காளி கோயில் திருவிழாவுக்கு முன்பே அவற்றை மீட்டுத்தர வேண்டும் என்ற நிபந்தனையின் பெயரிலேயே செண்பகா அவற்றை வழங்கியிருந்தாள்.

திருவிழா முடியும் நிலைக்கு வந்தும் தனது நகைகளை மீட்டுத்தரவில்லை என்றுதான் இன்றைய பிரச்சனை. திருவிழா தொடங்கிய நாள் முதலே நகையை மீட்டுத்தரச் சொல்லி ராஜேஸிடம் கேட்டவண்ண மிருந்தாள்.

"தேர்த்திருவிழாவிற்கு நிறையப் பேர் வருவாங்க. அந்த இடத்தில் வேறு நகைகள் இல்லாமல் தாலியுடன் மட்டும் எப்படி நிற்பது?" என்பதுதான் அவளது வாதம் 'காதல் திருமணத்தில் சங்கமித்தால், ஒவ்வொரு வருட மகோற்சவ திருவிழாக்காலம் முழுவதும் அடியழித்தல் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவேன்!' என்ற வேண்டுதலுக்கு இணங்கவே அது நிறைவேறியதனால் தனது நன்றிக்கடனை நிறைவேற்றுவதற்கே வந்து கொண்டிருக்கிறாள்.

'தனது நகைகள் எல்லாம் இல்லாமல் கோயிலுக்குப் போகமாட்டேன்' என்று பிடிவாதமாக இருந்தமையினால் தெரிந்தவர்களிடம் நகைகள் இரவல் பெற்றுக் கொடுத்தான் ராஜேஸ். அதன்பின்புதான் அவள் கோயிலுக்குப் புறப்பட்டிருந்தாள்.

செண்பாகவிடம் மட்டுமல்ல. பெரும்பாலான பெண்களிடம் உள்ள பொதுவான குணம் இது. 'நான்குபேர் கூடியுள்ள பொது இடங்களில் நல்ல உடை உடுத்தி, நகைகள் நிறைய அணிந்து செல்ல வேண்டும்!' என எதிர்பார்ப்பது பொதுவாக எல்லாப் பெண்களிடமும் காணப்படும் ஓர் இயல்புதான். சொந்தமாக நகை இல்லாவிட்டால் இரவல் நகைகளாவது பெற்றுத்தான் செல்வார்கள்.

ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கு ஆடம்பர உடைகள் உடுத்தி நகைகள் அணிந்து செல்வது இன்று நாகரிகம்தான். ஆனால் கோயிலுக்கு தோய்த்துலர்ந்த ஆடைஅணிந்து போனால் போதுமானது என்று கூறப்படுகிறது. இன்று கோயில் திருவிழாக்களைக்கூட ஆடம்பர விழாக்களாக மாற்றி விட்ட நிலையில் நாகரிக முன்னேற்றம் விளங்கின்றது.

கடவுள் மீது மட்டும் பக்திகொண்டு அருளைப்பெறச் செல்பவர்களுக்கு ஆடம்பரமான உடைகள், நகைகள் எதற்கு? செண்பகாவிடம் மட்டுமல்ல, கோயிலுக்கு வந்த அனைவரிடமும் கேட்கப்படவேண்டிய கேள்வி தான் இது.

கோயிலை வந்தடைந்த செண்பகா தனது நண்பர்கள், உறவுக்காரர்களை சந்திக்க நேர்ந்தது. முன்பெல்லாம் அவர்கள் இவளை கண்டு கொள்ளாவிட்டாலும், இவள் வலிந்து சென்று கதைப்பாள். ஆனால் இன்று அவர்களைப்பார்த்தால், முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு சென்றாள். "கணவனைக் காணோமே?" என யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வது என்பதற்காகவே யாரையும் சந்திக்க விரும்பாது பிள்ளையார் கோயில் நோக்கி நடந்தாள்.

தேர்கள் வலம்வரத் தொடங்கிவிட்டன. பக்தர்கள் கூட்டம் அலைமோதியதால் நெருக்கம் நிறையவே இருந்தது. சிரமப்பட்டுச் சென்று பிள்ளையாரைத் தரிசித்து விட்டு, காளி அம்மனை வணங்க கோயில் வாசலை அடைவதற்கு பிரயத்தனம் எடுத்தாள்.

பக்தர்கள் கூட்டம் நிறைந்திருந்ததனால் இலகுவில் நகரமுடியவில்லை. பக்தர்களின் நெரிசலில் அகப்பட்டு இடிபட்டுக் கொண்டிருந்தாள். சிலர் தரையில் கால் பதிக்காமலேயே நடந்து சென்றனர். எதிரெதிராக நகர்ந்து கொண்டிருந்தவர்கள் மோதுண்டு, போக நினைத்த திசைமாறிச் சென்று கொண்டிருந்தனர்.

நெரிசலிலிருந்து மீண்டு காளி கோயில் வாசலை அடைவதற்கு பதினைந்து நிமிடங்கள் கரைந்து போயிருந்தன. காளி அம்மனை வணங்கிவிட்டு, 'அடி அழித்தல்' நேர்த்தியை நிறைவேற்ற நின்றவர்கள் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டாள் செண்பகம்.

தனது நேர்த்தியை ஆரம்பிக்க முதலாவது தடவையாக 'பஞ்சாங்க நமஸ்காரம்' செய்ய இருந்த போது இதயத்தில் ஓங்கி அறைந்த உணர்வு தோன்றியது.

அவள் அணிந்து வந்த இரவல் நகைகளில் ஒன்றான 'அட்டியல்' அவளது கழுத்திலிருந்து காணாமல் போயிருந்தது.

# தப்பு



"அடிப்பாவி மகளே! இப்படிப் பண்ணிப்போட்டு வந்து நிக்கிறியேடி.... இதுக்கு நான் என்னடி செய்வேன்...? இதப் போய் நான் யாருக்கிட்டடி சொல்லுவேன்...? நான் படிச்சு படிச்சு சொன்னேனடி....அந்தப் பையன் வீட்டுக்குப் போகாதே.... போகாதே எண்டு; நீ கேட்டியாடி....? இப்ப இந்த விஷயம் உன் அப்பாவுக்குத் தெரிஞ்சா நம்ம ரெண்டு பேரையும் வெட்டிப் போடுவாரேடி...." என்று கோமதி அம்மா கண்களில் கனல் பறக்க தன் மகள் சுமதியைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தாள்.

சுமதியோ தனது அறைக் கதவினைச் சாத்தித் தாழ்ப்பாழ் போட்டுக் கொண்டு, அக்கதவின்மேல் சாய்ந்து கண்களை இறுக்க மூடியவாறு நின்று கொண்டு தன் தாயின் தீப்பொறிப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"அடியே....ய்... நான் இவ்வளவு கத்தியும் நீ உன்பாட்டுக்கு உள்ளுக்குள்ளேயே இருக்கிறாயா....? மரியாதையா வெளியே வா...." என மீண்டும் கத்தினாள்.

அதைத் தொடர்ந்து உடம்பு முழுவதையும் ஒரு பெரிய துப்பட்டியால் மறைத்தபடி மெதுவாகக் கதவினைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சுமதி.

அவளை ஒரு கணம் உறுத்துப் பார்த்து விட்டு பின் தாழ்ந்த குரலில், "இப்ப எத்தனை மாசம்டி...?" என்று கேட்டாள் அத்தாய்.

"ரெ..... ரெண்டு.... மாசம்மா.....!" சேயும் திணறியவாறே மெதுவாகப் பதிலளித்தாள்.

"அய்யோ....! இவ்வளவு நாளும் பெத்த தாய்கிட்டேயே ஏண்டி இதை முடி மறைச்சே..?" என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது கோமதி அம்மாவின் கணவரும்; சுமதியின் தந்தையுமான சுந்தரம் வீட்டுக்குள்ளே வந்தார்.

**அமானுல்லாஹ் ஏ.மஜீத். மருதமுனை 03.**

அங்கிருந்த சூழல் தாய்க்கும் சேய்க்கும் ஏதோ தகராறு நடந்திருக்கின்றது என்பதை அவருக்குச் சொல்லாமல் சொல்லியது. உடனே அவர் "இங்கே என்ன தகராறு....?" எனக் கேட்டார்.

அவ்வளவுதான் சுமதி ஓடிச் சென்று தனது தந்தையைக் கட்டிக் கொண்டு அழத் தொடங்கினாள். அதைப் பார்த்ததும் சுந்தரத்தின் உள்ளம் பதறியது. சட்டென நிமிர்ந்து தனது மனைவியைப் பார்த்து "ஏண்டி.... இவ அழுறா?" எனக் கேட்க,

"அதை எப்படிங்க என் வாயால சொல்வேன்? அடுத்த மாசம் அவட ஸ்கூல்ல நடக்கப்போற ஏழாம் தரப் பரீட்சைக்குப் படிக்கப்போறேம்மா என்றாள். நானும் சரி படிக்கத்தானே வேணும் என்றேன். அதுக்கு அவ இல்லேம்மா நம்ப பக்கத்து வீட்டு பாபுகூட படிக்கப்போறேன்; அவனும் என் கிளாஸ்தானே என்றாள். நானும் பிள்ளை நல்லா படிக்கட்டும் எண்டு அங்கே அனுப்பினேன். கொஞ்ச நாளைக்கு அப்புறம் தான் தெரிஞ்சிது அவனுக்கு ஏதோ சொறி சிரங்கு இருப்பதாகவும், அது ஏனையவங்களுக்கும் தொற்றக்கூடியதாம் எண்டு. அதுக்குப் பிறகு இவள அங்கே போகாதடி எண்டு சொன்னேன். இவளோ அது நான் அங்க தள்ளி இருந்து படிப்பேன்மா எண்டு அடம்பிடிச்சு அங்க படிக்கப்போய் வந்தா. கொஞ்ச நாளா நானும் அதைக் கண்டுக்கல. ஆனா இண்டைக்கு இவளோட உடம்பைப் பாத்தப்போ ஒரே கொப்புளம் கொப்புளமா வந்திருக்கு. இது எவ்வளவு நாளாடி? எண்டு கேட்டா, ரெண்டு மாசமா எண்டு சொல்றாள். என்ன தைரியம் பாத்தீங்களா அவளுக்கு? இப்ப என்னங்க பண்றது? பெத்த வயிறு பத்தி எரியுது..." அனைத்தையும் தன் கணவனிடம் ஒப்புவித்துவிட்டு மூச்சு வாங்கினாள் கோமதி அம்மா.

தன்னைப் பிடித்தபிடியை நழுவ விடாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த தனது சின்ன மகளின் தலையை அன்போடு தடவியவாறு "சரி... சரி.... நடந்தது நடந்து போச்சு... ஆரம்பத்திலேயே நீ இதைக் கவனியாம விட்டுட்டே.... இனியும் இவள ஏசிப் பிரயோசனமில்லை.... நீ போட்ட சத்தத்துல அவ பயந்தே போயிட்டா.... இவள பக்கத்துல இருக்கிற டாக்டருக்கிட்டே நான் கூட்டிக்கிட்டுப் போய் வாறன். இப்ப இந்த நோயைக் சரிப்படுத்த நெறைய மருந்துங்க வந்திருக்காம். நீ ஒண்ணும் கவலப்படாம இரு...." என்றவாறு தனது மகள் சுமதியை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே கிளம்பினார் சுந்தரம்.

# அரட்டை அரங்கம்

**அல்வையூர் காந்தி அருணாசலம் – கனடா**

திருமண வீடு கலகலத்துக் கொண்டிருந்தது. பெண் வீட்டுக்காரர் வருபவர்களை வாயெல்லாம் பல்லாக வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். சில சிறுவர்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடிப்பிடித்து விளையாட, பெரியவர் ஒருவர் பலத்த சத்தத்துடன் அவர்களை அதட்டி மிரட்டிக் கொண்டிருந்தார். புத்தம் புதிய நீட்டுப் பாவாடையை ஒரு கையால் சிறிது உயர்த்திப் பிடித்தபடி சிறுமி ஒருத்தி அவதானமாக அன்ன நடை பயின்று கொண்டிருந்தாள். பட்டு வேட்டி சரசரக்க ஆண்களும், நிறநிறமான சரிகைப் புடவையும் தலைகொள்ளாத பூக்களும் கழுத்து நிறைந்த நகைகளுமாகப் பெண்களும் ஏதோ தாம்தான் புதுமணப்பையன், பெண் போல் புதுப் பொலிவுடன் ஜ்வலித்தார்கள்.

மயில் நீல நிறப் புடவைக்கு கருநீலக் கரையும், அதே கரு நீலத்தில் கட்டைக் கை வைத்து புது ஃபாஷனில் சிக்கென்றிருந்த பிளவுசும் வாணியின் கொக்கு வெள்ளை நிறத்தை இன்னும் எடுப்பாகக் காட்டியது. தோளில் சுருண்ட மயிர் காடாகப் படர்ந்திருக்க, கும்மென்ற மல்லிகைச் சரத்தின் மணம் மூக்கைத் துளைத்தது.

"யாரடி இது? உவள் சாந்தினியின்ரை மோளே? தலையையும் அவிட்டு விட்டுக் கொண்டு, ஏதோ இழவு வீட்டுக்கு வந்த மாதிரி....." பெருமூச்சுடன் கமலம் தலையிலடித்துக் கொண்டாள்.

"அதையேனக்கா பேசுவான்.... இந்தக் காலப் பொடியன் ஒரு சதத்துக்கு உதவாததுகள். அங்கை பாரனக்கா.... சந்திரான்ரை பொடிச்சி விழுந்து விழுந்து பொடியன்களுக்கு ஜூஸ் குடுக்குது. கலிகாலந்தான். அந்தக் காலத்திலை நாங்களெண்டால் ஒரு கல்யாண வீடு, சாமத்திய வீடெண்டு போயிருப்பமே. இப்ப குமருகள் எல்லாம் கட்டவிழ்த்த மாடுகள் மாதிரியெல்லே திரியுதுகள்!" தனது மகள் அழகு குறைந்து விட்டாளே என்ற ஆதங்கம் கொப்பளிக்க நீட்டி முழக்கினாள் நீலா.

"நானும் தான் அந்த நேரந் தொடங்கிப் பாக்கிறன். இந்த ஜூஸ் குடுக்கிற பொடிச்சியள், எங்கடை பக்கம் கடைக்கண்ணால் கூடப் பாக்கிறாளில்லையே? தூ.... வெக்கங் கெட்டதுகள். அங்கை பாரடி பிள்ளை. உவள் சாந்தினியின்ரை வாணியை, என்ன மாதிரி பல்லைக் காட்டிக் காட்டி மயிலு வாத்தியின்ரை பொடியனோடை கதைக்கிறாளெண்டு...." கண்கள் அகன்று கதை பேச, வியப்பும் பதைப்புமாகக் கமலம் நீலாவை இரகசியமாகச் சுரண்டினாள்.

"ஏனக்கா, உங்களுக்குத் தெரியாதே. ரெண்டு பேரும் லவ். ஒண்டாப் படிக்கிற தாலை படிப்பு விஷயம் கதைக்கிறம் எண்டு தாய் தகப்பனைப் பேய்க் காட்டுதுகள். என்னிலை உந்தப் புலுடா எல்லாம் வாயாது. அதேன், படிப்பு விசயத்தை ஒரு பொம்பிளைப் பிள்ளையோடை அவளும், ஒரு பொடியனோட அவனும் கேக்கலாந்தானே?" ஒரு துப்பைக் கண்டு விட்ட துப்பறிவாளரின் பெருமை நீலாவின் குரலில் இழையோடியது.

"இந்தக் காலத்துப் பொடியள் அடங்காப்பிடாரியள், மட்டுமில்லையடி பிள்ளை, சரியான அமசடக்கியள். நாங்களெல்லோர் வெளிவாய். எனக்கு முந்தியே தெரியும், உந்தப் பொடிச்சி ஆட்டம் போடுமெண்டு. தோல் கொஞ்சம் சிவத்தால் போதுமே.... பிள்ளை! தாய் தேப்பன் ஆட விட்டிருக்குதுகள். எங்களுக்கேனப்பா, கேடு கெட்டதுகளோடை கதை? நல்ல விசயம் நாட்டிலை எத்தனையோ கிடக்கு!" என்று பெருந்தன்மையுடன் விடயத்தை மாற்றினாள் கமலம்.

வாணி புள்ளிமானாகத் தோழி நளினியிடம் ஓடி வந்தாள்.

"ஏண்டி வாணி, இண்டைக்குத்தான் சாறி அரங்கேற்றமா? பிளவுஸ் அந்த மாதிரி மாட்சிங்காயும் இருக்கு. கட்டிங்கும் நல்லாயிருக்கடி. எங்கையடி உந்த லிப்ஸ்ரிக் வாங்கினாய்? உன்ரை கலருக்கு நல்லா சூட் பண்ணுது, சும்மா சொல்லக் கூடாது



ஐஸ்வர்யாராய் உனக்கு முன்னாலை அவுட் தான்!"

"சரிதான் போடி!" என்று நெளிந்த வாணி, "ஏண்டி நளினி என்னை மட்டும் சொல்லுறியே. நீ மட்டும் இந்த நக்மா சூட்டிலை எப்படி அசத்தலா இருக்கிறாய் தெரியுமா? அரைவாசிப் பையன்களின் கண் உனக்கு மேலை தான்" என்று கண்ணடித்தாள்.

"நளினி!" என்று யாரோ குரல் கொடுக்க, அவள் அவ்விடத்தை விட்டகன்றாள். அங்குமிங்கும் கண்களைச் சுழல விட்ட வாணி, கலாவையும் ராஜியையும் கண்டு விட்டு அவர்களிடம் நகர்ந்தாள். வாணியைப் பற்றி இகழ்வாக வம்பளந்து கொண்டிருந்த இருவரும் எதிர்பாராமல் வாணியைக் கண்டு விட்டு ஒரு கணம் திடுக்கிட்டாலும் மறுகணம் சமாளிப்புடன் சிரித்தார்கள்.

"வாடி வாணி! உன்னைப் பற்றித் தான் கதைச்சுக் கொண்டிருந்தம். உன்ரை வடிவுக்கு உவள் நளினி உனக்குப் பக்கத்திலை நிண்டு கதைக்க பார்க்கவே சகிக்கேல்லையடி. அவளின்ரை கலரிலை ஒரு கத்தரிப்பூ நிற நக்மா சூட் வேறை. உடுப்பைச் சூஸ் பண்ணேக்கை ஒரு ரசனை வேண்டாமே...?" முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொண்டு அருவருத்தாள் கலா.

"அதையேண்டி கேக்கிறாய். நானும் உனக்கு உந்த நக்மா சூட் நல்லாயிருக்கெண்டு ஒரு கதைக்குச் சொல்ல, அதுவும் உண்மையெண்டு வெக்கப்படுகுது. அந்தக் கண்ராவியை ஏன் கேக்கிறாய்?" என்று கேலி வழியக் கூறினாள் வாணி.

"அதை விடடி. பொம்பளை போட்டிருக்கிற நகையென்ன ஒரிஜினலா, கில்ட்டா? ஒரு ஜொலிப்பையே காணோமே?" என்று மணப் பெண் பக்கம் பேச்சுத் திரும்பியது.

"என்ன கிண்டலாடி. பொம்பளையின்ரை நகையிலை அரைவாசி எங்களட்டைக் கடன் வாங்கினது. அண்ணா சுவிஸ்லை இருந்து எனக்கும் அக்காவுக்கும் பவுணா அனுப்பினவர், விரும்பின டிசைனிலை செய்யச் சொல்லி. பொம்பளையின்ரை அம்மா வந்து மூக்காலை அழுதா. எங்கடை அம்மா குடுத்திட்டா. ஏன் தான் கடன்பட்டு மினுக்குதுகளோ? கடைசியா மாப்பிள்ளைக்கும் பே.பே. எங்களுக்கும் பே.பே யோ யாரறிவார்?"

"மாப்பிள்ளையைப் பாரடி. பஞ்சத்திலை அடிபட்டவர் மாதிரி ஊதினால் விழுந்துடுவார். பொம்பிளை குண்டு பூசணிக்காய் மாதிரி என்னே ஜோடிப் பொருத்தம்?"

"தாலியைப் பாத்தியாடி. பாக்க ஒரு பத்துப் பவுண் வரும். போலை கிடக்கு. ஆனால் உண்மையிலை ரெண்டு மூண்டு பவுண் தான் வரும். உள்ளுக்கை நூல் வைச்சு பொருமலாக் காட்டிறது எங்களுக்குத் தெரியாதாக்கும்?" ஒருத்தி தோள்பட்டையில் மோவாயை இடித்தாள்.

"மாப்பிளையின்ரை கண்ணைப் பாத்தால் குடிகாரன் மாதிரி சிவப்பாக்கிடக்கு. பிறகெங்கை பெரிய தாலி செய்யக் காசு?"

"உடம்பு உப்பிடி மெல்லிசாயிருக்கே, கசமாயிருக்குமோ?" ஒருத்தி தனது மாப்பிள்ளைக்கே கசம் போல் நெஞ்சைப் பிடித்தாள்.

"வணக்கம்!" என்று மாப்பிள்ளையும் பெண்ணும் அருகில் வரவும், மூவரும் அசட்டுச் சிரிப்புடன் கை கூப்பினார்கள்.

"உங்களைப்பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருந்தம். அஜீத்தும் ஷாலினியும் போலை எப்பிடிப் பொருத்தமான ஜோடி தெரியுமா? எங்கடை கண்ணே பட்டிடும் போலை. பிளீஸ்! முதல்ல ஒருவருக்கொருவர் நாவுறு சுத்திப் போடுங்கோ!" ஒருத்தி கூசாமல் அடியோடு பிளேட்டை மாற்றிக் கதைக்கவும், அவளது சாமர்த்தியத்தை மனதார வியந்தபடி மற்றவர்கள் ஆமாம் போட்டார்கள்.

நமட்டுச் சிரிப்புடன் மாப்பிள்ளையும் பெண்ணும் மற்றவர்களிடம் நகர்ந்தார்கள்.

"நெனப்பு!" என்று ஒருத்தி தோளைக் குலுக்கி அழகு காட்ட, மற்றையவர்கள் கலீரிட்டார்கள்.

சிறுமி ஒருத்தி அந்த ஆரவாரத்தையும் மீறிக் கொண்டு பலத்த குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

"பொய் சொல்லக்கூடாது பாப்பா, என்றும் புறஞ்சொல்லலாகாது பாப்பா!" காதுச் சவ்வில் டமாரமடித்த பாடலை காற்றுடன் அனுப்பிவிட்டு, தங்கள் வம்பளப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள் பெரியவர்கள். இந்தப் பாடலை ரசிப்பதற்கும், பின்பற்றுவதற்கும் அவர்கள் என்ன பாப்பாக்களா?

# இலக்கிய நயம்

# வலியும் சுகம் தரும்...?

அறைக்குள் இருந்தான் சுகந்தன்.

புத்தகத்தை விரித்து
வைத்திருந்தாலும் படிப்பில் மனம்
ஓடவில்லை. வெளியே 'க்ளுக்'
சிரிப்புகளும், 'கலீர் கலீர்' வளையல்
ஓசைகளுமாகத் தங்கையின்
தோழிகள்.

பூக்களின் மாநாடு கூடத்தில்
கவிதைகளின் தேன்சிதறல்
அவர்கள் பேச்சில்.

இவன் முளை, எல்லாப்
புலன்களையும் இழுத்து முடி விட்டு,



காதுக்கு மட்டுமே கதவுகள் திறந்து
செயற்பட அனுமதி
வழங்கியிருந்தது.

'ஜல் ஜல்....' கொலுசொலிகள்!

உடலெங்கும் ரத்தத்தைப் பாய்ச்சும்
இதயத்தின் துடிப்பே அவையாக
மாறியிருந்தன.

இதயத் துடிப்புகளைக் காலில்
கட்டியபடியல்லவா இந்தப்
பெண்கள் நடக்கிறார்கள்!

'தயவு செய்து
பாதக் கொலுசுகளைக்
கழற்றிவிட்டு நடவுங்கள்.
இல்லையெனில்
ஒவ்வொரு 'ஜல்' லுக்கும்
விழுந்து துடிக்கிறது.
என் இதயம்!
என்று அறைக்கு இந்தப்
பக்கமிருந்து இவன் மனம் அழுதது.

அந்தக் கூட்டத்தின் நடுவே
அஜந்தாவும் இருப்பாள்.
அஜந்தா!
மலர்களிலிருந்து பிறந்தவள்.
மகரந்தம் உண்டு வளர்ந்தவள்.
அவள் வளைவுகளில் பயணம்
செய்யும்
கண்களுக்கு விபத்து நிச்சயம்.
இடுப்பு நெளிவில் விழுந்த
கண்ணுக்கு, மேலே....
ஏறும் துணிவு வரவே வராது
ஏறிய கண்களோ.....
இமைகளை மறந்துவிடும்!
ஆபத்தான ஏற்றம் தாண்டி
சங்கு வளைவைக் கடந்தால்....
ஊறும் தேன் வாரிதியின் உற்பத்தி
ஸ்தானங்கள்.
உலக வியப்புகளையெல்லாம்
அந்த உதட்டுக்குள்
ஒளித்திருப்பாள்.
இதழ் நடுவில் ஆரம்பித்து,
ஓரங்களில் நீண்டு
மேலெழுந்து கண்களில் வெடிக்கும்
அந்த ஒரு கீற்றுப் புன்னகையில்
உலகில் இருள் அழியும்!

சுகந்தன் அவளோடு பேசி
அறியான். ஆனாலும் அவளை
முழுவதும் அறிந்தவனானான்.

அவளது முதல் பார்வையே-

அவன் இதயத்தைத் துளைத்து, ஒரு
வெற்றிடமாக்கி இயந்திரம் போல
அங்கே இருந்ததையெல்லாம்
துடைத்து அப்புறப்படுத்திவிட்டு,
அவளை மட்டும் முழுதாக
நிரப்பியிருந்தது.

ஒரு துளையிடும் கருவி முனையாக
உட் புகுந்து இதயச் சுவர்களை
உடைத்துப் புதுப்பித்த அவளது
அடாவடித்தாக்குதலில் இவனுக்கு
வலி ஏதும் இருக்கவில்லை. அல்லது
'வலியும் இத்தனை சுகமா' என்று
வியந்திருந்தான்.

பின்னரும்....

பாதிப்பிலிருந்து இவன்
மீண்டுவிடாதவாறு பார்வைகளால்
நிலைகுலைய வைத்தாள்.

முகம் முழுவதும் தங்கையையே
பார்க்க, அவளுடனேயே பேசிக்
கொண்டிருப்பாள் அஜந்தா!

ஆனாலும் இவனைத் தன்

**தருவது முழடில்யன்**

கட்டளைகளுக்குப் பணிய வைத்து,
இவன் பக்கம் திரும்பாமலே இட்ட
உத்தரவுகளின்படி இவனை இயங்க
வைத்து கொண்டிருந்தாள்.

அவளிடமிருந்து கண்ணுக்குத்
தெரியாத நூலிழைகள் புறப்பட்டு
இவனை நோக்கி வந்து
கொண்டிருந்தன. இவன் நூலில்
ஆடுகின்ற பொம்மை ஆனான்.

தரையில் நடக்கும் அவள்
பாதங்களின் மென்மைக்குப்
பயந்தது இவன் நெஞ்சு.

பாரங்களைச் சுமந்திருக்கும்
இடைக்காகவும் வருந்தியது. வீசும்
காற்றுக்கெல்லாம் அவள் கண்றிவிட
மாட்டாளோ என்று இவன்
மூச்சுவிடவே சிரமப்பட்டான்.

அவள் கண்களின் ஓரக் கதிர்
வீச்சுக்காய் இவன் காத்திருக்கத்
தலைப்பட்டான்.

உதடுகளுக்குள் எந்நேரமும் ஒரு
புன்னகையை ஒளித்து வைத்திருக்க
இவளுக்கு எப்படிச்
சாத்தியப்படுகிறது? மொட்டுக்குள்
வாசனை புதையுண்டு கிடப்பதைப்
போல!

இதழ்களுக்குள் மறைந்து கிடக்கும்
அவள் புன்னகை சொல்கிறது.

"என் கண்களைத் திருப்பினால்,
அதற்காகவே தவங்கிடக்கும் உன்
கண்களைத் தாக்கிவிடுவேன்.
ஆபத்தின்றி நான் உனைக் பார்க்க,
நீ அவ்வப்போதாவது இமைகளை
அடைத்துக் கொள்ள
வேண்டாமோ? பார்வைக்கு ஏங்கும்
உன்னிடம் அதைத் தாங்கும்
வலுவுண்டோ?

உன்னை நேர் பார்த்து ஒரு சொல்
பேச விரும்புவேன். ஆனால் நீ
உடைந்து போய் விடுவாய்
என்றல்லவா தோன்றுகிறது!

என் பார்வையைத் தாங்கும்
பக்குவத்தைப் பெறு. பதற்றத்தைத்
தனி. இதயத்தை வலுவுள்ளதாக்கிக்
கொள். அப்போது உன் பக்கம்
திரும்புவேன்."

அவள் புன்னகை அரும்பைப்
பத்திரமாய்ச் சுமந்து அவனைப்
பார்க்காமலே சென்றாள்.

முகைமொக்குள் உள்ளது நாற்றம் போல்
-பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.
(குறள் : 1274)

# சிந்தியா பதில்கள்

➻ **சிந்தியா, கடவுளுக்குப் பலி கொடுக்க ஆடுகளை வெட்டுகிறார்களே, சரியா?**

க. அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

சட்டிபானைகள் செய்யும் குயவர் ஒருவர் அழகழகாய் மண் பாத்திரங்கள் செய்து அடுக்கி வைத்திருந்தார். அந்த வழியே வந்த ஒருவர் பாத்திரங்களையெல்லாம் பார்வையிட்டு விட்டு, அருகே மரத்தில் கட்டி நின்ற ஆட்டைப் பார்த்தார். "இந்த ஆட்டை ஏன் கட்டி வைத்திருக்கிறீர்கள்?" என்று குயவரிடம் கேட்டார்.

"கோயிலுக்கு அதைப் பலி கொடுக்கப் போகிறேன்."

"எதற்குப் பலி?"

"கடவுளை மகிழ்விக்கத்தான்!"

"அப்படியா?" என்று கேட்டுவிட்டு, அங்கிருந்த அழகிய பானைகளையெல்லாம் ஒவ்வொன்றாய்ப் போட்டு உடைக்க ஆரம்பித்தார் வந்தவர்.

பதறிப் போய் ஓடிவந்த குயவர், "ஏன் உடைக்கிறீர்கள்?" என்று கத்தினார்.

அதற்கு, "உனக்கு சந்தோஷமாக இருக்குமே என நினைத்தேன்!" என்றார் பானைகளை உடைத்துக் கொண்டிருந்தவர்.

"நான் செய்த பானைகளை என் முன்னால் போட்டு உடைத்தால் எனக்குச் சந்தோஷம் வருமா?" என்று கேட்டார் கோபமாக.

"நீ மட்டும் இறைவனின் படைப்பை அவர் முன்னால் கொன்றால், அவருக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்று நினைக்கிறாயே!" குயவருக்குத் தவறு புரிந்தது.

❋❋❋

➻ **அன்பின் சிந்தியா, கழுதை தேய்ந்து கட்டெறும்பாதல் என்பதை விளக்குவீர்களா?**

எம்.பைசுல், கரம்பை.

நம்ம தீர்வுத் திட்டத்திற்கு நடந்த கதைக்குத் தனியாக விளக்கம் வேறென்ன?

❋❋❋

➻ **மனம் சோர்வடையும் போது என்ன செய்யலாம்?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

ஜோக்குகள் எதையாவது நினைத்துச் சிரிக்க முயன்று பார்க்கலாம். இதோ ஒன்று:

சாராயத்தைக் குடித்து உடம்பைக் கெடுத்துக் கொண்ட ஒருவன் டாக்டரிடம் போய்க் காட்டினான். டாக்டர் நெஞ்சில் ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பார்த்தார். கண்ணுக்கு லைட் அடித்துப் பார்த்தார். பிறகு கேட்டார்:

"ஒண்ணுக்குப் போனா எரியுதா?"

அவன் சொன்னான்: "இன்னும் அதை நான் சோதித்துப் பார்க்கேல்லை. அடுத்த தடவை பத்த வைச்சுப் பார்த்திட்டுச் சொல்றன் டாக்டர்."

❋❋❋

➻ **'உலகில் ஏழல்ல அதிசயங்கள். வாய் பேசும் பூவே நீ எட்டாவது அதிசயமே' (ஜீன்ஸ்); 'உலகத்தில் உள்ள அதிசயம் எட்டு உன்னையும் சேர்த்து' (தை பொறந்தாச்சு) இன்றைய சினிமாப் பாடல்களைக் கேட்கும் போது, கற்பனைக்கு பஞ்சம் ஏற்பட்டது போல் தோன்றுகிறதே?**

எம்.ஏ.வாதுலன், ஒட்டமாவடி.

அது கற்பனைக்குப் பஞ்சம் இல்லை. ஆணுக்குப் பெண் எப்போதும் எட்டாத அதிசயமாகவே இருப்பதால் வரும் குழப்பம்.

❋❋❋

➻ **வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்று சொன்னார்கள். நான் சிரித்துப் பார்த்தேன். பல்வலி அதிகரித்ததே தவிர நோய் போகவில்லையே...?**

பெ.கோகிலன், மேபீல்ட் ஹட்டன்.

வாய் விட்டுச் சிரித்தல் என்பது வாயை மட்டும் இளித்து வைப்பதில்லை. உடம்பு முழுவதும் வியாபிக்கும் மகிழ்ச்சியை ஒரே ஓர் இடத்தில் காட்டுவதுதான் சிரிப்பு. பல்லில் நோ வருகிறதென்றால், நீங்கள் இசகு பிசகாகச் சிரிக்கிறீர்கள் என்று அர்த்தம்!

❋❋❋



➻ **தேர்தலில் எப்படி வென்றார்கள் என்பதை விட்டு, வென்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத்தான் பார்க்க வேண்டும் என்றீர்களே சிந்தியா, எப்படி வென்றாலும் சரிதானா?**

எஸ்.குருபரன், யாழ்ப்பாணம்.

தப்புதான். ஆனால் மட்டக்களப்பில் ஒருவர், வாக்கு எண்ணுகிற சமயத்தில் ஐந்தாறு லட்சத்தைச் செலவழித்து, தான் எம்.பி.யாவதை உறுதிப்படுத்தியிருக்கிறார். வவுனியாவில் புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் இருந்தபோது, மக்களிடம் வரி, கப்பம், வசூலில் அவர் மன்னன் என்றார்கள். அவர் இருந்தபோது நடந்த தேர்தலில் அவர்களுக்கு மூன்று எம்.பி.க்கள்; இப்போது புளொட் 'அது' விஷயத்தில் பலவீனமாக, ரெலோ கையே ஓங்கியிருக்கிறது. இப்போது ரெலோவுக்கு மூன்று எம்.பி.க்கள்.

யாழ்ப்பாணத்தில் கள்ளக் கையெழுத்து மோசடியில் சிறை சென்றவர், கப்பல் விட்டு மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த வரையெல்லாம் மக்கள் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். என்னை என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?

❋❋❋

➻ **நான் சுமாராகப் பாடுவேன். சில பாடல்களும் எழுதி வைத்திருக்கிறேன். யாராவது ஒரு இசையமைப்பாளரைக் கொண்டு இசையமைத்து என் பாடல்களை கஸற்றாக வெளியிட விரும்புகிறேன். சினிமாப் பாடல்களைப் போல் 'றிச்'சாக இருக்க வேண்டுமென்பதால், தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் ஒருவர் இசையமைப்பிலேயே பாட விரும்புகிறேன். யாரை அணுகலாம். எவ்வளவு செலவாகும். சிந்தியாவுக்குத் தெரியுமா?**

ரீ.பிரசாந்தன், கொழும்பு-06.

இன்றைய நம்பர் 1 ஏ.ஆர்.ரஹ்மான் ஒரு பாடல் பதிவுக்கு இரண்டு முதல் இரண்டரை லட்சம் வரை செலவழிக்கிறார். இளையராஜா ஒரு லட்சம்? தேவா, எஸ்.ஏ.ராஜ்குமார் போன்றோர் 50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரை. கஸற் என்றால் குறைந்தது ஆறுபாடல்களுக்கு கணக்கைப் பெருக்கிப் பாருங்கள். கட்டுப்படியாகுமென்றால் ஒரு நடை தாராளமாகப் போய் வாருங்கள்!

❋❋❋

➻ **ஆண்கள் புத்திசாலியான பெண்களையே விரும்புவது ஏன்?**

ஐ.எஸ்.பிரிட்டி, கித்துள்.

எதிராக இருப்பதுதான் எப்பவும் கவர்ச்சி!

❋❋❋

➻ **காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்களும் கடைசியில் விவாகரத்து என்று போய்விடுகிறார்களே?**

வி.சுஹாசினி, திருப்பழுகாமம்-01.

விவாகரத்துகளை விசாரிக்கும் நீதிபதி ஸெல்பி என்பவர் சொன்னது இது: "நல்ல காலமாக காதலுக்குக் கண்ணில்லை! இல்லாவிட்டால் எங்களுக்கு வேலையல்லவா போய்விடும்!"

❋❋❋

# ஸ்போர்ட்ஸ்

## 300 கிளப்பில் டொனால்ட்



தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் 300 டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, 300 விக்கட்டுக்களை வீழ்த்திய பந்துவீச்சாளர்கள் கிளப்பில் இணைந்துள்ளார்.

நியூஸிலாந்து அணிக்கெதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட்டின் மூன்றாவது நாள் ஆட்டத்தின் போது, நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் 'ஓ' கொனரின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் 300வது விக்கெட்டை வீழ்த்தி, 300 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றிய 15வது வீரராகத் தன்னை இணைத்துக் கொண்டார்.

தென்னாபிரிக்க அணி சார்பாக 300 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதலாவது பந்துவீச்சாளர் என்ற சாதனை படைத்துள்ள டொனால்ட்டிற்கு 34 வயது.

"250 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றியதும் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விடுவேன்" என முன்பொரு தடவை கூறிய டொனால்ட், இப்போது 2003ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பைப் போட்டிக்கு பின்னர் ஓய்வு பெறவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். ▫

## முதல் டெஸ்டில் மோதும் ஆஸி. அணி



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்திருக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணி, அவுஸ்திரேலியாவுடனான முதல் டெஸ்ட் போட்டியை நவம்பர் 23ம் திகதி ஆரம்பிக்கிறது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி சார்பாக வேகப்பந்து வீச்சாளர் டேமியன் பிளேமிங் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் ஆகியோர் இடம்பெறவில்லை.

இருவருக்கும் விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வெடுத்து வருகிறார்கள். அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு குணமடைந்து வரும் இவர்கள் இருவரும் அடுத்தடுத்த டெஸ்ட்களில் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் டெஸ்டில் ஷேன் வோர்னுக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் ஸ்ருவர்ட் மக்கில்லும், பிளேமிங்கிற்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரூ பிக்கிளும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

முதல் டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகளுடன் மோதும் அவுஸ்ரேலிய அணி வீரர்கள் பற்றிய விவரம் வருமாறு?

ஸ்டீவ் வோவ்(கப்டன்), அடம் கில்கிறைஸ்ட் (விக்கெட் கீப்பர்) மைக்கல் ஸ்லேட்டர், மத்தியூ ஹெய்டன், ஜஸ்டின் லாங்கர், மார்க் வோவ், ரிக்கி பொண்டிங், பிரெட் லீ, ஜேசன் கிலெஸ்பி, ஸ்ருவர்ட் மக்கில், கிளென் மக்ராத், கொலின் மில்ஸர், அன்ட்ரூ பிக்கிள். ▫

# மன்னாதி மன்னன் 33

## பெண்ணாக மாறிய ஆண்கள்!

அமைச்சர் பட்டி அழகான பெண் வேடம் பூண்டு காத்திருந்தான். வெள்ளிக்கிழமை காலையில் சண்பகவல்லி தனது தோழிகளுடன் வந்து சேர்ந்ததும், பெண் வேடம் பூண்ட பட்டியும்-தோழிகளில் ஒருத்தியாக அவர்களுடன் போய் சேர்ந்து கொண்டான்.

எல்லோரும் குளத்திலிறங்கி நீராடினார்கள்.

நீராடி முடிந்ததும், எல்லோரும் சத்திரத்தையடைந்தனர். அவர்களுக்காக சத்திரத்தில் தயாரிக்கப்பட்டிருந்த உணவினை உண்டுவிட்டு, சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து சொக்கட்டான் ஆடத் தொடங்கினார்கள். அங்கிருந்த சண்பகவல்லியோ ஏனைய தோழிப் பெண்களோ பட்டியை ஒரு அன்னியப் பெண் என்று கருதவேயில்லை. எனவே, பட்டி இளவரசி சண்பகவல்லியின் ஆட்டக் குழுவில் சேர்த்து கொண்டனர்.

மாலையானதும் அரண்மனைக்குச் செல்ல ஆயத்தமானார்கள். தோழியருடன் பட்டியும் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான். இவற்றையெல்லாம் ஒரு மரத்தின் பின்புறமிருந்தவண்ணம் மாறு வேடத்திலிருந்த விக்கிரமாதித்தன் கவனித்துக் கொண்டிருந்தார்.

அரண்மனை சென்று சண்பகவல்லிக்குரிய தனியான அந்தப்புரத்தை நோக்கி சண்பகவல்லியும் தோழிகளும் சென்றனர். அந்த அந்தப்புரத்தின் வாயிலில் நின்ற பெண் காவலர்கள், இளவரசி சண்பகவல்லியையும் மற்றும் நான்கு தோழியரை மட்டும் அந்தப்புரத்தின் உள்ளே அனுமதித்தனர். வெளியில் விடப்பட்ட தோழிப் பெண்களுடன் சேர்ந்து திரும்பிய பட்டி எங்கு செல்வதென்று தெரியாமல் காளி கோயில் சென்று அம்பாளை வேண்டுவதற்குத் திட்டமிட்டான். சண்பகவல்லி ஆண்களை வெறுப்பதற்கான உண்மையான காரணத்தை அறியாமல், அவன் விக்கிரமாதித்தனிடம் போக விரும்பவில்லை. காளி கோயில் செல்லும் வழியில் இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தடியில் பட்டி சற்று நேரம் படுத்திருந்தான். அப்போது தன்னுடைய பெண் வேடத்தை மாற்றி, ஆண் உருவெடுத்தே படுத்திருந்தான்.



அந்தக் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த ஒரு முனிவர் நீராடுவதற்காக அந்த வழியால் வந்து கொண்டிருந்தார். மரத்தினடியில் அழகிய வாலிபன் ஒருவன் படுத்திருப்பதைக் கண்ட முனிவர், அந்த அழகனை தன்னுடைய மனைவி காண நேர்ந்தால், அவன் மீது மனைவி மோகமுற்றுவிடக் கூடும் என்று பயந்தார்.

அந்தக்காட்டில் புகுந்து ஒரு மூலிகையைப் பிய்த்தெடுத்துக் கொண்டு வந்து, ஒரு மந்திரத்தைச் சொல்லி அவருடைய கமண்டலத்திலிருந்து தீர்த்தத்தையெடுத்து பட்டியின் மீது தெளித்துவிட்டார். அப்போது அழகிய ஆணாகப் படுத்திருந்த பட்டி பெண்ணுரு எடுத்தான். முனிவருக்கு பின்னால் நீராடுவதற்காக வந்துகொண்டிருந்த மனைவி, ஓரழகிய இளமங்கை படுத்திருப்பதைக் கண்டாள். தனது கணவர் நீராடிவிட்டு திரும்புகையில் இந்த அழகிய மங்கையைக் கண்டு, தன்னை மறந்துவிடுவார் என்று பயந்தாள். காட்டுக்குள் புகுந்து மற்றொரு மூலிகையை தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து பெண்ணுருவில் படுத்திருந்த பட்டி மீது போட்டு மந்திரமொன்றை உச்சரித்தாள். உடனடியாக பட்டி பழையபடி ஆணுரு கொண்டான்.

முனிவரும் அவர் தம் மனைவியும் மாறி மாறி தன்மீது போட்ட மூலிகைகளையும் பட்டி தூங்குவது போல் நடித்து, அரைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் சொன்ன மந்திரங்களையும் தன் மனதில் பதித்துக் கொண்டான்.

காளிதேவியின் அருளினால்தான் இந்த மூலிகைகளும் மந்திரமும் தனக்குக் கிடைத்தன என்று பட்டி எண்ணினான். அங்கிருந்து விக்கிரமாதித்தனைத் தேடிச்சென்றான். நடந்த சம்பவங்களையும் விக்கிரமாதித்தனிடம் விவரமாகக் கூறினான். எப்படியாவது சண்பகவல்லி வசிக்கும் மாளிகையினுள் செல்ல வேண்டுமென இருவரும் திட்டமிட்டனர்.

தன்னிடமிருந்த மூலிகையைக் கொண்டு விக்கிரமாதித்தனை பெண்ணுருவாக்கினான். விக்கிரமவல்லியென்று பெயரும் சூட்டினான். பட்டி தன்னை ஓரரசன் போல் உருமாற்றிக் கொண்டு சல்லியராஜன் என்று பெயர் சூட்டினான். இருவரும் அந்த நாட்டரசன் விஜயரங்கனின் மாளிகைக்குச் சென்றனர். அரசனிடம், தான் வீமாபுரி என்ற நாட்டையாளும் சிற்றரசன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். தனது மனைவியான விக்கிரமவல்லி, மன்னாதிமன்னன் விக்கிரமாதித்தனின் தங்கையென்று பொய் கூறினான். வருடா வருடம் தான் விக்கிரமாதித்த மன்னனுக்கு ஆயிரம் பொன் கப்பம் செலுத்தி வருவதாகவும் கடந்த சில வருடங்களாக தனது நாட்டில் மழை பொய்த்துவிட்டமையினால், நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதென்றும், அந்த வருடத்துக்குரிய கப்பதைச் செலுத்துவதற்கு முடியாதிருப்பதாகவும் கூறினான்.

விக்கிரமாதித்தனிடம் தன்னுடைய நிலையை எடுத்துக் கூறியும், எப்படியாவது கப்பம் கட்டியேயாக வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான், என்று சொல்லிய பட்டி தன்னுடைய மனைவி விக்கிரமவல்லியை அடைமானமாக வைத்துக் கொண்டு ஓர் ஆயிரம் பொன் கடனாகக் கொடுத்தால், கூடிய விரைவில் பணத்தைத் தேடி திருப்பித் தந்துவிட்டு மனைவி விக்கிரமவல்லியை மீட்டுக் கொள்வதாக தெரிவித்தான்.

மன்னனும் சல்லியராஜன் வேடத்திலிருந்த பட்டியிடம் அவன் கேட்டுக் கொண்டபடி ஆயிரம் பொன்னை கொடுத்தான்.

விக்கிரமவல்லி வேடத்திலிருந்த விக்கிரமாதித்தனை தன் மகள் சண்பகவல்லி வசிக்கும் அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்று சிலகாலம் வரை விக்கிரமவல்லியை அவளுடன் வைத்திருக்கும்படி கூறினான்.

ஆயிரம் பொன்னை மன்னன் விஜயரங்கனிடமிருந்து பெற்றுக் கொண்ட பட்டி, அப்பணத்தை ஒரு மரப் பொறையில் பத்திரமாக வைத்துவிட்டு அம்மரத்திலிருந்த அணிலொன்றின் உயிரைப் போக்கிவிட்டு, தனக்குத் தெரிந்த கூடுவிட்டு, கூடு பாயும் மந்திரத்தை உச்சாடனம் செய்து தன்னுயிரை அணிலின் உடலுக்குள் புகுத்திக் கொண்டான். உயிரற்ற தனதுடலை வேதாளத்திடம் ஒப்படைத்து பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, சண்பகவல்லியின் அந்தப்புரத்தை நோக்கி ஓடிச் சென்றான்.

சில நாட்கள்வரை அந்த அரண்மனையிலேயே இருந்துகொண்டு சண்பகவல்லிக்கும், விக்கிரமவல்லி உருவிலிருந்த, விக்கிரமாதித்தனுக்குமிடையில் நடைபெறும் உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். இருப்பினும், ஆண்வாடையே பிடிக்காத சண்பகவல்லி அதற்கான காரணத்தை விக்கிரமவல்லியிடம் கூறவேயில்லை.

சண்பகவல்லி உறங்கும் நேரத்தில் அணிலுருவாக-மாறியிருந்த பட்டியிடம் விக்கிரமவல்லி கலந்துரையாடிக் கொள்வாள்.

அடுத்தநாள் காலையில் பட்டியின் ஆலோசனைப்படி விக்கிரவமல்லி தன் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டிருந்தாள்.

அவ்வாறு சோகமாக இருப்பதற்கு காரணம் என்னவென்று சண்பகவல்லி விக்கிரமவல்லியிடம் கேட்டாள். அப்போது விக்கிரமவல்லி, "நான் உன்னோடு மிக நெருக்கமாகப் பழகி வருகிறேன். ஆனால் நீயோ உன்னைப் பற்றி எதுவுமே கூறாதிருக்கிறாய். நீ உரிய காலத்தில் மணம்முடித்து இந்த இராஜ்ஜியத்தை ஆள்வதற்கு உரிய வாரிசினைப் பெற்றெடுத்துக் கொடுக்க வேண்டுமல்லவா? உன் தந்தைக்கும் வயதாகிக் கொண்டு வருகிறது. நீ மணமுடிக்காமல் இருப்பதனால் உன் தந்தை மிகவும் கவலையடைகிறார். நீ ஆண்களை விரும்பாமல் இருப்பதற்கான காரணத்தை என்னிடம் கூற மாட்டாயா?" என்று கேட்டாள்.

ஆனால் சண்பகவல்லி எதுவுமே கூறவில்லை.

"நான் இவ்வளவு எடுத்துச் சொல்லியும் நீ என்னை வேற்றுமையாக நடத்துகிறாய். இவ்வாறு தான் முன்பு இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்களின் கதையைக் கூறுகிறேன். அதன் பின்னராவது நீ ஆண்களை வெறுப்பதற்கு என்ன காரணம் என்பதை என்னிடம் கூற வேண்டும்!" என்று கூறிய விக்கிரமவல்லி கதையைக் கூறத் தொடங்கினாள்.

### இரண்டு நண்பர்களின் கதை

சதுரபுரி என்ற நகரத்தை சைந்தவன் என்னும் மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுடைய அமைச்சனின் பெயர் முகுந்தன்.

நீண்டகாலத்தின் பின்னர் மன்னன் சைந்தவனுக்கு ஒரு மகன் பிறந்தான். சித்திரசேனன் என்று தன் மகனுக்கு பெயர் சூட்டினான். அவனுக்கு ஐந்துவயது நிரம்பியதும் அவனை ஒரு பள்ளி கூடத்தில் சேர்த்து விட்டனர்.

சித்திரசேனனின் வகுப்பில் வேடுவ குலத்தைச் சேர்ந்த அதே வயதுடைய சிறுவன்

**இராஜகுமாரன்**

ஒருவனும் சேர்ந்து படித்தான். அவனுடைய பெயர் வில்லியசிங்கன். இவர்களிருவரும் இணைபிரியாத சிநேகிதர்களானார்கள். பதினாறு ஆண்டுகள் வரை ஒன்றாகவே படித்தபின்னர் இருவரும் பிரிந்தனர்.

சில வருடங்களில் மன்னன் சைந்தவன் வயதாகிவிட்டமையினால், மகன் சித்திரசேனனுக்கு பட்டம் சூட்டினான். அதன் பின்னர் மன்னனும் இறந்துவிட்டான்.

மன்னனாகிவிட்ட சித்திரசேனன் தன் பள்ளித் தோழன் வில்லியசிங்கனை மறந்துவிட்டான்.

வில்லியசிங்கன் செய்யும் தொழில் எதுவுமில்லாமல் வறுமையில் வாடினான். தன்னுடைய பாலிய நண்பனான சித்திரசேனனிடம் சென்று ஓர் உத்தியோகம் தரும்படி கோரலாம் என்ற நோக்கத்துடன் மன்னனைப் பார்க்க அரண்மனைக்குச் சென்றான். அவனை அரண்மனைக்குள் அனுமதிக்க காவலர்கள் மறுத்துவிட்டனர்.

(மன்னன் வருவான்...)

## சர்தார்ஜி ஜோக்ஸ்



சர்தார்ஜி ஒருவர் தன் நண்பரிடம் படித்துவிட்டு திருப்பித் தருவதாகச் சொல்லி ஒரு புத்தகத்தை இரவல் கேட்டார்.

"வீட்டிற்கெல்லாம் எடுத்துக்கொண்டு போகக் கூடாது. இங்கேயே உட்கார்ந்து படித்து விட்டுச் செல்வதானால் தருகிறேன்!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார் சர்தார்ஜியின் நண்பன்.

மனத்தாங்கலுடன் வெளியேறினார் சர்தார்ஜி.

இதன் பின் சில நாட்கள் கழித்து, அதே நண்பன் சர்தார்ஜியிடம் வந்து, தோட்டத்தைச் சீர் செய்ய வேண்டுமென்று சொல்லி, மண் வெட்டியை இரவல் தருமாறு கேட்டான்.

"வீட்டிற்கெல்லாம் எடுத்துப் போகக் கூடாது. இங்கேயே உட்கார்ந்து கொத்திவிட்டுச் செல்வதானால் சரி!" என்றார் சர்தார்ஜி.

☆●☆

சர்தார்ஜி ஒருவரின் மகன் பாடசாலை ஒன்றில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் சர்தார்ஜியின் மகனுக்கும், அனில் என்ற இன்னொரு மாணவனுக்கும் தகராறு ஏற்பட்டது.



சர்தார்ஜியின் மகன் அனிலின் மூக்கைக் கடித்து விட்டான். இந்த விஷயம் அதிபர் காதுக்குச் சென்றது. தான் கடிக்கவில்லை என்று சாதித்தான் சர்தார்ஜியின் மகன்.


"பின்னே அனிலின் மூக்கை யார் கடித்தது?" என்று கேட்டார் அதிபர்.

"அனில் அவனது மூக்கை அவனே கடித்து விட்டு என்மேல் பழி போடுகிறான் நம்பாதீர்கள் சேர்!" என்றான் சர்தார்ஜியின் மகன்.

"ஏண்டா பொய் சொல்கிறாய்? அவன் மூக்கை அவனே எப்படிக் கடிக்க முடியும்? மூக்கு அவனது வாய்க்கு மேலல்லவா இருக்கு. எப்படி எட்டும்?" என்று கேட்டார் அதிபர்.

"அது ஒரு கஷ்டமா? ஒரு கதிரை மேல் ஏறி நின்று கடிச்சிருப்பான்!" என்றான் சர்தார்ஜியின் மகன்.





பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lanka.com/arul
436337


# சபாஷ்! சரியான போட்டி!!






SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


→ பண்டைக்காலத்தில் உரோம ராஜ்ஜியத்தில் வாழ்ந்த பிரபுக்களும், பிரமுகர்களும்-ஏன் ஆட்சியாளர்களும் கூட, பல வகையான விளையாட்டுகளைப் பார்த்து பொழுது போக்குவார்களாம். கொடிய வனவிலங்குகளுடன் மனிதர்களையே சண்டைப் போட வைத்து, மிருகங்களால் மனிதன் இம்சைபடுத்தப்படும் காட்சிகளைப் பார்த்து இரசிப்பார்களாம். பிற்பட்ட காலங்களில் மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற விளையாட்டுக்கள் இடம் பிடித்தன.

இப்போதெல்லாம் கிரிக்கெட், உதைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளை கோஷ்டிகளாகப் பிரிந்து நின்று விளையாடுவதைப் பார்த்து பல்லாயிரக்கணக்கான இரசிகப் பெருமக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். ஆனால் இத்தகைய விளையாட்டுக்களும் கூட நவீன யுகத்தில் பழமையானவை என்று ஒதுக்கப்படும் காலம் வந்து விட்டது.

படத்தில் நீங்கள் பார்ப்பது ரொபோக்கள் (இயந்திர மனிதர்கள்) உதைப்பந்தாட்டப் போட்டியில் இறங்கியிருப்பதைத்தான். பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் இயந்திர மனிதர்களுக்கிடையிலான உலக ளாவிய உதைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டி கடந்த வருடம் நடைபெற்றதை பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் பார்த்து இரசித்தனர்.

இந்த வருடமும் பாரிஸ் நகரில் உலகின் பல்வேறு விஞ்ஞானக் கழகங்கள் உருவாக்கிய ரொபோக்களின் அறுபது அணிகள் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கு பற்றுகின்றனவாம்.



# கைகொடுக்கும் கருவி

# சின்னச் சின்னக் குருவி...



↑ உலகில் பலவகையான பறவை இனங்கள் இருந்தாலும் ஒன்றுக்கொன்று பல்வேறு வகையிலும் வித்தியாசமானவையாகவும் கூட இருக்கின்றன.

படத்தில் காணப்படும் இந்தச் சின்னக்குருவியின் பெயர் "சோகோ லைரியோ" என்பதாகும். மிக மிக அரிய இனத்தைச் சேர்ந்த இவை இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் உள்ளன.

பெரும்பாலும் கூர்க்கிளைகளை விட்டு விலகாத இந்தக் குருவியின் வால் தான் உலகிலுள்ள பறவையினங்களின் வால்களை விடக் குட்டையானது.

↑ பனிப்பாறைகளில் ஏறி சாதனை புரிவோருக்கு உதவுவதற்காக பலவகையான கருவிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அமெரிக்க கொலராடோ மாநிலத்திலுள்ள செங்குத்தான பனிப்பாறையொன்றில் சாமன்ப்பர் கொழுக்கிகளை இரு கைகளிலும் ஏந்தியவண்ணம் கிம் ரெகினோல்ட் என்ற மாது ஏறிக் கொண்டிருப்பதைப் படத்தில் பார்க்கிறீர்கள்.

2140 மீற்றர் உயரம் வரை கிம் இப்பாறையில் ஏறி விட்டார். பனிப்பாறைகளில் ஏறுவோருக்கு ஒத்தாசை புரியும் நோக்குடன் பலவகையான கொழுக்கிகளை தயாரித்துள்ளனர். இருப்பினும் அவற்றையெல்லாம் விட சாமன்ப்பராவ (கரி நாரினால்) வடிவமைக்கப்பட்ட கொழுக்கிகள் கடும் குளிரிலும், பழுக்கவில்லாத பனிப்பாறைகளிலும் பயன்படுத்துவோருக்கு பல சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது.



# ஆ... ஆ... ஆடை!

↑ இன்றைய உலகில் சுற்றுச் சூழலினால் ஏற்படும் விபரீத விளைவுகள் அணு ஆயுதங்களால் ஏற்படும் பேரழிவுகளை விடவும் ஆபத்தானவை.

சுற்றுச் சூழலால் மாசடையும் பிரதேசங்களில் தூய்மைப் பணி புரிய முன் வருபவர்களுக்கென ஆய்வாளர்கள் உற்பத்தி செய்துள்ள பாதுகாப்பு உடை ஒன்றினை கிராண்ட் லென்டன் என்பவர் அணிந்திருக்கிற காட்சி தான் இங்கு காணப்படுவது.

கொலராடோ மாநிலத்தில் டேன்வர் என்ற இடத்திலுள்ள சுற்றுச் சூழல் மாசகற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி மையத்தினரால் இத்தகைய உடை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எந்த வகை சூழலிலும் இந்த உடையை அணிந்து கொண்டு துப்பரவு பணியில் ஈடுபடும் எவருக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படாதபடி இந்த உடை பாதுகாப்பளிக்கிறது. முகமூடியுடன் கூடிய தலைக்கவசத்தை அணிந்து கொண்டால், அந்தக் கவசத்திலேயே சுவாசத்துக்கு வேண்டிய வசதிகளும் இணைக்கப்பட்டிருக்கும்.




திருகோணமலை-மணலைத்தீவைச் சேர்ந்த சந்திரகுமார் ஜெயா தம்பதியின் செல்வப் புதல்வன் ஹஜானன் தனது முதலாவது பிறந்த தினத்தை 27.11.2000 அன்று London Deptford ல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

## செல்வன் சந்திரகுமார் ஹஜானன்

ஹஜானனை அன்பு அப்பா, அம்மா, திருகோணமலையில் வசிக்கும் அப்பம்மா, கொழும்பில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார், மச்சான்மார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: எம்.சந்திரகுமார் (லண்டன்)

# வெண்புறாவே...



→ உள்ளாடையை மட்டும் உடுத்திக் கொண்டு உடலெங்கும் வர்ணப்பூச்சுக்களுடன் திகழும் இவர்கள் இருவரும் கொரியாவைச் சேர்ந்தவர்கள். நோபல் பரிசு தினத்தை முன்னிட்டு கடையொன்றிற்கு முன்னால் சமாதானத்தைக் குறிக்கும் வெண்புறாவை உடலில் வரைந்து கொண்டு நின்றார்கள்.